# ஞானச்சுடர்



மாசி

2017

230 ஆவது மலர்




வெளியீடு:

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர
செய்யா தமைகலா வாறு.

**பொருள்:** உபகாரகுணமுடையவன் வறியவனாதல் எவ் வகையில் என்றால் அவன் பிறர்க்கு உபகாரம் செய்ய முடியாத நிலைமையில் இருப்பதற்கு வருந்துவதாகும். (219)

ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.

**பொருள்:** உபகாரஞ் செய்தலால் பொருட்கேடு உண்டாகும் எனக் கூறுவாருளராயின், ஒருவன் தன்னை விற் றாயினும் அதனை வாங்குதல் மேலாகும். (உபகாரஞ் செய்தல் மிகப் புகழ்ச்சிக்குரியதாதலால் அதனை எவ் விதமும் செய்யவேண்டுமென்பது.) (220)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### பராபரக் கண்ணிகள் - 1



அன்னைதந்தை சுற்றம் அரிய சகோதரர்கள்
உன்னையன்றி யுண்டோ என்னுயிரே பராபரமே 01

ஆக்கையே கோயில் அகமே சிவலிங்கம்
பூக்கைகொண்டு போற்றவருள் புரியாய் பராபரமே 02

இருவினையால் கட்டுண்டு இடர்பட்டுத் திரிவேனைக்
கருணையா லாட்கொண்ட கண்ணே பராபரமே 03

ஈயாத புல்லர் இடந்தோறும் நாயடியேன்
வாயார வாழ்த்தி வாழவிட்டாய் பராபரமே 04

உன்னைப் பிரிவேனோ உயிர்நான் தரிப்பேனோ
என்னைப் பிரிவாயோ இறையே பராபரமே 05

ஊரும் பேருமில்லா ஒருவன் உலகத்திலே
ஆரென்று காட்டென்பார்க் கென்சொல்வேன் பராபரமே 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 | சுடர் - 230

2017 **பொருளடக்கம்** மாசி


| | | |
|---|---|---|
| சைவத்தின் காவலர்... | திருமதி ச. புனிதவதி | 01 -03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 -08 |
| மகாசிவராத்திரி... | கு. சோமசுந்தரம் | 09 -14 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 15 -17 |
| சித்தர்களும் அற்புதங்களும் | வி. பாலகிருஷ்ணன் | 18 -19 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 20 -22 |
| திருநீற்றொளியினில்... | கே.எஸ். சிவஞானராஜா | 23 -25 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 26 -27 |
| வெளிக்கவர்ச்சியே மனிதனின்... | பு. கதிரித்தம்பி | 28 -29 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 30 -31 |
| தொன்மைக்கோலம் | திருவாரூரன் | 32 -34 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 35 -36 |
| அர்ப்பணிப்புடன் கூடிய சேவை | சந்நிதியான் ஆச்சிரமம் | 37 -45 |
| திருமுறை பாடிப் பணிவோம் | திருமதி சி. யோகேஸ்வரி | 46 -47 |
| மாசிமகத்தன்று புண்ணிய... | எம்.பி. அருளானந்தன் | 48 -49 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 50 -55 |
| நேர்த்தி யான் செய்ய... | பொ. பாலேஸ்வரன் | -56 |
| கைதடி வீரகத்திப் பிள்ளையார் | ம. சிவயோகசுந்தரம் | 57 -60 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406**

**அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஞானச்சுடர் 2017 மாசிமலர்

# ஞானச்சுடர் தைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:

பத்தொன்பதாம் ஆண்டில் கால்பதிக்கும் தைமாத ஞானச்சுடர் மலரின் வெளியீட்டுரையினை ஆற்ற இருந்த செஞ்சொற்செல்வர் திரு ஆறு. திருமுருகன் அவர்கள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் வருகை தராதவிடத்து தைமாத மலர் சிறப்புப்பிரதி பெறுவதற்கு வருகை புரிந்த இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளரும் பிரபல எழுத்தாளரும் ஞானச்சுடர் வாசகருமாகிய திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

அவர் தமது உரையில் ஆச்சிரமம் ஆற்றும் பணிகளின் தராதரத்தை எடைபோட்டு அதன் பயனை கூடி இருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறியதோடு சிறப்புப்பிரதி பெற வந்த எனக்கு தைமாத மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆற்றுவதற்கு சந்தர்ப்பத்தை வழங்கிய சந்நிதி வேற்பெருமானின் பாதம் பணிவதோடு பேரவையினருக்கும் நன்றிகூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:

சந்நிதி வேலவனது பூரண அருளாசியோடு தொடர்ந்து இருநூற்றி இருபத்தெட்டு மாத காலமாக வெளிவந்து கொண்டிருக்கும் ஞானச்சுடர் தைமாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை புட்டளை மகா வித்தியாலய அதிபரும் சிறந்த சமயச் சொற்பொழிவாளரும், ஆன்மீகவாதியுமான திரு ஆ. சிவநாதன் அவர்கள் வழங்கினார்கள்.

சந்நிதியான் ஆச்சிரம பேரவையினூடாக தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கும் ஞானச்சுடரானது மிகவும் போற்றுதற்குரிய மலர் என்றும், அதில் இடம்பெறும் விடய தானங்களின் தன்மை எல்லோராலும் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலும் இடம்பெறுவது ஒரு முன்மாதிரியான செயற்பாடு என்று கூறியதோடு மலரின் முதலாவது மலர் தொடக்கம் இன்றுவரை தைமாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை ஆற்றுவதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்கும் சந்நிதி முருகனுக்கும், ஆச்சிரம சுவாமி அவர்கட்கும் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்ததோடு மலரில் இடம்பெற்ற கட்டுரைகளின் கருத்தை கூடியிருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

"ஞானச்சுடர்" மலரின் 231ஆவது பங்குனி மாத இதழ் ஒரு வித்தியாசமான முறையில் "**வாசகர் சிறப்பிதழ்**" ஆக வெளிவர உள்ளது என்பதை அறிவிப்பதில் பேரவை பெருமகிழ்வு கொள்ளுகிறது.

1998 தை மாதம் ஆரம்பமான "ஞானச்சுடர்" ஆன்மீக இதழ் 20ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் இந்நன்னாளில் நாம் அறிவிக்கும் "வாசகர் சிறப்பிதழ்" முற்றிலும் வித்தியாச மானது.

ஞானச்சுடரின் 100, 150, 200, 225ஆவது மலர்கள் கூடிய பக்கங்களுடனும் - விசேட கட்டுரைகளுடனும் - சிறப்பு மலர்களாக வெளிவந்தமையை வாசகர்கள் அறிவீர்கள்.

மலரின் ஒருசில பதிப்புகளில் ஒருசில வாசகர்களின் கடிதங்கள் மட்டுமே பிரசுரமாகி இருந்தமையும் நீங்கள் அறிந்ததே. அதிகமான வாசகர்களுடன் நமது தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளாமை ஒரு குறைபாடாகவே நம் மனதில் நெருடலைக் கொடுத்து வந்தது. இதை நிவர்த்திக்கும் ஏற்பாடே இந்த "**வாசகர் சிறப்பிதழ்**" வெளியீட்டிற்கான அறிவிப்பாகும்.

ஞானச்சுடரின் கவிதைகள், கட்டுரைகள் மூலமாக வாசகர்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்கள், அறிவுபூர்வமாகத் தோன்றிய கருத்துக்கள் ஆகியவற்றை கடித ரூபத்தில் (கட்டுரைகளாக அல்ல) மலரின் ஒருபக்கத்திற்கு மேற்படாமல், மாசிமாத இறுதிக்குள் எமக் குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புமாறு அன்பார்ந்த வாசகர்களைக் கேட்டுக்கொள்கின் றோம்.

உங்களது அபிப்பிராயங்கள் - விமர்சனங்கள் - ஆலோசனைகள் என்பன எதிர்காலத்தில் ஞானச்சுடரின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருக்கும். அதனால், தயக்கம் எதுவுமின்றி எழுதுங்கள். கடிதத்தில் முழுமையான விலாசமும், தொலைபேசி இலக்கமும் தவறாது குறிக்கப்படவேண்டும்.

இந்த வாசகர் சிறப்பிதழில் வழமையான நமது கட்டுரையாளர்கள், கவிதையாளர் கள், வெளியீட்டுரை - மதிப்பீட்டுரை வழங்குவோர் தயவுசெய்து பங்குகொள்ள வேண்டாம். ஆனாலும் "**வாசகர் சிறப்பிதழ்**" சார்ந்த தங்களது பெறுமதிமிக்க ஆலோசனைகளைப் பேரவை வரவேற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர் 2017 மாசி மலர்

## செல்வச் சந்நிதியானின் அருள்கரமென்றுமே நிஷ்டை தரும்

நிலமிசை கற்பகமாய் நிறைந்த வரானந்த பூரணனே!
நிர்மலகாரத்து நிற்குணமாய் தத்துவ வித்தகப் பொருளே
நீர்மிசை யொளியாய் நிரஞ்சனமாகி யென்றும்
நிருமிதப் படவொளி வேலால் அருள்கரம் காட்டினாய் போற்றி!

பிரமமாயான வொளியாகி நின்மலர் பாலனாய் நின்றாயே!
தாரணியாதித் தத்துவ மெலாங் கடந்த குழந்தை வேலா
வரமெலாந்தரும் வள்ளலாய் யோகமாய் நின்ற பாலா
பரமனாகிய ஆறெழுத்துடன் பதமலர் கொடுத்தருளுவாய் போற்றி!

என்றும் நீங்குறாத் திருவேலுடன் பொருதுவீழப்பணி நீக்கிவருவாயே
ஒன்றும் நின்றுணரத் தகாதெமை அருள்பார்வை காட்டியாள்வாயே
துன்றும் யோகியர் போகியர் வேண்டும் சுகமளிப்பாயே
சென்றும் சேராதார்க்கும் நின்பதம் என்றும் அளிக்கும் வேலே போற்றி!

ஏகபோகனாய் அனைத்துயிர்க்கு முயிராய்நின்றருள் புகட்டியருளும்
இலகு ஞானியர்தமைச் சேராவுழலுறும் தெய்வ நற்பேறான தெய்வமே
பலவுமாய்ப் பலப்பிரமமா யுழருமடியார்க்கு என்றும் ஞான
திலகமாகி யுன்பதம் வேண்டும் குருபரனே வேலேபோற்றி!

சகலலோகமும் படைத்தளித் தெமையாண்டருளிய செல்வக்குமரனே
அகில லோகத்தும் புகழ் கொண்டுயர் தனக்கமைவான சந்நிதிக் கூத்தனே
புகலுமோவுன் மருவடிவான ஆறுதிருவதனங்களும் இங்குற்றதே ஞான்றும்
பரமேஸ்வரன் மைந்தா பார்வதிசீலா அகிலலோகமு மானவனே போற்றி!

உகத்துக்கு ஆதியாய் தேவருக்கு ஆதியாய் என்றுமுலாவாச் சரீர
சுகத்திற்கு ஆதியாய் சுரர்களுக்கு ஈசராய் தானச்சுடரும்
அகத்துக்கு ஆதியாய் கணங்களுக்குத் தேவனாய் தினம்
நினைத்துக்கொள் மனத்திற்கு ஈசனான வேலே போற்றி! போற்றி!!

-திரு க. தெய்வேந்திரம் அவர்கள்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**M. இந்துசேகரம்**
(அவுஸ்திரேலியா)
**சிவபாலன் சுந்தரமூர்த்தி**
(சுவிஸ்லாந்து)
**N. கதிர்காமநாதன்**
(கொழும்பு)
**திருமதி. த. சுரேந்திரநாதன்**
(இளை. அதிபர், மயிலியதனை, தொண்டைமானாறு)
**செ. நவரெத்தினராசா J.P**
(கப்பூது, குப்பிளான்)
**ந. யோகேஸ்வரன்**
(பாடசாலைவீதி, கோண்டாவில்)
**அதிபர்**
(யா/ தொண்டைமானாறு வீ. ம. வித்தியாலயம்)
**த. இராசேஸ்வரன்**
(இராஜ உதயம், அல்வாய்)
**செல்வி கு. அஸ்வினி**
(சுண்டுக்குளி)
**தலைவர், செயலாளர்**
(வேவிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)
**சி. பத்மநாதன் J.P**
(உப தவிசாளர், நகரசபை, பருத்தித்துறை)
**சி. சிவம்**
(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி)
**வ. நந்தகுமார்**
(அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு)
**T. பாக்கியம்**
(கந்தர்மடம்)
**நா. பவளம்**
(அச்சுவேலி)
**திருமதி தேவதாஸ் தயானி**
(அச்சுவேலி)
**செல்வி குருசாமி சோதிநாயகி**
(யாழ்ப்பாணம்)
**கணேசகுலசிங்கம் துஷிகரன்**
(அச்சுவேலி)
**பொ. இராமலிங்கமூர்த்தி**
(இளை. உதவி மின் அத்தியட்சகர், கரவெட்டி)

மாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. மகாலிங்கம் J.P**
(மலையன் தோட்டம், கொற்றாவத்தை)
**சு. சிவதாசன் G.S**
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)
**தலைவர், செயலாளர்**
(கலைவாணி சனசமூக நிலையம், தொண்டைமானாறு)
**உரிமையாளர்**
(ஜெயகிருஷ்ணா, K.K.S. வீதி, சுண்ணாகம்)
**ஐ. லோகஞானம்**
(அஞ்சல் அதிபர், சுண்ணாகம்)
**ஆ. விஸ்வலிங்கம்**
(இளைப்பாறிய ஓவசியர், கல்வியங்காடு)
**V. அரியராசா**
(இளை. வரை. வல்லுனர், தொண்டைமானாறு)
**கந்தசாமி தேவராணி**
(ஆணைக்கோட்டை)
**க. யோகேந்திரநாதன் G.S**
(தும்பளை, பருத்தித்துறை)
**உரிமையாளர்**
(ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம், யாழ்ப்பாணம்)
**செ. சந்திரமூர்த்தி**
(சந்திரா தொலைத்தொடர்பு நிலையம், உடுப்பிட்டி)
**சி. பஞ்சலிங்கம்**
(ஞானவைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு)
**செல்வி ஷாலினி தேவேந்திரா**
(ஒஸ்காவீதி, உரும்பராய்)
**இராசரெட்ணம் வசந்தன்**
(ஊரெழு மேற்கு சுண்ணாகம்)
**இ. குமாரதாசன்**
(இளை. பிராந்திய மருந்தாளர், இடைக்காடு)
**R. குலசிங்கம்**
(இளை. அதிபர், கோண்டாவில்)
**N.K. தங்கராசா**
(இளை. தபாலதிபர், புலோலி)
**இ. பாலகிருஷ்ணன்**
(முகமாலை)
**புஸ்பராஜா பத்மலோஜினி**
(கல்வியங்காடு, யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர் 2017 மாசிமலர்

**உரிமையாளர்**

(நாதன் மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)

**செ. செல்வரெத்தினம்**

(இளை. அதிபர், சுண்ணாகம்)

**த. விவேகானந்தன்**

(சியாமி பேபி நீட்ஸ், பருத்தித்துறை)

**இ. ஜெயபாலன்**

(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)

**மா. ந. பரமேஸ்வரன்**

(கந்தசுவாமி கோவிலடி, இணுவில்)

**பா. கேதீஸ்**

(உரும்பராய்)

**S. ஈஸ்வரன்**

(டச்சுவீதி, சித்தங்கேணி)

**ச. மதனகுமார்**

(சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்)

**கெ. தவராசா**

(விவேகானந்தர் வீதி, இணுவில்)

**வி. ந. ஸ்ரீதரன்**

(இளை. அதிபர், நீராவியடி, யாழ்ப்பாணம்))

**செ. செல்விகா**

(நாவலடி ஒழுங்கை, மானிப்பாய்)

**சி. இராசரத்தினம்**

(இராஜஸ்தான், சுதுமலை)

**வே. மதிபாலசிங்கம்**

(செட்டியதெரு, கரவெட்டி)

**நா. முருகையா**

(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)

**செல்வராசா பொன்னுத்துரை**

(கரந்தன், நீர்வேலி)

**விஸ்வலிங்கம் குகலிங்கம்**

(பண்ணாகம், சுழிபுரம்)

**மா. தேவகுரு**

(செட்டிவளவு லேன், இணுவில்)

**சசிகரன் கௌதமன்**

(அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செ. பாலச்சந்திரன்**
(கொக்குவில் மேற்கு, கொக்குவில்)
**இ. புவனேந்திரராஜா (பிள்ளையார்)**
(நெல்லியடி, கரவெட்டி)
**தி. பாலசுப்பிரமணியம்**
(பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்)
**ஆறுமுகம் கந்தையா**
(நீர்வேலி)
**நாகன் கிருஸ்ணபிள்ளை**
(கோண்டாவில்)
**சி. கந்தையா**
(சுண்ணாகம்)
**K. விஷ்ணுமோகன்**
(உரும்பராய் கிழக்கு)
**பொ. சிற்றம்பலம்**
(கொடிகாமம்)
**ச.க. தம்பு**
(அல்லாரை, மீசாலை)
**சிதம்பரநாதன் ஸ்ரீகரன்**
(புத்தூர்)
**நாகராசா சாந்தி**
(அச்சுவேலி)
**க. ரட்ணேஸ்வரன்**
(சங்கானை)
**க. கிருஷ்ணேஸ்வரக்குருக்கள்**
(ஆனைக்கோட்டை)
**திருமதி விஜயலட்சுமி இராசநாயகம்**
(வட்டுக்கோட்டை)
**திருமதி செல்வநாயகம்**
(வடலியடைப்பு)
**திருமதி சீதாதேவி இந்திரன்**
(யா/ கச்சாய் அ.த.க. பாடசாலை, மீசாலை)
**உரிமையாளர்**
(சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தின் காவலர்

# ஆறுமுகநாவலர்

– திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் –

அந்நியர் ஆட்சிக் காலத்தில் குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் எம் மக்களிற் பலர் மேலைநாட்டு வாழ்க்கை முறையில் சிக்குண்டு தவித்தனர். தம் மதம், மொழி, கலாசாரம், பண்பாடு அனைத்தையும் தொலைத்து தம் அடையாளத்தை இழந்து அல்லற்பட்டனர். ஆங்கிலக் கல்விக்காகவும் வேலை வாய்ப்புக்காகவும் பலர் மதம் மாறினர். இத்தகைய அவல நிலையில் இருந்து நம் மக்களைப் பாதுகாக்க - அந்நிய மாயையில் மயங்கிய அவர்களை மீட்டெடுக்கத் தோன்றிய ஞான ஒளியே நல்லை நகர் தந்த நாவலர் பெருமான் ஆவார். ஈழம் வாழ் தமிழ் இனத்தின் மிக நெருக்கடியான காலத்தில் அவர்களுக்கு வழிகாட்டியாக, கலங்கரை விளக்கமாக விளங்கிய பெருந்தகையாளர்.

இவர் சைவத்தையும் தமிழையும் தன் இரு கண்களாகப் போற்றியவர். சமயத்தை வளர்க்க அவர் ஆற்றிய பணி தமிழைச் செழுமைப்படுத்தியது. தமிழ்மொழி வளர்ச்சிக்காக அவர் செய்த சேவைகள் சைவத்தை வளப்படுத்தின. சமயம் தமிழ் ஆகிய இரண்டினதும் வளர்ச்சி எம் இனத்தின் எழுச்சிக்கு-உயர்ச்சிக்கு வித்திட்டது. தனி ஒருவராக தலைநிமிர்ந்து நின்று அவர் சமயத்திற்கும் தமிழுக்கும் ஆற்றிய சேவைகள் எவராலும் நினைத்துப் பார்க்கமுடியாத ஒரு இமாலயச் சாதனையாகும். தனது 13ஆவது வயதிலேயே சைவத்தின் தளர்ச்சியைக் கண்டு கலங்கினார். இதனை நிவர்த்திக்குமாறு சிவனை வேண்டி வெண்பா பாடிய சமயப் புரவலர் நாவலர். நாவலர் அவர்கள் தனது சொற்பொழிவுகளில் அடிக்கடி பின்வரும் கூற்றைக் கூறுவர். “நான் இல்லற வாழ்வில் புகாத காரணம் சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தற் பொருட்டேயாகும்” என்பதாகும். இக்கூற்று நாவலரின் சமயப் பற்றையும் சமயத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற அவரது பெரு விருப்பையும் எமக்குக் காட்டி நிற்கிறது.



நாவலர் அவர்கள் 1822ஆம் ஆண்டு மார்கழி மாதம் 5ஆம் திகதி கந்தப்பிள்ளை, சிவகாமி தம்பதியினருக்கு ஆறாவது குழந்தையாகப் பிறந்தார். ஆரம்பத்தில் குருகுல வாச முறைப்படி கல்வி பயின்றார். தான் வாழ்ந்த காலத்தில் ஆங்கில அறிவின் முக்கியத்துவத்தை நாவலர் நன்கு அறிந்தவர். யாழ் மத்திய கல்லூரி அதிபர் பீற்றர் பார்சிவல் பாதிரியாரிடம் ஆங்கிலக் கல்வியைக் கற்றார். பார்சிவல் பாதிரியார் நாவலரிடம் தமிழைக் கற்றார். இவர் விவிலிய நூலை தமிழில் மொழி பெயர்க்கவும் நாவலரின் உதவியைப் பெற்றார். பார்சிவல் பாதிரியாரின் தொடர்பும் நாவலரது சமயப்பணிக்கு

நமக்குள்ளே இறைவன் இருப்பதை உணர்ந்து நடந்தால் நன்மைகள் தாமே வந்துசேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவகையில உந்து சக்தியாக அமைந்தது எனலாம். பாதிரியார் தமது சமயத்தை வளர்க்க பணியாற்றுவதுபோல் தாமும் சைவத்தை வளர்க்கவேண்டும் எனத் துணிந்தார். சைவ சித்தாந்த சாஸ்திரங்களைக் கற்று, அவற் றின் உட்பொருளை விளங்கிக்கொள்ள வட மொழி அறிவு அவசியம் என உணர்ந்தார். இதனால் வடமொழியையும் கற்று மும்மொழி தேர்ச்சியாளராக மிளிர்ந்தார்.

மக்களுக்குத் தம் சமயத்தின்மீது பற்றும் விழிப்புணர்வும் ஏற்படுவதற்காகப் பல முயற்சிகளை மேற்கொண்டார். சைவ மரபின் படி பிள்ளைகள் கல்வி கற்பதற்காக பால பாட நூல்களை எழுதி வெளியிட்டார். சைவ சமய அறிவைப் பரப்பும் நோக்கமாக முத லாம், இரண்டாம் சைவ வினா விடை நூல் களை எழுதினார். சாதாரண மக்களும் படித்து விளங்கிக்கொள்வதற்காக செய்யுள் நடையில் இருந்த சமய நூல்களை வசன நடையில் எழுதினார். இவ்வாறு அமைந்த நூல்களே பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், சிவாலய தரிசன விதி முதலியனவாகும்.

கிறிஸ்தவ பாதிரிமார்கள் அச்சியந் திர சாலையை நிறுவி தமது சமயம் சார் பான பிரசுரங்களை வெளியிட்டனர். சைவ கண்டன பிரசுரங்களை வெளியிட்டனர். இதைக் கண்டு பொறுக்காது மனம் கொதித்தார் நாவ லர். தனி ஒரு மனிதனாக நின்று யாழ்ப் பாணத்திலும் சென்னையிலும் அச்சுக்கூடங் களை நிறுவினார். கிறிஸ்தவ கண்டன பிர சுரங்களை பதிப்பித்து வெளியிட்டார். பழைய சமய நூல்களை ஆதாரமாகக் கொண்டு பல சைவ சமய நூல்களை அச்சிட்டு வெளி யிட்டார்.

மாணவர்களுக்கு சமயம்சார் கல் வியை இலவசமாகக் கற்பித்தார். இவ்வாறு இவரிடம் கற்ற மாணவ பரம்பரையினர் பிற் காலத்தில் சைவ சமய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியமை குறிப்பிடத்தக்கது. புலோலி நா. கதிரைவேற்பிள்ளை, வித்துவ சிரோண் மணி பொன்னம்பலபிள்ளை, கோப்பாய் சபா பதிநாவலர் முதலியோர் இவரது மாணாக்க பரம்பரையில் சிலராவர்.

இவர் சைவப் பிள்ளைகளுக்காகச் சைவ மரபின்படி அமைந்த பாடசாலைகளை நிறுவினார். வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலை இவர் தாபித்த முத லாவது சைவப் பாடசாலையாகும். இவரது பிரசாரத்தால் சைவப் பாடசாலைகள் கிராமந் தோறும் சைவ அபிமானிகளால் நிறுவப் பட்டன. இந்த வகையில் சைவப் பாடசாலை யின் தாபகத் தந்தை என நாவலர் போற்றப் பட்டார்.

சைவ சமய மறுமலர்ச்சிக்காக இவர் ஆற்றிய மேலும் ஒரு மகத்தான சேவை சம யப் பிரசாரங்களாகும். சைவ சமய உண்மை களை விளக்கி கோயில்களிலும் பொது இடங்களிலும் பிரசாரங்கள் செய்தார். இதற் காக ஆங்காங்கே சைவ பிரசார சபைகளை நிறுவினார். தன் மாணவர்களையும் சைவத் தின் பெருமைய்ய விளக்கி பிரசங்கங்கள் செய்ய ஊக்குவித்தார். கேட்போரைக் கவர வல்லது நாவலரின் பிரசங்கம். இதனால் மதம் மாறியோர் பலர் மீண்டும் சைவத்தில் இணைந்தனர். ஆலயங்கள்தோறும் சைவ புராண பாடல்களை ஆரம்பித்து சைவத்தின் பெருமையை உணரச் செய்தார். கோவில் களில் திருமுறைகளை பண்ணிசையுடன் ஓதுவித்தார். சமயாசாரிகளை கௌரவித்தார். இவ்வாறு பலவகை சமயத் தொண்டுகளை அர்ப்பணிப்புடன் செய்தவர் நம் நாவலர் பெருமான். இவரது பிரசங்கங்களையும் புராண படனங்களையும் கேட்டதால் மக்கள் மனம் செம்மைப்பட்டது. அவர்கள் பல சிவப் பணிகளைப் புரிந்தனர். கோயில், குளங்கள்

*இறை பக்தனின் மனம் எப்பொழுதும் இறைவனை நாடியபடியே இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்தனர். பசு வதையைத் தடுத்தனர். சிவனின் பெருங் கருணையை உணர்ந்தனர். நித்திய கோயில் வழிபாடு மேற்கொண்டனர். மாமிச போசனம் உண்பதைத் தவிர்த்தனர். மதுபானம் அருந்துதலை வெறுத்தனர். திருநீறு, சந்தனம் தரித்து சிவதீட்சை பெற்று சைவ ஆசார சீலராக திகழ்ந்தனர். இவ்வாறாக சமயம் புத்தெழுச்சி பெற பல சேவைகள் ஆற்றியவர் நாவலர் பெருந்தகை.

தன்மான உணர்வோடு போராடி வெற்றி கண்ட ஆறுமுகநாவலர் ஒரு ஞானகுரு. ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படுபவர். அவரது மகத்துவத்தை உணர்த்துவதாக பின்வரும் வெண்பா அமைந்துள்ளது.

நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே - எல்லவரும்
ஏத்து புராண ஆகமங்கள் எங்கே பிரசங்கமெங்கே
ஆத்தன் அறிவெங்கே அறை.

இத்தகைய உத்தம ஞானியை செயல் வீரனை, சைவத்தின் காவலனைப் போற்றிப் பரவுவோம். அவர் வழி நடப்போம் அவர் பணி தொடர்வோம்.

---

நாம் விரும்பத்தக்க வாழ்க்கை எது என்பதை ஆதிசங்கரர் மிக அழகாகப் போதனை செய்திருக்கிறார். அதாவது தனக்கும் பிறருக்கும் பயன்படும் வகையில் உள்ள வாழ்க்கைதான் தலைசிறந்தது. இதே தத்துவத்தைத்தான் சுவாமி விவேகானந்தரும் எடுத்துக் கூறியிருக்கிறார். ''தான் எரிவதால் உலகிற்கு நறுமணம் தரும் ஊதுபத்தியைப் போல எனது வாழ்க்கை இருப்பதையே நான் விரும்புகிறேன். இறுதி மூச்சு விடும்போது கூட தோளில் ஒருவரை அரவணைத்து, ஆறுதல் கூறி அவரது கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்றே விரும்புகின்றேன்'' என்று மாதா அமிர்தானந்தமயிதேவி சொல்லி இருக்கிறார். ''ஸ்ம்ருதி'' என்று சொல்லப்படும் தர்ம சாஸ்திரங்களிலும் மனிதன் தனது சொந்த வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகளையும் சமூகத்துடன் அவனுக்கு இருக்கவேண்டிய தொடர்புகளையும் விபரமாக எடுத்துச் சொல்லப்படுகிறது. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் கற்றல் என்பது ஒரு தொடர்கதையாக அமையவேண்டும். ''நீதிசதகம்'' என்னும் நூலிலே ''அறியாதவனை எளிதில் திருப்தி செய்துவிடலாம். அறிந்தவனை அதைவிட எளிதில் திருப்தி செய்துவிட முடியும். மிகக் குறைவாகவே எதையும் அறிந்து வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் அறிந்து வைத்துள்ளவனைப் போன்று நடந்து கொள்பவனை பிரம்மாவாலும் திருப்திப்படுத்த முடியாது என்று ஒரு விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே எல்லாம் கற்றுவிட்டோம் என்ற நினைப்பு இல்லாமல் தினமும் ஏதாவது நல்ல விஷயம் ஒன்றையாவது கற்றுக்கொள்ள வேண்டும். அதற்கேற்ப நல்ல சிந்தனை, செயல்களுடன் வாழவும் வேண்டும்.

நல்லனவற்றைத் தெரிந்து வைத்துக்கொண்டிருப்பதால் மட்டும் எந்தப் பயனும் வந்துவிடப் போவதில்லை. அதைச் செயல் வடிவத்திலும் செய்துகாட்ட வேண்டும்.

*பலருக்கு வாழ்வில் நேரும் துன்பங்களே கடவுள் நம்பிக்கையை ஆழமாக்குகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சதகம்
(தொடர்ச்சி...

## பத்திவைராக்கிய விசித்திரம்
(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
-சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்-
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

32. கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழிதிருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே.

**ப-ரை:**

ஆரும் கேட்டு அறியாதான்- எவ்வகை மேம்பாட்டினராலும் தம் கேள்வி அறிவால் அறியப்படாதவனும், கேடு ஒன்று இல்லான்- அழிவு சிறிதும் இல்லாதவனும், கிளை இலான்- சுற்றத்தினர் இல்லாதவனும், கேளாதே எல்லாம் கேட்டான்- பிறர் வாயிலாகக் கேட்டறியாதே இயல்பாகவே எல்லாவற்றையும் அறிந்தவனுமாகிய இறைவன், நாட்டார்கள் விழித்திருப்ப- நாட்டிலுள்ளார் அனைவரும் பார்த்திருப்பவும், ஞாலத்து உள்ளே- இந்நிலவுலகத்தில், நாயினுக்கு தவிசு இட்டு- ஒரு நாய்க்கு உயர்ந்த ஆசனத்தை இட்டதுபோல இருக்கை அமைத்து, நாயினேற்கு காட்டாதன எல்லாம் காட்டி- இழிவுடையேனுக்குக் கல்வியறிவாற் கண்டறிய முடியாதன எல்லாவற்றையும் காட்டியருளி, கேளாதன எல்லாம் கேட்பித்து- கேள்வியறிவாற் கேட்டறிய முடியாதனவற்றையெல்லாம் தன்வாயிலாகக் கேட்டறியும் வண்ணம் செய்து, என்னை ஆட்கொண்டு மீட்டேயும் பிறவாமல் காத்தான்- தகுதியற்றவனாகிய என்னை அடிமை கொண்டருளி மீட்டும் பிறவாமல் காப்பாற்றியருளினான். எம்பெருமான் செய்திட்ட விச்சைதான்- இஃது எங்கள் தலைவன் செய்த வியப்புக்குரிய திருவிளையாடலாகும்.

யாவராலும் கேட்டு அறியப்படாதவனும் கேடு ஒரு சிறிதும் இல்லாதவனும் சுற்றத்தினர் இல்லாதவனும் பிறரிடத்துக் கேட்டறியாமலே இயல்பாகவே எல்லாவற்றையும் அறிந்தவனுமாகிய இறைவன் நாட்டிலுள்ளார் அனைவரும் பார்த்திருப்பவும் இந்நிலவுலகத்தில் (புகுந்து) நாயினுக்குத் தவிசு இட்டதுபோல இருக்கை அமைத்து இழிவுடையேனுக்குக் காட்டமுடியாதனவெல்லாம் காண்பித்துக் கேள்வியறிவாற் கேட்டறியமுடியாதனவற்றையெல்லாம் தன்வாயிலாகக் கேட்டறியும்வண்ணம் செய்து என்னை ஆட்கொண்டு மீட்டும் பிறவாமல் காத்தருளினான். இஃது எம்பெருமான் செய்த வியப்புக்குரிய திருவிளையாடலாகும்.

*இறைவனை அடைய உண்மையான ஆன்மிக தாகம் இருந்தால் போதும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் கல்வி கேள்வி அறிவு களால் ஓரளவு அறியப்படினும் எவ்வகை மேம்பாட்டினராலும் பிறர்பாற் கேட்டு முழுவதும் அறியப்படாதவனாகலின் "கேட்டாரு மறியா தான்" என்றார். அறியாதான்- அறியப்படாத வன். இதில் "படு" என்னும் செயப்பாட்டு விகுதி தொக்கது. இறைவன் என்றுமுள்ளவ னாகலின் "கேடொன்றில்லான்" என்றார்.

கிளை- தந்தை தாய் முதலிய சுற் றம். இறைவன் யாவர்க்கும் தந்தை தாய் முதலிய சுற்றமாவனே யன்றித் தனக்கு அஃ திலானாதலின் "கிளையிலான்" என்றார்.

"எந்தை யாய்எம்பிரான் மற்று மியாவர்க்குந்
தந்தை தாய்தம் பிரான்றனக் கஃதிலான்" சத 47.

என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க. இறைவன் எல்லாமறிபவனாத லின் "கேளாதே யெல்லாங் கேட்டான்" என்றார்.

நாட்டார்கள் விழித்திருப்பவென்றது நாட்டிலுள்ளார் தாம் கதியடைவதற்குத் தகுதி யின்மையாற் பார்த்துக் கொண்டிருப்ப என்றவாறு. விழித்திருப்ப ஆட்கொண்டான் என இயையும் நாயினேற்கு இருக்கை அளித்தது, இழிவுடைய நாய்க்கு உயர்ந்த ஆசனத்தை இட்டது போலுமென்பார். "நாயினுக்குத் தவசிட்டு" என்றார். காட்டாதன காட்டியென்பதும் கேளாதன கேட்பித்து என்பதும் கல்வி கேள்வி அறிவுகளால் முழுவதும் அறியமுடியாத இறையியல்பு, உயிரியல்பு, பாசவியல்பு என்பவைகளை உணர்த்தி உபதேசஞ் செய்து அனுபவ ஞானத்தால் உணரவைத்தமையை உணர்த்துவனவாகும்.

மீண்டேயும் என்பது எதுகைநோக்கி வலித்தது. பிறவாமற் காத்தல் என்றது பிறப்பித்துப் பக்குவநிலையை அடையச் செய்த இறைவன் உயிரை மீண்டும் பிறத்தற்கு ஏதுவான இயல்பு அடையாதிருக்கும்படி பாதுகாத்தல் என்றவாறு. அதன் பயன் அழிவிலா இன்பநுகர்ச்சி. காத்தாட் கொண்டான் என்பதனை, ஆட்கொண்டு காத்தான் என விகுதி பிரித்துக் கூட்டியுரைக்க. காட்டாதன காட்டுதலும் கேளாதன கேட்பித்தலும் வியப்புக்குரிய செயல்களாதலின் எம் பெருமான் செய்திட்ட விச்சைதானே என்றார்.

இதன்கண் கேட்டாரும் அறியாதான் முதலிய இறையியல்புகளும் காட்டாதன காட்டுதல் முதலிய உயிரியல்பு பாசவியல்புகளும், சுட்டியுணரப்படுவனவாகாமல் இறையருளி னாற்றெளியத்தக்கன வாகலிற் சுட்டறுத்தல் என்னும் மூன்றாம்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 28.

33. விச்சைதா னிதுவொப்ப துண்டோ கேட்கின்
மிகுகாதல் அடியார்தம் அடிய னாக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டான் அமுத மூறி
யகநெகவே புகுந்தாண்டான் அன்பு கூர
அச்சன்ஆண் பெண்ணலியா காச மாகி
யாரழலாய் அந்தமாய் அப்பா னின்ற
செச்சைமா மலர்புரையு மேனி யெங்கள்
சிவபெருமா னென்பெருமான் றேவர் கோவே.

மனிதப் பிறவியின் நோக்கம், வாழ்க்கையின் குறிக்கோள் கடவுளிடம் பக்தி செலுத்துவதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ப-ரை:**

அச்சன் ஆண் பெண் அலி ஆகாசம் ஆகி- தந்தையும் அவன் அவள் அது என்னும் உலகப் பொருட்தொகுதியும், ஞானப் பரவெளியும் ஆகியும், ஆர் அழலாய்- அப்பர வெளிக்கணுள்ள அரிய அழல்போன்ற சுடர் வடிவாகியும், அந்தம் ஆய்- முடிவிடன் ஆகியும் அப்பால் நின்ற- பிரகிருதிமாயைக்கு அப்பாலாகியும் நிலைபெற்ற, செச்சை மாமலர் புரையும் மேனி- வெட்சியின் சிறந்த மலரையொத்த செவ்விய திருமேனியையுடைய, எங்கள் சிவபெருமானும், எம்பெருமான்- எங்கள் தலைவனும், தேவர்கோ- தேவர்களுக்குத் தலைவனுமாகிய இறைவன், மிகு காதல் அடியார்தம் அடியன் ஆக்கி- மிக்க அன்பினையுடைய தன் அடியார்க்கு என்னை அடியவனாகச் செய்து, அச்சம் தீர்த்து ஆட்கொண்டான்- அதனால் பழைய மலவாதனை மீட்டும் தாக்குங்கொல்லோ என்னும் அச்சத்தினை நீக்கி ஆளாகக் கொண்டான்; அமுதம் ஊறி அகம் நெக- அமுதம்போன்ற இன்பம் ஊற்றெடுத்து உள்ளம் அன்பினால் நெகிழவும், அன்பு கூர- மெய்யன்பு மிகவும். புகுந்து ஆண்டான்- எனது உள்ளத்தினுள்ளே புகுந்து ஆட்கொண்டருளினான்; கேட்கின்- இங்ஙனம் இறைவன் செய்த அருட் செயலைக் கேட்கப் புகுந்தால், இது ஒப்பது விச்சை உண்டோ- எனக்குச் செய்த இதனை ஒத்ததாகிய வியத்தகு செயல் வேறு உண்டோ? இல்லை.

தந்தையும் அவன் அவள் அது என்னும் உலகப்பொருட்டொகுதியும் ஞானப்பர வெளியும் ஆகியும், அப்பரவெளிக்கணுள்ள அழல் போன்ற சுடர்வடிவாகியும் அந்தத்தைச் செய்பவனாகியும் பிரகிருதி மாயைக்கு அப்பாலாகியும் நிலைபெற்ற, வெட்சியின் மலரை ஒத்த சிவந்த திருமேனியையுடைய எங்கள் சிவபெருமானும் எங்கள் தலைவனும் தேவர்களுக்குத் தலைவனுமாகிய இறைவன் மிக்க அன்பினையுடைய தன் அடியார்க்கு என்னை அடியவனாக செய்து அச்சம் தீர்த்து ஆட்கொண்டான்; அமுதம் போன்ற இன்பம் ஊற்றெடுத்து உள்ளம் நெகிழவும் மெய்யன்பு மிகவும் என் உள்ளத்தினுள்ளே புகுந்து ஆட்கொண்டருளினான். இங்ஙனம் இறைவன் செய்த அருட்செயலைக் கேட்கப் புகுந்தால் எனக்குச் செய்த இதனை ஒத்ததாகிய வியத்தகு செயல்வேறு உண்டோ? இல்லை.

விச்சை- வித்தை. தான்- அசை. உண்டோ என்பதில் ஓகார எதிர்மறை. கேட்கின் என்றது இறைவன் ஆட்கொண்டருளும் அருட்செயலை ஆராயப்புகின் என்றவாறு. இருவினையொப்பு மலபரிபாகமெய்திய அடிகளை இறைவன் ஆட்கொண்டு ஆணவ மல ஆற்றலைக் கெடுத்துவிடத்தும் எத்தனையோ காலமாகப் பயின்று வந்த பயிற்சி வயத்தான் பெருங்காயம் வைத்த பாத்திரத்தில் அதனை எடுத்த விடத்தும் அதன் மணம் நீங்காமை போல வாசனாமலம் உயிரைத் தாக்குமாதலின் அதனை நீக்கும்பொருட்டு மிக்க அன்பினையுடைய அடியவர்களுக்கு அடியவனாகச் செய்து ஆட்கொண்டமையின் "மிகுகாதலடியார்த மடியனாக்கி யச்சந்தீர்த் தாட்கொண்டான்" என்றார். மிகுகாதலடியார்- கணந்தோறும் மிகாநின்ற அன்பினையுடைய மெய்யடியார். அடியார்தம் அடியனாக்கியமை,

"பாசமானவை பற்றறுத் துயர்ந்ததன் பரம்பெருங் கருணையால்
ஆசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய அற்புதமறியேனே" அற் 8.
"அறவையென்றடி யார்கள் தங்க ளருட்கு மாம்புகவிட்டு"
சென்னிப் 7.

*பெண், பொன் ஆகியவை நிலையற்றவை, இறைவன் ஒருவனே நிலையான பொருள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை யாண்டபிரான்"

பூவல்லி 8.

என அடிகள் பிறாண்டு அருளியவற் றானுமறியப்படும். "அச்சந் தீர்த்தாட் கொண் டான்" எனக் கூறப்படினும் ஆட்கொண்டு அச்சந்தீர்த்தாட் கொண்டான்" எனக் கூறப்படி னும் ஆட்கொண்டு அச்சந்தீர்த்தான் எனக் கொள்க. அச்சந்தவிர்த்த சேவடிகள் வாழ்க" (திருவண்டப் 98) "அச்சந் தவிர்த்தென்னை ஆண்டுகொண்டான்" (தெள் 8) "அளித்து வந்தெனக் காவ வென் றருளி அச்சந்தீர்த்த நின்" (செத் 10) என இத்திருவாசகத்தும், "காதரந் தீர்த்தருளும் தயல்வளர் மேனியன்" எனத் திருக்கோவையாரினும் (117) வருவன வற்றாலுமறிக. "அச்ச மறுத்தென்னை யாண் டனன் நந்தியே" எனத் திருமந்திரத்து (2456) வருதலும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது.

அமுதூறி- அமுதம் போன்ற இன்பம் ஊற்றெடுத்து "தேன்றங்கித் திக்கித் தமு தூறி" "அடியவர்கள் நெஞ்சுளே நின்றமுத மூறி" (பொன் 2,4) "என் கணிலே யமுதூறி" (அடைக்க 7) "காயத்துள் அமுதூற ஊற" (செத்5) என வருவன காண்க. இறைவன் புகுந்தாண்டமையால் அமுதூறி அகநெகுவ தாயிற்று. "பொய்யனே னக நெகப்புகுந்து" (செத்1) எனவும் "அன்பால் நீ அக நெகவே புகுந்தருளி யாட்கொண்டது" (ஏசறவு 7) எனவும் வருவன காண்க. கூர- மிக.

அச்சன்- தந்தை. திசைச் சொல், தந்தையை அச்சன் என்பது குடநாட்டார் வழக்கு என்பர் நச்சினார்க்கினியர். (தொல். சொல்சூத் 400 உரை) "அச்சன் என்னையும் ஆண்டு கொண்டருளிய வற்புதமறியேனே" (அற்புத 9) என அடிகள் பிறாண்டு அருளிய மையுங் காண்க. அத்தன் என்பது எதுகை நோக்கி அச்சன் எனத் திரிந்தது எனினுமாம். இறைவனை அச்சன் என்றது உலகத்துத் தந்தை போலாகாது எக்காலத்தும் எவ்விடத் தும் எல்லாவுயிர்களுக்கும் நன்மையே நாடிச் செய்யும் அருட்டிறம் பற்றியாகும்.

ஆண் பெண் அலி ஆகி ஆகாசமாகி என ஆகி என்பதனை முன்னுங் கூட்டுக ஆண் பெண் அலி என்றது அவன் அவள் அது என்னும் உலகப் பொருள் முழுவதும் தனது வியாபகத்துள் அடங்கத்தான் அவற் றுடனாகியும் பிறிதாகியும் நிற்கும் நிலை பற்றியாகும். "பெண்ணாகி யாணாயலியாய்ப் பிறங்கொளிசேர் விண்ணாகி மண்ணாகி இத் தனையும் வேறாகி" (திருவெம் 18) என அடிகள் அருளியமையுங் காண்க.

ஆகாசமாகின்றது இறைவன் நுண ணிய ஞானப் பரவெளியாய் நிற்கும் நிலை மையைக் குறித்தது. ஞானப்பரவெளி தனது அருட்சத்தியாகத் தான் அதனுள் அமைந்து ஆரழற் சுடராய் நிற்கும் தன்மை சிதாகாச வித்தை அல்லது தகரவித்தை பயில்வார்க்கு அருள்செய்யும் பொருட்டாகும்.

அந்தமாய் நின்றது தன்செயலால் உலகமுழுவதும் தன்னுள் ஒடுங்கத் தான் முடிவிடனாய் நிற்கும் நிலைமையை உணர்த் தியதாகும். அப்பால் என்றது பிரகிருதி மாயைக்கு மேலேயுள்ள அசுத்தமாயை சுத்த மாயைகளைக் குறித்தது. எல்லாம் ஒடுங்கிய நிலையில் இறைவன் ஒருவனே நிற்பன் என்பது தோன்ற "அப்பால் நின்ற" என்றார். "விண்ணை மடங்க வெற்புக்கரப்ப, மண்ணை மடங்கவரு மொருகாலத்து மன்னி நிற்கும் மண்ணல்" (75) எனவும்,

*இறைவனே! நீ கர்த்தா, இந்த உலகம் உன்னுடையது. இவ்வாறு நினைப்பது ஞானம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முன்னுமொருவ ரிரும்பொழின் மூன்றற்கு முற்றுமிற்றாற்
பின்னுமொருவர்" (160) எனவும்,

திருக்கோவையாரில் வருவன காண்க.

இத்துணை அரும் பெரும் பொருளாயுள்ள இறைவன் அன்பர்க்கருளும் பொருட்டு உருவத்திருமேனி தாங்குதலின் "செச்சை மாமலர் புரையும் மேனி எங்கள் பெருமான்" என்றார். செச்சை- வெட்சி. "செச்சை செந்தூரம் வெட்சியாகும்" என்பது திவாகரம் (மரப்), செச்சை மாமலர் புரையும் மேனி என்றது வெட்சியின் சிறந்த மலரை யொத்த சிவந்த திருமேனி என்றவாறு. "செச்சை மலர் புரை மேனியன் திருப்பெருந்துறை யுறைவான்" (உயிருண்ணி 9) என அடிகள் அருளியமையுங் காண்க. செச்சை மலர் செந்நிறமுடைத்தாதல், "எரிநகையிடையிடு பிழைத்த நறுந்தார்ப், புரிமலர்த்துழாஅய் மேவன் மார்பினோய்" (13:59-60) என்னும் பரிபாடலுரையில் "எரிநகை யிடையிடுபு" என்பதற்கு "நிறத்தால் எரியை யொத்த வெட்சி மலரை யிடையிட்டு" எனப் பரிமேலழகர் உரைத்தமையானுமறியப்படும். மேனிச் சிவபெருமான் என இயையும் மற்றைய அடியார்களையும் உளப்படுத்தி "எங்கள் சிவபெருமான்" என்றார். இந்திரன் திருமால் பிரமன் முதலிய தேவர்கள் யாவர்க்கும் தலை வனாதலின் "தேவர்கோ" என்றார்.

"வானவன் மாலயன் மற்றுமுள்ள தேவர்கட்கும்
கோனவனாய் நின்று கூடலிலாக் குணக்குறியோன்"

பூவல் 12.

என அடிகள் அருளியமையுங் காண்க.

இதன்கண், "செச்சை மாமலர் புரையுமேனி யெங்கள் சிவபெருமான்" என இறைவன் சுட்டியறியப்படுபவனாகக் கூறப்படினும் உள் புகுந்தாண்டதும் ஆகாயமாகி யாரழலாய் அந்தமாகியதும் ஆகிய இயல்புகள் சுட்டறிவுக்குப் புலனாகாமையின் சுட்டறுத்தல் என்னும் மூன்றாம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 29. (தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மார்ச் | 06 | மாசி | 22 | திங்கள் | கச்சியப்பசிவாச்சாரியார் |
| மார்ச் | 13 | மாசி | 29 | திங்கள் | திருவள்ளுவர் |
| மார்ச் | 26 | பங்குனி | 13 | ஞாயிறு | பரமகுருசுவாமி |
| மார்ச் | 28 | பங்குனி | 15 | செவ்வாய் | குழந்தைவேற்சுவாமி |
| மார்ச் | 30 | பங்குனி | 17 | வியாழன் | செல்லப்பாசுவாமி |
| ஏப்ரல் | 03 | பங்குனி | 21 | திங்கள் | நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள். தவத்திரு முருகேசு சுவாமிகள் |
| ஏப்ரல் | 06 | பங்குனி | 24 | வியாழன் | யோகர் சுவாமி |
| ஏப்ரல் | 12 | பங்குனி | 30 | புதன் | காரைக்காலம்மையார் |
| ஏப்ரல் | 22 | சித்திரை | 09 | சனி | திருநாவுக்கரசர் |
| ஏப்ரல் | 27 | சித்திரை | 14 | வியாழன் | சிறுத்தொண்டர் |
| ஏப்ரல் | 29 | சித்திரை | 16 | சனி | மங்கையற்கரசியார் |

*எல்லா நெறிகள் மூலமாகவும் கடவுளை அடைய முடியும். சமயங்கள் யாவும் உண்மையானவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாசிவராத்திரி விரத மகிமை

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –



சிவராத்திரி ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற அபரபக்க சதுர்த்தசித் திதியன்று இடம்பெறுகின்றது. எல்லா மாதச் சிவராத்திரி களும் சிவனுக்குரிய விரதத்தை அனுட்டிக்க வேண்டிய புனிதமும் புண்ணியமும் நிறைந்த தினங்களேயாகும். எனினும் மாசி மாதத்தில் வருகின்ற சிவராத்திரியை "மகாசிவராத்திரி" என்பர். மகாசிவராத்திரி சைவர்களுக்கு மிகவும் முக்கியமானது. ஏனெனில் அன்று நடுநிசியில்த் தான் "இலிங்கோற்பவம்" நிகழ்ந்தது.

இந்த "இலிங்கோற்பவம்" ஆகும் நடு இரவில் சதுர்த்தசி திதி இருக்க வேண்டும். சதுர்த் தசி திதி அவ்வாறு அமைகின்ற இரவுடன் கூடிய தினமே மகாசிவராத்திரி தினமாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் நிறுத்துதல் அவ சியம். அடுத்தநாள் அமாவாசையாகும். சதுர்த் தசிக்கு முதல்நாள் திரயோதசித் திதி அமையும். சிவராத்திரி தினம் திரயோதசியுடன் பொருந்தி இருப்பது உத்தமம்; அமாவாசையுடன் சம்பந்தப் படுதல் அதமம் என நூல்கள் கூறுகின்றன. சிவ ராத்திரியை நிர்ணயிப்பவர்கள் இவற்றைக் கவனித் துக்கொள்ள வேண்டும்.

மாசிமாதத்து மகாசிவராத்திரி நடு இரவு, இலிங்கோற்பவ மூர்த்தி வெளிப்பட்ட காலம் ஆகும். இதுபற்றிச் சற்றுச் சிந்திப்போம்.

பிரம்மாவும் விஷ்ணுவும் அடிமுடி தேடிய வரலாற்றை அறிவதன்மூலம், "இலிங்கோற்பவம்" என்கின்ற எண்ணக் கருவைத் தெளிந்து கொள்ள முடியும்.

சரஸ்வதி, கல்விக்குரிய தெய்வம். இலக் குமி, செல்வத்திற்குரிய தெய்வம். சரஸ்வதியின்

இறைவனை அறியவேண்டும் என்ற நம்பிக்கையை மரணம் வரும்வரையில் விட்டுவிடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகன் பிரம்மா. அவர் படைப்புக்களுக்குப் பொறுப்பானவர். இலக்குமியின் நாயகன், விஷ்ணு. அவர் படைக்கப்பட்டவற்றைக் காத்து அருளும் பொறுப்பை ஏற்றுள்ளவர். இருவரும் முக்கியமான தொழில்களுக்கு அதிபதிகள் என்ற வகையில், இந்த உலக ஆட்சியில் மிக முக்கியமானவர்கள்தான். எனினும், அவர்கள் அறிந்து கொள்ளாததொன்று என்னவெனில், அவர்களில் ஒருவரின் தொழிலை மற்றையவர் ஆற்றமுடியாதுள்ளார் என்னும் உண்மையாகும்.

ஒருவரிடம் ஏற்படுகின்ற அகந்தை, செருக்கு என்பன அவர் உண்மையை அறியவிடாமல் தடைசெய்யும் வல்லமை படைத்தன. இவ்வுலகின் உயிருள்ளவற்றையும், உயிரற்றவற்றையும் தாமே படைப்பவர் என்ற காரணத்தால் பிரமாவிடம் அகந்தை குடிகொண்டது. போதாததற்குக் கல்விக்கு அதிபதியான சரஸ்வதியைத் தம் நாவில் வைத்து, அவளின் நாயகனாக விளங்குவதால் பிரமாவுக்குக் கல்விச் செருக்கும் உண்டாகியது.

மறுபுறத்தில், படைக்கப்பட்டவை யாவற்றையும் அழியாமல், பேணி, போஷித்து காத்து வருபவர் தானே என்பதால் விஷ்ணுவும் அகந்தை கொண்டார். அத்துடன் செல்வத்துக்கு அதிபதியான இலக்குமியின் நாயகன் தானே, என்பதால் செல்வச் செருக்கும் விஷ்ணுவுக்கு ஏற்பட்டது.

அகந்தை, செருக்கு, கர்வம் என்பவற்றின் உச்சத்தில் நின்ற பிரமாவும், விஷ்ணுவும் தங்களில் யார் பெரியவர் என வாதிட்டார்கள்.

இந்த உலகத்தின் விநோதங்களையும் நூதனங்களையும் அவற்றைப் படைத்த பிரமா கண்டு பெருமகிழ்ச்சியடைந்து, தன்னைத்தானே பாராட்டிக் கொண்டார். அதனால் பெருமிதங்கொண்ட பிரமா, தன்னைத் தவிர வேறு யாரால் இத்தகைய வியத்தகு உலகத்தைச் சிருஷ்டிக்க முடியும் என ஆர்ப்பரித்து, இந்த உலகத்திற்குக் கர்த்தா வேறு யாருமில்லை; தான் ஒருவனே என்று பிரகடனம் செய்தார்.

இதனைக் கண்ணுற்ற விஷ்ணு, பிரமாவின் அகங்காரத்திற்கு விட்டுக்கொடுக்காமல், "உன்னால் படைக்கப்பட்ட இந்த உலகமும், உலகப் பொருள்களும், நான் இல்லையென்றால் அக்கணமே அழிந்து போயிருக்கும். அவை அழியாமல் நிலைக்கச் செய்து காத்து வருபவன் நான். என்னால் அன்றோ இந்த உலகம் அழகும் பொலிவும் பெற்றுத் தொடர்ந்து வாழ்கிறது. அதனால், காத்தல் கடவுளாகிய நானே இந்த உலகத்துக்குக் கர்த்தா" என்று எதிர்ப் பிரகடனம் செய்தார்.

பிரமாவும் விஷ்ணுவும் இவ்வுலகத்திற்குக் கருத்தா தான், தான் என்று சொற்போர் செய்தார்கள். முடிவில்லாத வாதமாக நெடுங்காலம் சென்றது. இரண்டு கர்த்தாக்கள் இருக்கமுடியாதல்லவா? அதனால், இருவரில் எவர் கர்த்தா என்பதைத் தீர்மானிப்பதற்கு யுத்தம் தொடங்கினார்கள். மகாயுத்தமாக மாறிற்று. பிரமாவும் விஷ்ணுவும் தத்தம் அஸ்திரங்களையும், ஆயுதங்களையும் ஒருவருக்கொருவர் பிரயோகித்தனர். யுத்தம் பல காலங்கள் தொடர்ந்தது. முடிவில்லாத யுத்தத்தினால் உலகத்திலும், ஏனைய அண்டங்களிலும் பாரிய அழிவுகளும், அநர்த்தங்களும் ஏற்பட்டன. மனிதர்களும் தேவர்களும் ஏனைய உயிர்களும் அஞ்சி நடு நடுங்கின. கோர யுத்தத்தைக் கண்டு யார்தான் அஞ்சமாட்டார்கள். உலகமே, ஊழிக்காலமோ என ஆடி, நிலைதடுமாறியது. எனினும் போர் நின்றபாடில்லை.

உலகத்து உயிர்கள் அனைத்தும் இவ்வாறு கலங்கி நின்றவேளையில், நாரத மகாமுனிவர் யுத்த முனையில் தோன்றினார்.

*கல்வியின் இலட்சியம் கடவுளை அடையும் வழியை அறிவிப்பதும் கடவுளை அடைவதும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபாவேசங்கொண்டு நிற்கும் பிரமாவையும் விஷ்ணுவையும் நோக்கி, "யுத்தத்தை நிறுத்துங்கள். யுத்தத்தினால் உலகில் ஏற்பட்டு உள்ள அழிவுகள், அநர்த்தங்களைப் பற்றிச் சிந்திக்காத நீங்கள் இவ்வுலகின் கர்த்தாவாக இருக்க என்ன தகுதி இருக்கிறது?" என்று கேட்டார். நாரத முனிவரின் வார்த்தைகளுக்கு அவர்கள் செவி சாய்க்கவில்லை. யுத்தம் தொடர்ந்து நடைபெற்றது. நாரதரும் விடவில்லை. "இந்த உலகிற்கு ஒருவரே கர்த்தா. அவர்தான் பரம்பொருள் ஆகிய சிவபெருமான். உங்களைப் படைத்தல், காத்தல் தொழில்களைச் செய்யும்படி பணித்தவரும் அவரே. அவ்வாறு இருக்க, உங்களுக்குப் பதவிகளைத் தந்த முழுமுதற் கடவுளை மறந்து, உங்களுக்குள் யார் பெரியவன் என்று சண்டை போடுகிறீர்களே. உங்கள் அகந்தையும் செருக்கும் அறிவை மறைத்து விட்டனவே" என்று நாரத மகாமுனிவர் பலவாறாக எடுத்துக் கூறியவற்றைப் பிரமாவும் விட்டுணுவும் ஒப்புக்கொள்ளவில்லை. தங்களுடைய பதவிகள் வேறொருவரால் தரப்பட்டவை என்று நாரதர் கூறியதை எதிர்த்து அவரை நிந்தனை செய்தார்கள். யுத்தமே தங்களுள் யார் பெரியவன் என்பதைத் தீர்மானிக்கும் என்று கூறி நாரதரை அங்கிருந்து வெளியேறச் சொல்லிவிட்டார்கள். அப்பொழுது, நாரதர் சிரித்தார். "உங்களுக்கு இந்தப் பதவிகளைச் சிவபெருமானே தந்ததமை பற்றி எனக்கு நீங்கள் பல தடவைகள் சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது. பதவியில் அமர்த்தப்பட்டவரை விட, அப்பதவியை வழங்கியவர் பெரியவர்தானே" கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்" என்று சொல்லிவிட்டு நாரதர் அவ்விடத்தை விட்டு அகன்றார்.

யுத்தம் என்பது போதைதானே. போதைக்கு அடிமைப்பட்டவர்கள், அப்போதைக்கு இரையாவதைத் தவிர மீட்சி எய்துவது மிகவும் கடினம். பிரம விட்டுணுக்கள் கூட விதிவிலக்கல்ல.

இப்பொழுது யுத்தம் முன்னரைவிட உக்கிரமாகியது. அப்பொழுது பிரம விட்டுணுக்கள் முன்பாக, இருவருக்கும் மத்தியில் ஒரு பெருஞ் சோதிப்பிழம்பு தோன்றியது. அது ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ் சோதியாக விண்ணையும் மண்ணையும் அளாவி நின்றது. உக்கிரமாக யுத்தம் புரிந்த பிரம, விஷ்ணுக்கள் அதைக் கண்டு அசந்து போனார்கள்.

அப்பொழுது அங்கு நாரத மகாமுனிவர் வந்தார். பிரம, விட்டுணுக்களை நோக்கி, "இச்சோதியின் அடியையும் முடியையும் தேடிக் கண்டு பிடியுங்கள். உலகத்திற்குக் கர்த்தா யாவர், என்ற வினாவிற்கு விடை கிடைக்கும்" என்றார். அவர்கள் இருவரும் போரை நிறுத்திவிட்டு, அச்சோதிப் பிழம்பின் அடியையும் முடியையுங் கண்டு தத்தம் பெருமையை நிலைநிறுத்துவதற்குப் புறப்பட்டனர்.

விஷ்ணு பன்றி வடிவத்தை எடுத்து, அடியைத் தேடும் பொருட்டுப் பூமியைப் பிளந்து கீழ்நோக்கிச் சென்றார். பிரமா, அன்னப்பறவை வடிவெடுத்து, முடியைத் தேடி மேலே பறந்து சென்றார்.

பல காலங்கள் கழிந்தன. இருவரும் அடியையும் முடியையும் தேடித் தேடிக் களைத்தே விட்டார்கள். அவர்கள் முயற்சிகள் பலிக்கவில்லை. அயர்ந்து சோர்ந்த நிலையில் திரும்பிக் கொண்டிருந்தார்கள். வேதங்களும் வேத சாஸ்திரங்களும் எள்ளி நகையாடி, பிரமாவையும் விட்டுணுவையும் விளித்து, உலகத்திற்குக் கர்த்தா யாவர், என்று கேட்டன. பிரம விட்டுணுக்கள் ஆற்றாமையினால் வெட்கித் தலைகுனிந்தனர். அவர்களின் அகந்தை, கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு என்பன ஒழிந்த நிலையில்,

*செயல்களில் ஈடுபட்டிருக்கும்போதுகூட மனதை இறைவனிடம் வைத்திருக்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு கைகூடவே உலகத்துக்குக் கருத்தா சிவபெருமானே என்பதை ஒப்புக் கொண்டார்கள். முழுமுதல் கடவுள் சிவபெருமான் ஒருவரே என்றும், சிவனுக்கு ஒப்பாரும் மிக்காரும் எவரும் இல்லை என்றும உணரப்பெற்றவராய் பிரமாவும் விட்டுணுவும் தம் அறியாமையையும் தாம் அகந்தை கொண்டமையையும் மன்னித்து அருளும்படி சிவபெருமானை மெய்யன்போடு பிரார்த்தித்தார்கள். அவ்வாறு அவர்கள் பிரார்த்திக்க, இலிங்கோற்பவ மூர்த்தி வெளிப்பட்ட தினமே மகாசிவராத்திரி தினமாகும்.

ஆதியும், அந்தமும் இல்லாமல் ஓங்கி வளர்ந்திருந்த சோதிப்பிழம்பு, சுருங்கி அருணாசல மலையாயிற்று. திருவண்ணாமலை என இது அழைக்கப்படுகிறது. அம்மலை சிவலிங்க வடிவாய் விளங்குகிறது. பிரம விஷ்ணுக்கள் அரனைப் பணிந்து கேட்டுக்கொண்டபடி, சிவராத்திரி தினம் புண்ணிய விரத தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

சிவபெருமான் அருவுருவத் திருமேனியுடன் திருக்கோயில்களில் வீற்றிருக்கின்ற மூர்த்தமே சிவலிங்கப் பெருமான் ஆகும்.

"செங்க ண்ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

என்பது திருநாவுக்கரசர் தேவாரம்.

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்"

எனச் சேக்கிழார் பெருமான் கூறுகிறார்.

விசும்பும் நிலமும் அளாவிய அக்கினிச் சோதிப் பிழம்பாய்த் தோன்றிய வடிவம் சிவலிங்கம். சிவலிங்க வழிபாடு மிகத் தொன்மையான காலத்திலிருந்தே இடம்பெற்று வருகிறது. சிந்துவெளி நாகரிக காலத்தில் சிவலிங்க வழிபாடு இருந்தமைக்கு அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் கிடைத்துள்ளன. இதிகாச காலத்தில், ஸ்ரீ இராமபிரான் இராமேஸ்வரத்தில் சிவலிங்க வழிபாடு செய்தமைபற்றி இராமாயணம் கூறுகிறது. இராவணேஸ்வரன் மிகுந்த சிவபக்தி கொண்டவன். அவனின் சிவபக்தியை நாயன்மார்கள் நால்வரும் நயந்து பாடியுள்ளார்கள். இலங்கையில் மட்டுமல்ல அகிலம் முழுவதிலும் சிவலிங்க வழிபாட்டினைப் பரப்பியவர், இராவணேஸ்வரர், இலங்கைக்குச் சிவபூமி என்னும் சிறப்புப் பெயர் உண்டாவதற்கு இராவணேஸ்வரனே காரணம். சிவலிங்கத்தை வழிபட்டால் மற்றெல்லாத் தெய்வங்களையும் வழிபட்டதாக அமையும் என வேத உபநிடதங்கள் கூறுகின்றன.

சிவனுக்கு அறுபத்துநான்கு வடிவங்கள் நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்பது வடிவங்களே பொதுவாகத் திருக்கோயில்களில் வைத்துப் பூஜிக்கப்பட்டு வருகின்றன. இலிங்கம், இலிங்கோத்பவர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், பைரவர், வீரபத்திரர், நடராஜ மூர்த்தி, தட்சணாமூர்த்தி, பிட்சாடண மூர்த்தி என்பன அந்த ஒன்பது வடிவங்களும் ஆகும்.

இலங்கையில் மிகப் பழமை வாய்ந்த சிவாலயங்களாக நகுலேச்சரம் வடக்கிலும்; திருக்கேதீச்சரம், முன்னேச்சரம் ஆகிய இரண்டும் மேற்கிலும், திருக்கோணேச்சரம்

*தெய்வ வசத்தால் தானாகக் கிடைப்பதைக் கொண்டு மகிழ்ச்சியோடு இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலும்; தான்தோன்றியீச்சரம் வட மத்தியிலும்; தென்கோடியிலே, தெய்வந்துறையில் சந்திரசேகரம் என்னும் சிவஸ்தலமும் குறிப்பிடப்படுகின்றன. இவற்றில் திருக்கேதீச்சரம், சம்பந்தர், சுந்தரராலும்; திருக்கோணேச்சரம் சம்பந்தராலும் தேவாரம் பாடப்பெற்ற பெருமை வாய்ந்த சிவஸ்தலங்கள். திருக்கேதீச்சரத்தைக் கேது வழிபட்டு உய்வு பெற்றது. இத் தலத்தின் வரலாற்றினை, "தட்சிண கைலாய மான்மியம்" கூறுகிறது. மாசி மாதத்து மகா சிவராத்திரி என்றதும் எமக்கெல்லாம் நினைவிற்கு வருவது திருக்கேதீச்சர ஆலயமே என்பதைக் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்.

தட்சிண கைலாயமாக விளங்குவது திருக்கோணேச்சரம், முன்னேச்சரம் பிரம தேவரால் பூலோகத்திலுள்ள சீவகோடிகள் உய்வுபெறும் பொருட்டு பரார்த்தமாகப் பிரதிஷ்டை செய்து பூஜிக்கப்பட்டது. ஆதலால், முன்னேச்சரம், காசி விஸ்வநாதர் ஆலயத்திற்குச் சமமான தல விசேடம் பெற்றுத் திகழ்வதாகத் தட்சிண கைலாயபுராணம் கூறுகிறது. கீரிமலையில் அமைந்துள்ள நகுலேச்சரம், மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புடையது. நகுல முனிவரின் பிதிர்ச்சாபம் இங்குள்ள புனித தீர்த்தத்தில் மூழ்கியெழ நீங்கப்பெற்று, அம் முனிவரின் கீரிமுகம், மனித முகமாக மாறியமை குறித்து, புராணங்கள் கூறுகின்றன. தான்தோன்றியீச்சுரர் ஆலயங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டிசுட்டானிலும்; மட்டக்களப்பு, கொக்கட்டிச் சோலையிலும் உள்ளன. இவை சுயம்புலிங்கமாய்த் தோன்றிய திருத்தலங்கள். இலங்கையின் பல பாகங்களிலும் பல சிவஸ்தலங்கள் உள்ளன. இச்சிவஸ்தலங்களில் மகாசிவராத்திரி வெகு சிறப்பாக அனுட்டிக்கப்படுகிறது. கொழும்பிலுள்ள பொன்னம்பலவாணேசர் ஆலயத்திலும் சிவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

ஒருமுறை அமிர்தம் எடுப்பதற்காகத் திருப்பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்தார்கள். அப்பொழுது அங்கிருந்து ஆலகாலம் என்னும் கொடிய விஷம் வெளிப்பட்டது. யாவரையும் அழிக்கும் தன்மை வாய்ந்த விஷம் தேவர்களைத் துரத்த, அவர்கள் ஓடோடிச் சென்று சிவனைச் சரண் அடைந்தார்கள். நமசிவாய, நமசிவாய என்று பாஞ்சாட்சர மந்திரத்தை ஓதிக்கொண்டு சிவனைப் பணிந்து வணங்கினர். கருணாமூர்த்தியான சிவபெருமான் தேவர்களையும் ஏனைய சீவராசிகளையும் காக்கத் திருவுளங்கொண்டு, அந்த ஆலகால விஷத்தை எடுத்து தாமே தம் வாயினுட் போட்டவேளை, அருகில் இருந்த பார்வதிதேவியார், அந்த விஷம் சிவனின் வயிற்றிற்குள் செல்லவிடாது தடுப்பதற்காக சிவனின் தொண்டையிலுள்ள அன்னக் குழாயை அழுத்திப் பிடித்தார். அப்போது விஷம் சிவபெருமானின் கழுத்திலேயே தங்கிவிட்டது. அவர் நீலகண்டர் ஆனார்.

இந்த ஆலகால விஷம் எவரையும் பாதிக்காமல் இருப்பதற்காக, தேவர்கள் எல்லோரும் அன்றைய தினம் சிவபெருமானை நோக்கி உபவாசம் இருந்து, இரவு முழுவதும் கண்விழித்து உறங்காமல் எல்லாம் வல்ல எம்பெருமானைத் தியானித்தபடி இருந்தார்கள். இந்தப் புனித நாள்தான் மகா சிவராத்திரி என்று அனுட்டிக்கப்படுகிறது என மற்றொரு வரலாறு உண்டு.

உலக மக்களுக்கு வருகின்ற துன்பங்கள், துயர்களைத் தாம் ஏற்று, அவர்களைக் காத்து அருளுகின்ற கருணைத் திறன் வாய்ந்தவர் இறைவன். அதனால்

*இறைவனிடம் இதயம் நூற்றுக்கு நூறு பதியுமானால் இறைவனைக் காணலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பசுபதி ஆனார். பிறர் துன்பங்களைக் கண்டு இரங்கி, அவற்றைப் போக்க நாமும் முயலவேண்டும் என்பதனை இறைவன் இவ்வாறு நமக்கு உணர்த்தியுள்ளார் என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

மகாசிவராத்திரி விரதம் மிகவும் மகத்தானது. அன்று அதிகாலையில் எழுந்து, நீராடி, நித்திய கருமங்களை முடித்து சிவபெருமானை வழிபாடு செய்ய வேண்டும். பகல், இரவு ஆகிய இரண்டு காலங்களிலும் உபவாசம் இருந்து, கண்ணுறங்காமல் சிவனைத் தியானிக்க வேண்டும். பஜனை, கூட்டுப்பிரார்த்தனை, புராணபடனம், பூசை, ஆராதனை, சத்சங்கம் மற்றும் நற்செய்கை, நற்கருமங்களுடன் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுதல் அவசியம். வில்வைத் தழைகளால் சிவனை அர்ச்சித்து வழிபடுதல் மிக உகந்தது. மறு நாட்காலை புனித தீர்த்தமாடி, பாரணம் செய்து இயன்ற தான தருமங்களையும் செய்து விரதத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.

"அன்புசிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

"அன்பே சிவம்" எனத் திருமூலர் கண்ட உண்மையைச் சிந்தையில் கொள்வோமாக.

## பழனிக்குக் கொடை

ஆற்றங்கரையினில் அமர்ந்து மக்கள் துயர் துடைக்கும்
மாமுருகனே! சந்நிதிப்பதியிலுறை வேலவனே
பக்தியுடன் வரும் பக்தர் துயர்தீர்த்து - அருள்
பாலிக்கும் கந்தனே கடம்பனே.

எடுத்த காரியம் சிறப்பாக அமைய எம்சிந்தையிலிருந்து
அருள்புரியும் சரவணபவனே! இன்னல்கள் ஒழிந்து
வறுமைநீங்க இந்நாடு வளம்பெற உனது திருவடிகளைப்
பணிந்து வேண்டுகின்றேன் முருகா!

இதயக் கோவினிலே வீற்றிருக்கும் வேலவனே
ஆண்டியான உன்கோலம் பழனிக்குக் கொடையப்பா!
யாருமற்ற மலையினிலே வெற்றுடலும் அழகப்பா!!
கோபத்திலும் உன் அழகு கோடி கோடி கோடியப்பா!!!

மாம்பழமும் உனக்கென்றே அண்ணனும் நீட்டுகின்றான்
அத்தனையும் நாம்தருவோம் ஆறிக்கோபம் வாரும் ஐயா!
தாயாரும் கெஞ்சுகின்றார்! தந்தையாரும் அழைக்கின்றார்!!
பக்தர்களும் வேண்டுகின்றோம்; கோலம்பூண வாரும் ஐயா!!

-திருமதி நாகேஸ்வரி கந்தசாமி-

*இறைவனிடம் பயம் ஏற்பட்டாலன்றி நல்லொழுக்கம் உண்டாகாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்



[விரிவான பொருளுரையும் தெளிவுரையும்]

முனைவர் ஆ. ஆனந்தராசன்

### 54. உயிர் அருளோடு சேர்ந்து வாழும் ஒற்றுமை

ஊன் உயிரால் வாழும் ஒருமைத்தே; ஊனொடுஉயிர்
தான் உணர்வோடு ஒன்றாம் தரம்.

**பொருள்:**

உடம்போடு சேர்ந்து நிற்பதாகிய உயிர் நிறைந்த ஞானமாகிய திருவருளோடு பிரிப்பின்றிக் கூடி வாழ்கிறது. திருவருளோடு உயிர் சேர்ந்து வாழும் ஒற்றுமை எது போன்றது எனில், உயிரோடு கூடி வாழும் உடம்பு அந்த உயிரோடு கொண்டுள்ள ஒற்றுமையைப் போன்றது ஆகும்.

**சொற்பொருள்:**

ஊனொடு உயிர்- உடம்போடு கூடி நிற்பதாகிய உயிர், தான்- தான்,உணர்வோடு- அறிவு வடிவான திருவருளோடு, ஒன்றாம் தரம்- ஒன்று பட்டு வாழும் நிலை, ஊன்- உடம்பானது, உயிரால்- உயிரோடு, வாழும்- கூடி வாழும், ஒருமைத்து ஒற்றுமையை ஒப்பதாகும்.

**விளக்கம்:**

உயிர் உடம்பிற் கலந்து தான் சிறிதும் புலப்படாமல் உடம்பே உள்ளது என்று சொல்லும்படி அதனோடு ஒற்றுமைப்பட்டு நிற்கிறது.

உயிரும் உடம்பும் பொருளால் இரண்டு என்ற தன்மை அங்கே இல்லை. இவ்வாறு இரு பொருள்கள் பிரித்தறிய வாராதபடி இயைந்து நிற்பின் அந்த ஒற்றுமைத் தொடர்பு அத்துவித சம்பந்தம் என்று சொல்லப்பெறும்.

இம்முறையில் உடம்பு உயிரோடு கூடி நிற்பதாகிய தொடர்பு அத்துவிதம் எனப் படுகிறது.

உடம்புக்கும் உயிருக்கும் இடையே உள்ள இந்தத் தொடர்பே உயிருக்கும் திருவருளுக்கும் இடையே உள்ளது. திருவருள் உயிரில் நீக்கமறக் கலந்திருப்பினும் அதன் இருப்புச் சிறிதும் புலப்படாமல் உயிர் ஒன்றே உள்ளது என்று சொல்லும்படி உயிரோடு ஒற்றுமைப்பட்டு நிற்கிறது.

பரம்பொருளை அறிந்துகொள்ள விரும்புபவன் உலக விவகாரங்களை ஒதுக்கித் தள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்புக்கென்று தனியே செயலில்லை. உயிர் செலுத்தவே அது செயற்படும். அதுபோல உயிர்தானே தனித்து நின்று அறிவதில்லை. திருவருள் உள் நின்று அறிவிக்கவே உயிர் அறிவதாகும். திருவருள் இயக்கவே உயிர் செயற்படுவதாகும். சுருங்கக் கூறினால், உயிரின்றி உடலுக்கு வாழ்வில்லை; அதுபோலத் திருவருள் துணையின்றி உயிருக்கு வாழ்வில்லை. உயிருக்கு வாழ் முதலாகிய பொருள் அருளே என்பது இதனால் விளங்கும்.

உயிர் உடம்பின் உள்ளாகத் தன்னை அறிதல் போலத் தன்னுள்ளே இருப்பதாகிய திருவருளை அறிதல் வேண்டும். திருவருள் எப்பொழுதும் தன்னிடத்தே பிரிப்பின்றி உள்ளது எனவும், அறிவு விளக்கத்திற்கு அதன் துணை இன்றியமையாதது எனவும் உணர்தல் வேண்டும்.

## 55. பளிங்கிற்குப் பகலவன் போல உயிர்கட்குத் திருவருள்

தன்னிறமும் பன்னிறமும் தான் ஆம் கல் தன்மைதரும்
பொன்னிறம் போல் மன்னிறம் இப் பூ.

**பொருள்:**

பளிங்குக் கல் தனக்குப் பக்கத்தில் உள்ள பல பொருள்களின் நிறங்களையும் கவர்ந்து அப் பன்னிறங்களையே தன் நிறமாகக் காட்டி நிற்கும். இனி, சூரியன் உச்சியில் வரும்போது, பக்கத்தில் பல பொருள்கள் இருப்பினும் பளிங்குக் கல் அவற்றின் நிறங்களைக் கவராமல் தன் ஒளியை மட்டுமே தோற்றி நிற்கின்ற நிலையும் உண்டு.

இங்ஙனம், பிற பொருள்களின் நிறத்தைக் காட்டி நிற்றலும், தனது நிறத்தை மட்டும் காட்டி நிற்றலும் ஆகிய இரு தன்மைகள் பளிங்கிற்கு உண்டு என அறியலாம். பளிங்கிற்கு அவை முறையே பொதுவியல்பும், தன்னியல்பும் ஆகும்.

அவ்விரு தன்மைகளையும் பளிங்கிற்குத் தருவது சூரியனது ஒளியேயாகும். சூரியவொளி இன்றேல் பளிங்கு பிற பொருள்களின் நிறங்களைக் கவர்தலும், தனது ஒளியை மட்டும் தோற்றி நிற்றலும் ஆகிய இரண்டும் இல்லையாம்.

அச் சூரியவொளி போன்றது இறைவனது திருவருள். திருவருளின் உதவியாலேயே உயிர்களுக்குக் கட்டு நிலையில் பொதுவியல்பும், முத்தி நிலையில் தன்னியல்பும் விளங்குகின்றன.

**சொற்பொருள்:**

இப் பூ- இவ்வுலகில், மன்நிறம்- இறைவனது திருவருள் (நிற்கும் முறைமை), தன் நிறமும்- தனது நிறத்தையும், பன்னிறமும்- பிற பொருள்களின் நிறத்தையும், தான்ஆம்- தன்னிடத்தே காட்டி நிற்கும், கல்- பளிங்குக் கல்லிற்கு, தன்மை தரும்- அவ் இரு தன்மையையும் கொடுக்கின்ற, பொன் நிறம் போல்- சூரியனது ஒளி நிற்கும் முறைமை போன்றதாகும்.

**விளக்கம்:**

ஒரு பொருளுக்கு மற்றொரு பொருளின் சேர்க்கையால் செயற்கையாக வருகிற இயல்பு பொதுவியல்பு எனப்படும். அவ்வாறின்றி ஒரு பொருளுக்கு இயற்கையாய் உள்ள இயல்பு தன்னியல்பு எனப்படும். அதனை உண்மையியல்பு எனவும் கூறுவர்.

*தூய்மையான உள்ளத்தில் தோன்றும் எல்லா எண்ணங்களும் இறைவனின் குரல்தான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் பிறப்பு நிலையில் உடம்பின் சேர்க்கையைப் பெற்று நிற்கிறது. உடம்பின் சேர்க்கையால் உயிருக்குப் பிறப்பும் இறப்பும் நிகழ்கின்றன. பிறத்தலும் இறத்தலும் ஆகிய இவை உயிருக்குப் பொதுவியல்பு ஆகும். மேலும் உடம்பிலுள்ள ஐம்பொறி முதலிய கருவிகளின் சேர்க்கையால் சிற்றறிவாகிய மயக்க அறிவு உண்டாகிறது. இந்தச் சிற்றறிவும் உயிருக்குச் செயற்கையாக வருகிற பொதுவியல்பேயாகும். இன்னும் உயிர் உடம்பிற் கட்டுண்டு உடம்பையே தானாக நினைக்கிறது. உடம்பின் தன்மைகளையே தன்னுடைய தன்மைகளாகக் கருதுகிறது. அஃதாவது, பசி, தாகம், உறக்கம், விழிப்பு முதலியவை உடம்பிற்கு உரியவை. அவற்றைத் தன்னுடைய இயல்புகளாகக் கொள்கிறது. இவை எல்லாம் உயிருக்குப் பொதுவியல்புகளேயாகும்.

திருவருள்தான் உயிர்களுக்கு உடம்பைக் கூட்டி உலக வாழ்வில் செலுத்தி மேற் கூறிய பொதுவியல்புகளை அடையும்படி செய்கிறது.

பொதுவியல்பு என்பது இடையில் வருவது. அவ்வியல்புக்கு எப்பொருளின் சேர்க்கை காரணமோ அச் சேர்க்கை நீங்கும்போது அவ்வியல்பும் நீங்கி விடும். அம்முறையில் மலங் களின் சேர்க்கையாகிய கட்டு நிலை நீங்கும்போது பிறப்பு, இறப்பு, சிற்றறிவு முதலிய பொதுவியல்புகள் நீங்கிவிடும்.

பொதுவியல்பு நீங்கினால் உயிர் தனது உண்மையியல்பாகிய தன்னியல்பைப் பெறும். வியாபக அறிவு (விரிந்த அறிவு) என்பது உயிருக்கு உரிய தன்னியல்பாகும். கட்டுநிலை நீங்கி முத்தி நிலையில் உயிர் தனக்குரிய இயற்கையாகிய வியாபக அறிவைப் பெறும். சிற்றறிவால் உலகப் பொருள்களை அறிந்து வந்த சிறுமை நீங்கித் தனது வியா பக அறிவால் இறைவனை அறிந்து அனுபவிக்கும்.

திருவருள்தான் பக்குவமுற்ற உயிருக்கு மும்மலங்களின் தொடர்பை அறுத்து, உடம்பின் சார்பை நீக்கி, அவற்றால் உண்டான பொதுவியல்பாகிய சிற்றறிவையும் ஒழித்துத் தன்னியல்பாகிய வியாபக அறிவை விளங்கச் செய்து இறைவனை உணரும்படி செய்கிறது.

உயிருக்குப் பொதுவியல்பு, தன்னியல்பு என்னும் இரண்டு இயல்புகள் உள்ளன என்பதும், பளிங்கிற்குப் பொதுவியல்பும் தன்னியல்பும் சூரியனது ஒளியால் விளங்குவது போல உயிரிடத்து அவ்விரு வகை இயல்புகளும் இறைவனது திருவருளாலேயே விளங்குவன என்பதும் இச்செய்யுளில் உணர்த்தப்பட்டன.

இதனால் உயிர்கட்குப் பெத்தம், முத்தி இரண்டினையும் தருவது திருவருளே என அறிதல் வேண்டும் என்பது கூறப்பட்டது.

**குறிப்பு:**

கல் என்பது பளிங்குக் கல்லைக் குறிக்கும். பொன் என்பதற்குச் சூரியன் என்பது பொருள். நிறம் என்பது ஒளி. சூரிய ஒளியைப் பொன்னிறம் என்றார்.

மன்- தலைவன்; இங்கு இறைவனைக் குறிக்கும். இறைவனது ஒளியாகிய திருவருளை மன்னிறம் எனக் குறிப்பிட்டார். பூ- உலகம்.

(தொடரும்...

*இறைவன் திருவுள்ளத்திற்கு தன்னை ஒப்படைப்பதே தியாகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர்களும் அற்புதங்களும்

– திரு வீ. பாலகிருஷ்ணன் அவர்கள் –

சைவ சித்தாந்தத்தின் தெளிவே சைவ சமயமாகும். இங்கே காணப்படும் வேதாந்தங்கள், சமய கிரியைகள் எல்லாம் மனித வாழ்விற்கு மிகவும் இன்றியமை யாதது. இதன்படி பல சித்தர்கள் உருவாகி இருக்கின்றார்கள். இந்த வரிசையில் யாழ் மண்ணில் உதித்த செல்லப்பா சுவாமிகளும் யோகர் சுவாமிகளும் பல சித்துக்கள் செய் திருக்கிறார்கள். சமயப் பண்பாட்டின்படி சைவ அனுசரணையுடன் வாழ்வது ஆத்மாவுக்கு இன்பம் கொடுக்கிறது. எதை நாம் நினைக் கிறோமோ அது அப்படியே நடக்கவேண்டும் என நினைப்பதுதான் மனித இயல்பு. பசி, பட்டினி இருந்தாலும் இறைவனை வணங்கு வோமானால் நற்பயன் கிடைக்கும். மன அமைதிக்காக ஆலயம் செல்கின்றோம். ஆனால் வீட்டில் இறைவனின் படத்தை வைத்து நாள்தோறும் பூசித்து வந்தால் நினைத்ததைச் சாதிக்கலாம்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற அமுத வாக்கின்படி சைவ மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இறை வனையோ சித்தர்களையோ தரிசனம் செய் தால் மன நிறைவுண்டாகும். மனத் தூய்மை யுடன் இறைவனைத் தொழுவது மிகவும் இன்றியமையாதது. கொழும்புத்துறையில் வாழ்ந்த யோகர் சுவாமியின் அற்புதங்கள் அநேகம்.

ஒரு பெரிய செல்வந்த குடும்பம் இருந்தது. செல்வந்தரின் மனைவி யோகர் சுவாமிகளின் பக்தர். ஒருநாள் கணவனும் மனைவியும் காரில் சென்று கொண்டிருந்தனர். அப்போது யோகர் சுவாமி களின் வீட்டைத் தாண்டிப் போகவேண்டி இருந்தது. அப்போது மனைவி கணவனிடம் கொஞ்சம் காரை நிப்பாட்டுங்கள். யோகர் சுவாமியைப் பார்த்துவிட்டு வருகிறேன் என் றார். கணவர் அதை உதாசீனப்படுத்தி காரைச் செலுத்த முயன்றபோது கார் திடீரென்று நின்றுவிட்டது.

அப்போது கணவன் மனைவியை சினந்து கொண்டு காரைத் திருத்தினார். ஆனால் கார் ஓடவில்லை. உடனே மனைவி வருத்தமடைந்து மீண்டும் கேட்டார். சுவாமி யின் வீட்டின் அருகிலேதானே கார் நிற்குது. நீங்கள் காரைத் திருத்துங்கள்- நான் சுவாமி யைப் பார்த்துவிட்டு வருகிறேன் என்று கேட்டார். கணவன் சினந்துகொண்டு சரி போய் வா என்றார். உடனே மனைவி காரை விட்டு இறங்கி யோகர் சுவாமியின் இல்லத் திற்குச் சென்று அவரை வழிபட்டார். யோகர் நிஷ்டையில் இருந்தபடி சரி நீ போய் காரில் ஏறு எல்லாம் சரியாகும் என்றார். உடனே மனைவி வந்து காரில் ஏறியதுடன் கண வனைப் பார்த்து சரி இனிமேல் காரை எடுங் கள் கார் ஓடும் என்றார். கணவன் காரை "ஸ்டாட்" பண்ணினார். கார் ஓடத்தொடங்கி யது. அப்போதுதான் கணவன் மனைவியின் பக்தியையும் யோகர் சுவாமிகளின் அருளை யும் அறிந்தார். கடவுளை நம்பினோர் கைவிடப் படமாட்டார் என்பது தெளிவாகின்றது. இதே போன்று செல்லப்பா சுவாமிகள் நல்லூர்

*கடவுள் நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் ஒரு நாணயத்தின் இரு புறங்கள்போல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரடியிலிருந்து ஒருநாள் நல்லூர் உற்சவ காலத்தில் சன நடமாட்டம் அதிகமாக இருந்த வேளையில் திடீரென்று தன் வேட்டியைக் கசக்கிக் கசக்கி "ஐயோ! கதிர காமத்தில் நெருப்படா" என்று குரல் எழுப் பினார். இதைப் பார்த்த அடியார்கள் இவருக் குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று ஏளனம் செய்தார்கள்.

அடுத்தநாள் கதிர்காமத்தில் இருந்து வந்த அடியார்கள் "கதிர்காம கோயில் திரைச்சீலை தீப்பிடித்தபோது செல்லப்பா சுவாமிகள் அதனை அணைத்தார்" என்று கூற அங்கிருந்த ஒருவர் "செல்லப்பா சுவாமி கள் இங்கே அல்லவா இருந்தார். அது எப்படி நடந்திருக்கும்" என்று ஐயம் எழுப் பினர். அதிலிருந்து செல்லப்பா சுவாமிகளின் சித்து விளையாட்டினை அனைவரும் நன்கு உணர்ந்தார்கள். இதேமாதிரியான பல அற் புதங்கள் நடந்திருக்கின்றன. இறை பக்தி உள்ளவர்களுக்கு இறைவன் கருணை கிடைக்கும் என்பது உண்மை. ஒரு கைம் பெண் தன் ஒரே மகனை இந்தியாவிற்கு படிக்க அனுப்பினார். ஒருநாள் அந்தப் பையன் படித்த இடத்தில் ஒரு கலம்பகம் ஏற்பட்டது. அந்தத் தாய் யோகர் சுவாமிகளி டம் போய் தன் மகனைப்பற்றிக் கூறினார். உடனே "பயப்படாதே. போய்விட்டு வா" என்று யோகர் சுவாமி கூறி அனுப்பினார். ஓரிரு தினங்களில் மகன் கடிதம் அனுப் பினான். "அம்மா எங்கள் கல்லூரியில் தீப் பிடித்து யோகர்சுவாமி வந்து தீயை அணைத் தார்" என்று கடிதம் அனுப்பினான். தாய் மனம் யோகர் சுவாமியின் அற்புதத்தை மறக்க முடியாது என்று கண்ணீர் மல்கியது. ஆகவே நாம் உள்ளன்போடு இறைவனை வணங்கி வருவோமானால் எந்த இடர்களை யும் சமாளிக்க முடியும். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற அமுதவாக்கிற்கு கட்டுப்பட்டிருப்பதே சாலச்சிறந்ததாகும். இறை வன் பக்தி உள்ளவர்களையும் இல்லாதவர் களையும் எந்நேரமும் காப்பாற்றிக்கொண்டே இருக்கிறான். திருடன் களவு செய்யும்போது இறைவா என்னைக் காப்பாற்று என்று மன்றாடு கின்றான். அவன் அகப்படாமலும் இருக் கிறான். ஆகவே இறைவன் சந்நிதானத்தில் எல்லோரும் சமம். இறைபக்தி அதிகரிக்க அதிகரிக்க நாம் நினைத்த அனைத்துக் காரியங்களும் கைகூடும்.

ஆறுமுகநாவலர் கூறிய சைவ விதி களின்படி முற்று முழுதாக எம்மால் ஒழுக முடியாமல் இருந்தாலும் மனதில் தியானம், இறைபக்தி, அமைதி, பண்பு எல்லாவற்றுட னும் ஒருவர் வாழவேண்டும். அப்படி இருந் தால் இறைவன் அருளைப் பெறலாம். பிறருக் குத் துன்பம் விளைவிக்காமல் தீய சக்தி களில் இருந்து விடுபடுவோமானால் இறை வன் எங்களைக் காப்பாற்றுவார்.

தீய எண்ணங்களைத் தவிர்த்து, இன்சொல் கூறி - பண்புடையோராக வாழ்பவர் களே உண்மையான சைவ சமயிகளாகும். இறைவனை நம்புவோம். நம்பிக்கை ஒரு போதும் வீண்போகாது.

## ஆன்மிகச் சிந்தனை

மனத்தூய்மைக்கும் ஆன்மிக விழிப்பிற்கும், தெய்வத்தின் துணையைத் தேடுவதற்காகவுமே பிரார்த்தனை செய்கின்றோம். அதுவே ஆன்மிகப் பிரார்த்தனையின் முக்கிய நோக்கம். உண்மையான பக்தன், பணம், புகழ் எதையும் இறைவனிடம் வேண்டுவதில்லை; இவையெல்லாம் நிலையற்றவை என்பது அவனுக்குத் தெரியும். எனவே நிலையான ஆன்மிகச் செல்வம் ஒன்றையே அவன் இறை வனிடம் கேட்கிறான். புலன்களின் பிடியிலிருந்து தன்னை விடுவிக்கும்படியும், அறியாமை இருளின் பயங்கரத் திலிருந்து உண்மைப் பேரொளிக்கு இட்டுச்செல்லும்படியும் அவன் கடவுளிடம் வேண்டுகிறான்.

*உயிர்களுக்குச் செய்யும் தொண்டே கடவுளுக்குரிய தொண்டு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 05

## இறப்பவர்களும் நிரந்தரமானவர்களும்

### 05. சமூக இணைப்பா தனியான போராட்டமா?

ஆன்மீக சாதகனின் போராட்டம் இயற்கையை முழுமையாக எதிர்கொள்வதிலும், வெளியே சமூகத்தை எதிர்கொள்வதிலும்தான் தங்கி உள்ளது. "இந்த முயற்சியில் எமது பக்கத்தில் ஒரு பிழை இருக்கக் கூடுமா?", "தகுந்த சிந்தனை இன்றி நாம் விட்ட ஒரு பெரிய தவறா?" என்ற சந்தேகங்கள் வயது முதிர முதிர எமது மனத்தில் தோன்றக்கூடும். "நாம் இப்போது தேடிக்கொண்டு இருப்பதைவிட வித்தியாசமான எதுவும் இல்லையா? என்றும் நாம் மனித சமுதாயத்தை ஒரு மதிப்பீடு செய்துள்ளோம். நாம் மனித சமூகத்தோடு உள்ள உறவையும், முழு உலகத்தையும் அவ்வாறு ஒரு மதிப்பீடு செய்துள்ளோம். அத்தியாவசியம் ஆயின், நாம் அவற்றை ஒரு புயலில் எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்ற முடிவுக்கும் வந்துள்ளோம். ஆன்மீக வெற்றியைச் சாதிக்கும் நோக்கத்திற்காக அவை தணிக்கப்பட்டோ தூக்கி எறியப்பட்டோ கைவிடப்பட்டோ இருக்க வேண்டும். ஆனால் இது சரியான, பொருத்தமான மனப்பாங்கு ஆகுமா? எமக்கு ஆதரவாக இருந்தவர்களையும், நாம் சில கடப்பாடுகளை நிறைவேற்றவேண்டியவர்களையும், பொருள்களையும் நாம் எமது யுத்தத்தில் எதிர்கொள்ள முடியுமா? இவ்விடயமே ஒழுக்க இயல் என்று அழைக்கப்படுகிறது. வெளிச் சூழ்நிலையோடு கூடிய யுத்த உணர்வைத் தவிர ஒரு நல்ல நடத்தை, உதவி மனப்பான்மை என்பனவும் உண்டு அல்லவா? புலன் உலகின் எமது உறவுகளோடு அதனை நாம் சிநேகித பூர்வமாக இணைத்துக்கொள்வது பற்றிச் சிந்திக்க வேண்டுமா? அல்லது நாம் எல்லாவற்றோடும் போரிட வேண்டுமா? உலகத்தையும் மனித சமூகத்தையும் பொறுத்த வரையில் எமது உணர்வும், மனப்பான்மையும் எவ்வாறு அமைய வேண்டும்? சமூகத்தை இணைத்துக் கொள்வது ஒரு விடயம். யுத்த உணர்வோ மற்றொரு விடயம் ஆகும். எமது ஆயுதங்களின் ஆற்றலோடு இவற்றை முற்றாக அடக்கி வைக்க வேண்டுமா? அல்லது எமது பக்கத்தில் உள்ள இந்த மனப்பான்மை ஒரு தவறானதாக அமையுமா?

### 06. ஒழுங்கின்மையை உருவாக்க வேண்டுமா?

அர்ச்சுனன் அந்த வினாவை இவ்வாறு முன் வைக்கிறான்: இது ஒரு பிழை அல்லவா? எமது எதிரிகளைப்போல எமது சகோதரர்களையும், மருமக்களையும், உறவினர்களையும், பெரியோர்களையும், ஆசிரியர்களையும் எதிர்கொள்ளுவதற்கு நாம் எதிர்பார்க்கப்படுகின்றோமா?

*மனிதனிடம் தத்துவ குணம் ஓங்கும்போது, இறை காட்சிக்காக அவன் ஏங்குகிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தைச் சிநேகமற்ற ஒரு சூழலாக நாம் எதிர்கொள்ள வேண்டுமா? இது ஒரு பிரச்சினையே ஆகும். இரண்டாவதாக, ஏனைய மனிதர்களுக்கு முன்னால் இதனை உதாரணமாக நாம் அமைத்துக் கொள்வோம் ஆயின் இயல்பாகவே அது ஓர் அனுமதிக்கத்தக்க மனப்பான்மை என அவர்களும் பின்பற்றுவார்கள் என்றே நாம் எதிர்பார்ப்போம். உலகம் இந்த வழியில் தொடரும்போது அது முழுச் சமூகத்தின் குழப்பமாகவும், எல்லா மனித விழுமியங்களின் அழிவாகவும் படைப்பு நோக்கத்தின் ஒரு தோல்வியாகவும் முடியும். அது நாம் செய்கின்ற ஒரு பாபம் இல்லையா? வெற்றி என்று அழைக்கப்படுவதன்பேரிலும், நாம் எம் முன்னே தர்மம் அல்லது நீதி என வைத்துக்கொள்ளும் ஒரு கருத்தின்பேரிலும் மனித சமூகத்தில் நாம் ஒழுங்கின்மையை உருவாக்க வேண்டுமா?

**07. அடிப்படைத் தவறு.**

எனினும், இன்னொரு பிரச்சினை உள்ளது. இந்த யுத்தத்தில் நாம் வெற்றிபெறுவது நிச்சயம் ஆனதா? உலகமோ மிகுந்த பலம் உள்ளது. அதுமட்டுமன்றி மனித சமூகம் தனது அமைப்பில் மிகச்சிக்கலானதாக இருக்கின்றது. நாமே வெற்றியாளர் ஆவோம் என்பதில் நாம் நிச்சயமாக உள்ளோமா? அல்லது அதற்கு மாறாகவும் முடியலாமா? இயற்கையின் ஆற்றல்களினால் நாம் வெல்லப்படக்கூடும். அல்லது சமூகத்தின் ஒழுக்கத்தால் நாம் அழிக்கப்படக் கூடும். சூழ்நிலையிலுள்ள இந்த எல்லா அம்சங்களையும் நாம் சிந்திக்கின்ற போது எமது இந்தச் சிந்தனைகள் எல்லாம் பயனற்ற முயற்சி என்றே எனக்குத் தோன்றுகின்றது. ஓர் அடியை எடுத்து வைக்க முன்பே நாம் மூன்று தடவை சிந்திக்க வேண்டி உள்ளது. நாம் ஈடுபட்டுள்ள இந்த யுத்தத்தின் முழுப் பார்வையிலும் ஓர் அடிப்படைத் தவறு இருப்பதாக எனக்குத் தோன்றுகின்றது. அர்ச்சுனனோ தனது ஊக்கம் முயற்சி, ஆவல் என்ற ஆயுதங்களைப் போட்டுவிட்டு "நான் எதுவும் செய்யப்போவது இல்லை" என்று கூறிவிட்டான். அத்துடன் அவன் சாதாரண மனிதனுடைய உணர்வுகளுக்கும், புலன் வழிப்பட்ட திருப்திக்கும் மாறும் அளவுக்குத் திரும்பி வந்துவிடுகின்றான்.

**08. கடவுளும் வாதங்களும்.**

பகவத்கீதையின் முதலாவது அத்தியாயத்தில் ஒரு சில வார்த்தைகளில் குறிப்பிடப் பட்டுள்ள பிரச்சினைகள் சாதாரண பரிகாச வார்த்தைகளோ எங்களை ஊக்கப்படுத்தக்கூடிய வெறும் கதைகளோ அல்ல. மனித இயல்பில் சர்வ சாதாரணமாக உள்ள பிரச்சினைகளே இவை ஆகும். அவை எனது பிரச்சினைகளோ உனது பிரச்சினைகளோ அல்ல. மனிதனாக உள்ள எவன் ஒருவனும் இக்கட்டங்களுக்கு ஊடாகவே கடந்து செல்லவேண்டி உள்ளது. புலன்களோடு கூடிய உலகத்தோடும், மனித சமூகத்தோடும் ஒருவர் கொண்டுள்ள உறவின் வெளிச்சத்தில் அவர் இலாப நட்டங்களின் அடிப்படையில் சிந்திப்பது இல்லை என்று எவரும் மறுக்க முடியாது. இந்த உலகத்திலும், எல்லாவிதமான உலக நடவடிக்கைகளிலும் உள்ள இந்தச் சிக்கலான மனித உறவுகளில் நாம் சிலவற்றை விரும்பியும், சிலவற்றை வெறுத்தும் நடந்துகொள்ள எமக்கென்று வழிகளை நாம் வைத்திருக்கின்றோம். இவ்வாறான அமைப்புக்குள் கடவுள் எவ்வாறு வருகின்றார்.

*இறைவனைச் சரணடைந்தவன் அவரால் பாதுகாக்கப்படுகிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சிந்தனையின் வரலாற்றில் பல சந்தர்ப்பங்களில் கடவுள் என்னும் கருத்து பயப்படுத்துகின்ற ஒரு காரணியாகவும் இருந்து வந்திருக்கின்றது. இந்த உலகில் எத்தனை மனிதர்கள் இருக்கின்றார்களோ அவ்வளவு கடவுள் பற்றிய கருத்துக்களும் இருந்து வரு கின்றன. கடவுளின் இருப்பையே மறுக்கின்றவர்கள் இருக்கின்றார்கள். அதன் காரணமாக எமக்குக் கடவுள் உள்ளமையைப் போதிய அளவு நம்புமாறு செய்ய, தகுந்த ஆதாரங்கள் இல்லை. எமது எல்லா வாதங்களும் இறுதியாகப் புலன்களின் அடிப்படையில் அமைந்தவை யாகவே இருக்கின்றன. தத்துவ ரீதியான தருக்கங்கள் தோற்றப்பாட்டு வாதங்கள் மட்டுமே ஆகும். அவையோ நாம் எல்லை கடந்த வஸ்துவை கற்பனை செய்வதைத் தொடக்கூட முடியாதனவாக உள்ளன. ஏனெனில், எல்லை கடந்த எது ஒன்றின் இருப்பையும் நிறுவும் ஆதாரங்கள் தோற்றப்பாட்டு வாதங்களைக் கொண்ட வழிகளால் அடைய முடியாது உள்ளன. கடவுள் பற்றிய கருத்துக்கு முழுமையாகவே சாத்தியம் இல்லை என்று கருதுபவர்களும் என்றும் இருந்தே வருகின்றனர். கடவுள் இருக்கலாம் அல்லாது இருக்காமலும் போகலாம். கடவுள் இருந்தாலும் கூட எம்மிடம் தற்போது உள்ள ஆற்றல்களைக் கொண்டு எங்களைப் புரிந்துகொள்ளுமாறு செய்வதும் சாத்தியமில்லை.

### 09. தன்னை இழக்கும் பயம்.

எனினும் அர்ச்சுனனது மனதில் உள்ள பிரச்சினைகள் மிகவும் தீவிரமானவை ஆகும். அதே வகையான பிரச்சினைகள் படிப்படியாக எமது மனங்களுக்கு உள்ளும் புகுந்து எமக்கு உள்ளே எம்மைப் பாதுகாப்பு இல்லாதவர்கள் ஆகவும், ஏக்கம் உள்ளவர் களாகவும் ஆக்கி வைக்கின்றன. ஆன்மீக சாதகர் ஒருவரின் ஏக்கம் ஆன்மீகப் பாதையில் சென்று வெற்றிபெறும் சாத்தியம் பற்றிய சந்தேகங்களினால் உருவாகின்றது. அந்தச் சந்தேகங்கள், ஒருவர் தான் ஆரம்பித்த அணுகுமுறை சரியானதா என்பதுபற்றி இருக்கலாம். அந்தச் சந்தேகங்கள் ஒருவர் உலகத்துக்கும் மனித சமூகத்துக்கும் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பற்றியதாக இருக்கலாம். முத்தி கிடைக்கின்றது என எடுத்துக் கொண்டால், ஒருவருக்கு என்ன நிகழும் என்பது பற்றியதாகவும் அது இருக்கலாம். இந்தச் சந்தேகங்கள் சாதாரணம் ஆனவை அல்ல. எங்கள் ஒவ்வொருவர் இடத்திலும் ஏதோ ஓர் அளவில் அப்படி யான சந்தேகங்கள் இருக்க வாய்ப்பு உண்டு. அத்துடன், கடவுள் எல்லாம் வல்லவர் என்றும், தெய்விக அனுபவம் ஒருவரது தனித்தன்மையை அழிப்பது என்றும் கூறுவதைவிட மனிதனின் அகங்காரத்தை அதிகம் மிரட்டக்கூடிய எதுவும் இருக்கமுடியாது எனலாம். எவரும் அதனை எதிர்பார்ப்பது இல்லை. ஒருவர் இயலுமட்டும் தன்னிடம் இருந்து அந்தச் சூழ்நிலையைத் தூரத்தே தள்ளியே வைத்திருப்பார். அதற்கு முற்றும் சாத்தியம் இல்லை என அவர் தனது கண்களை மூடி, ஓர் எல்லை இல்லாத எதிர்காலத்துக்கு அதனைப் பிற்போடுவார். அது கடவுளுடைய சமுத்திரமாக இருந்தாலும் கூட அவருக்குத் தன்னை இழப்பதைக் காட்டிலும் பெரிய பயம் வேறு எது இருக்கமுடியும்? அது அமுதக் கடலாக இருந்தாலும்கூட நாம் அதற்குள் அமிழ்ந்து போவதை விரும்பமாட்டோம்.

(தொடரும்...

*இறைவனைத் தவிர வேறு எதன்மீதும், யார்மீதும் பற்று வைக்காதீர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றொளியினில் விளங்கும் மேன்மை

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குப் பாயிற் கிடக்காமல் பாடும் சுகமளித்த, தாயிற் சிறந்த தயவான தத்துவனே, எனக்கு வாயில் திருநீறு போட்டுச் சுகமளித்த வல்ல பிரானே சிவபெருமான். அவன் தன்னுடைய நீங்காத பரிசுத்தமான அடியவர்கள் மூலமாகத் திருநீற்றினை நீடித்த வாழ்வு தரும் சஞ்சீவி மருந்தாக்குகின்றார். திருநீறு மருந்தாகும் உண்மைச் சம்பவம் இது:

**காசியப்பா**

எனக்கு வயது ஒன்பது இருக்கும். 1960ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு சம்பவம். பனைவளம் நிறைந்த பாங்கான ஊர் அளவெட்டி. இந்தப் பனந்தோப்பினைக் கடந்துதான் சதானந்தா பாடசாலைக்குச் செல்ல வேண்டும். நானும் நண்பனும் அவ்விடத்தடியால் சென்றபோது பின்னால் வந்த ஒருவர் கருங்குளவிகள் குடியிருந்த அந்தப் பொந்தினுள் ஒரு கல்லினை எறிந்துவிட, குளவிகள் நான்தான் எறிந்ததாக எண்ணி எனது தலையில் முழுமையாகக் கொட்டித் தீர்த்துவிட்டன. நான் சுருண்டு விழுந்தேன். என்ன செய்வதென்று தெரியாமல் நேராக எனது குலதெய்வமாகிய அலுக்கை ஞான வைரவ கோவிலுக்குச் சென்று வைரவ பீடத்தில் படுத்துறங்கி விட்டேன். பூஜைக்கு வந்தவர்கள் ஆச்சரியப்பட்டு என்னைத் தூக்கியபோது கண்கள் தெரியாதபடி முகம் வீங்கியிருந்தது. உடனடியாக "காசியப்பா" என்ற பார்வை பார்ப்பவரிடம் என்னை அழைத்துச் சென்றனர். மொட்டாக்குப் போட்டபடி காசியப்பா ஒரு தவசிரேஷ்டர்போல எழுந்தருளினார். என்னருகே வந்து, தலைமீது பரிசம் வைத்து, வடக்கு முகமாக என்னை இருத்தி, முருக்கமர இலையில் திருநீறு பரவி, அதன் காம்பினால் மந்திரம் எழுதி, அந்த மந்திரத்தை வாயிலே தானும் உச்சரித்து, மூன்று முறை என் வாயிலே செபிக்கப்பட்ட திருநீற்றினை இட்டு, நெற்றி-கண் முழுவதுமாகத் திருநீற்றினைப் பூசி, வீட்டுக்கனுப்பினார். அற்புதம் என்று சொல்லலாம். மரணப்பிடியில் இருந்த என்னை மனிதனாக்கினார். கண்கள் மீண்டும் பழைய நிலைக்கு வந்துவிட்டன. பார்வை தெளிவாயிற்று. உடலும் சமநிலையில் திருநீற்றால் வழமைக்குத் திரும்பிற்று. ஆறேழு குளவிகள் தலை, முகத்தில் கொட்டியிருந்தால் உயிர் பிழைப்பதே மிக அருமை. காசியப்பாவின் தவவலிமை - நயன மூலமாகவும், பரிச மூலமாகவும், மானச மூலமாகவும், வாசக மூலமாகவும் பலித்தது. இவருடைய பார்வை ஒன்றினாலேயே அளவெட்டி, திருநீற்றின் மேன்மைக்கு மேலும் பேறுபெற்றதெனலாம்.

**நாற்சார் வீடு**

இற்றைக்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த நமது பாரம்பரிய சமூகம் நாற்சார் வீடுகளைக் கிராமங்கள் தோறும் நிறுவுவதில் முனைப்புக் காட்டியுள்ளது. சூரியன் உள்ளே வந்து சுகம் விசாரிக்கவல்லதாகவும், திருநீற்று வாசனை அறையெங்கும் பரவி குற்றம்

*இறைவனைச் சார்ந்து இருக்கும்போதுதான் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கும்படியாகவும், சந்தனக் கல்லில் சந்தன மரக்கட்டையால் அரைக்கும்போது அதன் வாசனை ஆன்மீக வாலாயம் பொலிந்து இறைகடாட்சம் பெறுவதற்காகவும், நாற்சார் வீட்டின் மத்தியில் ஆரோக்கியமான முற்றக்கூடம், காய்தல், விடிதல், அரைத்தல், படித்தல், இடித்தல், பொங்கல், குளித்தல் ஆகிய தேவைகளுக்காக விடப்பட்டுக் கட்டியிருப்பார்கள்.

முக்கியமாக, மருந்தாகப் பாவிக்கப்படும் திருநீறு இந்த முற்றக்கூடத்திலேயே ஆக்குவார்கள். எப்படி? ஒவ்வொரு வீட்டிலும் மாட்டுத் தொழுவம் கட்டாயம் இருக்கும். அங்கே காலையில் போடப்படும் பசு மாட்டினது சாணியை எடுத்து, விறாட்டியாகத் தட்டி, நாற்சார் முற்றத்தில் காய வைத்திருப்பார்கள். முற்றமும், சுற்றமும், காற்றும் விறாட்டியைக் காய வைக்கும். காய்ந்த சாணி விறாட்டியை, சுத்தமான உமிப்படுக்கையில் கிடையாக வைத்து தணலாக்கி விடுவார்கள். விறாட்டி நீறாகி தட்டுக்களாக்கப்பட்டு மீண்டும் பசுப்பால் விட்டுக் குழைத்து, நாற்சார் முற்றத்தில் காய வைக்கப்படும். நன்றாகக் காய்ந்த பின்னர் பொடியாக்கிப், பொட்டலமாக்கி, சாமிப்படத் தட்டில் வைத்துப் பூஜித்து, தினந்தோறும் நெற்றியிலும் உடலெங்கணும் பூசி, வாயிலும் மூவேளை உட்கொண்டு வந்தால் எந்தவித நோயும் வந்தணுகாது.

**இணுவில்**

திருநீறு பொலிந்த இடம் இணுவில். எந்தச் சிறிய, பெரிய ஆலயத்திலும், ஒவ்வொரு பெரிய சிறிய வீட்டிலும் திருநீறு பொலியும் வண்ணம் அற்புதம் செழித்திருக்கும். அதேபோல ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களது நெற்றியிலும் திருநீறு வெற்றி கொள்ளும். பெரிய சந்நியாசியார் அவர்கள் திருநீற்றில் அபிஷேகித்தவர் போலக் காட்சி தந்த பேறதனால் இணுவில் என்ற ஆன்மீகப் பதியானது, திருநீற்றிலே விளைந்து மகிமை பெற்றுள்ளது. இன்று வரை இணுவிலுக்கு யாதொரு குறையும் இல்லையே.

**அளவெட்டி**

மாருதப்புரவீக வல்லி காலம் தொடக்கம், சுப்பையர் இராமலிங்க ஐயர், மயில்வாகன உபாத்தியாயர் போன்றோர் அடையாளப்படுத்திய திருநீற்று மகிமையானது கும்பழாவளைய்யை நடுநிலைப்படுத்திய அனைத்து ஆலயங்களிலும் பொலிந்து காணப்படுகிறது. தாமு அப்பா குடும்பம், சரவணமுத்துச் சட்டம்பியார் குடும்பம், முருகேசு வாத்தியார் குடும்பம், ஆச்சி முத்தக்கா குடும்பம், சின்னப்பர் குடும்பம், கணபதியார் குடும்பம், நாகமுத்தர் குடும்பம், தம்பிராசர் குடும்பம், சேதுப்பிள்ளை அக்கா குடும்பம், விஸ்வநாத உபாத்தியாயர் குடும்பம், கண்பரியாரியார் குடும்பம், செல்லையா உபாத்தியாயர் குடும்பம், சுந்தரம்பிள்ளை உபாத்தியாயர் குடும்பம், ஆறுப்பிள்ளை உபாத்தியாயர் குடும்பம், வல்லிபுர உபாத்தியாயர் குடும்பம், சிவ ஞானம் குடும்பம், நாகநாத உபாத்தியாயர் குடும்பம், இராமச்சந்திரன் குடும்பம், கந்தையா உபாத்தியாயர் குடும்பம் என பேறுடைய திருநீற்று உபகரிப்பாளர்களால் அளவெட்டியில் நோய்கள் பாதித்த வரலாறு என்றும் இல்லை.

**வியாவில்**

காரைநகர் வியாவில் ஐயனார் கோவிலிலேதான் இலங்கையில் மிகவும் தூய்மையான, சித்திகரமான, முறைப்படியான திருநீறு, மகாராணி பேருபகாரி திரு·க. சோமசுந்தரம் அவர்களால்

*உள்ளம் தூய்மையாக இல்லாத நிலையில் உண்மைத் தியானம் என்பது கைகூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிக்கப்பட்டு, அதன் பெறுமதி தெரிந்தவர்களுக்கு மட்டும் விநியோகிக்கப்படுகிறது. மருந்தாக நம்பி உட்கொள்ள முடியும்.

மேலும் வடமராட்சி, தென்மராட்சி, கிளிநொச்சி, திருக்கேதீஸ்வரம் ஆகிய புண்ணிய ஷேத்திரங்களிலும் திருநீறு மருந்தாகத் தயாரிக்கப்பட்டுப் பேறாக்கப்படுகிறது. இது இவ்வாறு இருக்க, யாராவது போலியாக திருநீற்றினைத் தயாரித்து விற்பனை செய்வார்களாக இருந்தால், அதற்குரிய விலையையும் தேடவேண்டியே வரும்.

## மகான்களின் மகிமை

மகான்களுடைய மகிமையைப்பற்றி இதிகாசங்களும், புராணங்களும் எவ்வளவோ எடுத்துக் கூறியுள்ளன. அவற்றுக்கெல்லாம் உண்மைப் பொருளாக வாழ்ந்தவர், பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

ஒரு சமயம் காசிப்பூரில் தங்கியிருந்த ராமகிருஷ்ணர், கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தார். அவரது சீடர்கள், கண்ணும் கருத்துமாக, அவரைக் கவனித்து வந்தனர். அவர்களில், சசிபூஷணர் எனும் சீடரும் ஒருவர்!

அது, கடும் பனிக்காலம். ராமகிருஷ்ணரின் கழிவுக் கலயத்தை வெளியே எடுத்துச் சென்று, சுத்தப்படுத்தி, அறைக்குத் திரும்பினார் சசிபூஷணர். அப்போது அவர் கண்ட காட்சி, அவரைத் திடுக்கிட வைத்தது.

படுக்கையிலிருந்து எழ முடியாத நிலையில் இருந்த ராமகிருஷ்ணர் ஒரு குச்சியை ஊன்றியபடி, தட்டுத் தடுமாறி, எதையோ எடுப்பதற்காக நடந்து செல்வதைக் கண்டார். அவர் பார்வை போன திசையில் சசிபூஷணர் பார்க்க, அங்கே, போர்வை ஒன்று இருந்தது. அதை எடுப்பதற்காகத்தான் அவர் செல்கிறார் என்பது புரிந்ததும், "அடடா.... குருதேவருக்கு, போர்வை தேவையாக இருந்திருக்கிறது; அதை எடுப்பதற்காகத்தான் இவ்வளவு கஷ்டப்பட்டு எழுந்து செல்கிறார். அவருக்கு, ஏதாவது தேவையா என்று கேட்ட பின், நாம் கலயத்தை எடுத்துப் போயிருந்தால், குருதேவர் இப்படி கஷ்டப்பட்டிருக்க மாட்டாரே... தவறு செய்து விட்டோமே..." என்று பதற்றப்பட்ட சசிபூஷணர் வேகமாக குருதேவரை நெருங்கி, "குருதேவா... தங்களுக்கு என்ன தேவை என்பதை கேட்காமலேயே கலயத்தை சுத்தம் செய்யப் போய்விட்டேன்; அடியேனை மன்னியுங்கள்...." என வேண்டினார்.

சசிபூஷணரை மென்மையாகப் பார்த்து, "வருத்தப்படாதே சசிபூஷணா... எனக்காகப் போர்வை எடுக்கப் போகவில்லை. நீ வெளியே கலயம் சுத்தம் செய்யப்போனபோது, குளிரால், உன் உடல் நடுங்கியதைப் பார்த்தேன். உடனே, என் உடல் குளிரால் தாக்கப்பட்டதைப்போல உணர்ந்தேன். அதனால், உனக்குப் போர்வை எடுத்துக் கொடுப்பதற்காகவே எழுந்தேன்" என்றார் ராமகிருஷ்ணர்.

மெய்சிலிர்க்க, குருவின் பாதங்களைப் பணிந்தார் சசிபூஷணர். குருவின் பணிவிடையில், தன்னை கரைத்துக்கொள்ளும் சீடனின் காலில், சிறு கல் குத்தினால் கூட, தன் கண்களில், முள் பாய்ந்ததைப்போல உணர்ந்து, சீடனைக் காப்பாற்றுபவரே குருநாதர் எனும் உண்மையை மெய்ப்பிக்கும் வரலாறு இது.

*உன் இதயத்தை ஆண்டவனுக்கும், உன் தானங்களை ஏழைகளுக்கும் அளிப்பாயாக.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

பண்டாரவளை அருள்மிகு ஸ்ரீ சிவ சுப்பிரமணிய தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ பாலகுகேஸ்வரர் அவர்கள் தமது உரையில் அவ்வூர் மக்களின் வறுமை நிலையை பொருளாதாரத்திலும் பார்க்க கல்வியில் பின்தங்கி இருத்தலைச் சுட்டிக் காட்டிய விதம் அச்சபைக்கு புதியவர்களாகிய எம்போன்றவர்களை மிகவும் கவர்ந்தது. அவர்களது வறுமையை நீக்குவதற்குக் கல்வி அபிவிருத்தியே சிறந்த ஆயுதமாக இருக்கும் என்பதால் இங்கு வந்து இத்தகைய கல்விப் பணியைச் செய்ய முனைந்துள்ளமை மற்றெவரும் செய்ய முயலாத ஒரு அரும்பணியாக இருக்கிறது. எனவே உங்கள் பணியைத் தளராது தொடர்ந்து செவ்வனே செய்ய எல்லாம் வல்ல ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானின் ஆசி உங்களுக்கு நிறையவே கிடைக்க அவன் பாதார விந்தங்களைப் பணிந்து அனைவர்க்கும் ஆசிகூறி அமைகின்றேன் எனத் தன் ஆசியுரையை மணியாக முடித்திருந்தார்.

அதுமட்டுமல்ல ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தான அறங்காவலர் திரு அ. கணேசன். அவர்களது பேச்சும் இதே பாணியில் அமைந்திருந்ததுடன் அவரும் இங்குள்ள அஜந்தா ரேடிங்கின் உரிமையாளராக இருப்பதுடன் பூர்வீகம் "யாழ்" என்பதையும் அறியமுடிந்தது.

இங்கு உரையாற்றிய பட்டியலில் உள்ளோருடன் அடியேனையும் ஒரு சில வார்த்தைகள் பேசும்படி அழைத்திருந்தனர். எமக்கே உரிய பாணியில் இசையுடன் முன்னம் முன்னம் நாங்கள் மண்ணில் காணுந் தெய்வம் அம்மா, தன்னைத் தியாகம் செய்து எம்மைப் பேணும் தெய்வம் அம்மா..... என்ற எனது மாணவருக்கான பாடலைப் பாடி கற்றலூடாக ஒழுக்கம் பணிவு பெரியோரை, மூத்தோரை, பெற்றோரை மதிக்க வருங்காலச் சந்ததியினர்க்குப் புகட்டும் ஊடகமாக அவர்களது வகுப்புக் கல்வி அமைகிறது எனப் பொருள்பட சிற்றுரையைச் சமர்ப்பித்தது, ஒரே பேச்சையே கேட்டிருந்த சபையோருக்கு உற்சாகமூட்டியதான அக்கணங்களையும் வாசகர்களுடன் பகிர ஆசைப்படுகிறேன். மொத்தத்தில் சந்நிதியானின் மற்றோர் ஆவண மலரான "மலையக மீரியப்பெத்தை மண்சரிவும் தாக்கமும் - அதன் எதிரொலியும்" என்ற 20.02.2016 மலரின் பக்கம் 19 பயணம் 07இன் சாராம்சத்தைத் தந்தால் இவ்வாவணப் பதிவிற்கும் உரமூட்டுவதாக அமையும். இதோ அதை அப்படியே..... "ஊவா மாகாணத்தில் கல்வி கற்ற பதினொரு மாணவர்களையும் உயர் கல்வி கற்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் அழைத்து யாழ் பாடசாலைகளில் அவர்களை இணைத்து கல்விச் செயற்பாடு உள்ளிட்ட அனைத்துத் தேவைகளையும் சைவ மகாசபையும் சந்நிதியான் ஆச்சிரமமும் கூட்டாக நிறைவேற்றிக்கொண்டு இருப்பதால் பதினொரு பொறியியல், மருத்துவப் பட்டதாரிகள் மலையகத்திற்கு விரைவில் கிடைப்பார்கள்" என்பதுவே அவர்களது பேச்சின் சாராம்சமாகவும் இருந்தது.

ஆம்! இப்பதிவு அம்மலர் கைவசம் உள்ளவர்களே அறிவர். அதனை ஞானச்சுடர் வாசகர்கள் அறியும் நோக்கில் மீண்டும் பதிந்துள்ளோம். ஆக அன்றைய நிகழ்வு

இறைவனை மனப்பூர்வமாக நேசிக்கும் பக்திதான் மனித வாழ்க்கையின் சாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனையும் முத்திரை பதித்த ஆனந்தம் ஒருபுறம் எமது அமைப்பைச் சார்ந்த பெரியவர்கள் அனைவரையும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து அவர்களின் பண்பு ஒருபுறமாக எம்முள்ளே ஓர் ஆனந்த அனுபவத்தைச் சுமக்கும் ஓர் பயணமாக இது அமைந்தது ஆனந்தமே.

இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரமத்தால் ரூபா முப்பதினாயிரம் பெறுமதியான 150 உயர்தர மாணவர்களுக்கான பயிற்சிப் புத்தகங்கள் ஒன்றியத் தலைவர் திரு யோகேஸ்வரன் அதிபரிடம் வழங்கப்பட்டு அவை உரியவாறு மாணவர்களைச் சென்றடைய வழிவகை செய்யப்பட்டது. இவற்றோடு மாணவச் செல்வங்களினது கலை நிகழ்வுகளாக ஆடல், பாடல், பேச்சு என மிக ரம்மியமாக பொழுது போய்க்கொண்டு இருந்ததால் எமது மதிய உணவு பி.ப. 3.00 மணிக்கே அமைந்தது. மதிய உணவையும் விழா ஏற்பாட்டுக் குழுவினரே ஒழுங்குபண்ணியிருந்தனர்.

மதிய உணவு இம்மண்டபத்தின் மூன்றாம் தளத்தில் அமைந்திருந்தது. மிக அற்புதமான ஆசன ஒழுங்கமைப்பு. ஆங்கிலேய பாணியில் மேசை, கதிரைகள் ஒழுங்கு பண்ணப்பட்டிருந்தபொழுதிலும் எமது சந்நிதியான் ஆச்சிரமத்தைப் போன்று வாழை இலைப் பரிமாற்றமே இருந்தது. அத்துடன் அவர்களுக்கேயுரிய தும்பைப் பூப்போன்ற வெள்ளை வெளேரென்ற சம்பா அரிசிச் சாதத்துடன் சகல அறுசுவைக் கறிகளுடன் கூட பாயாசத்துடன் நிறைவு செய்தனர். பி.ப. 3.00 மணி என்றதால் அனைவர்க்கும் அருமைப் பசியாக இருந்ததால் சாப்பாட்டின் தரம் இன்னொருபடி ஏறியிருந்தது. அதுமட்டுமல்ல மலையக ஜில்லென்ற குடிநீருக்குப் பதில் வெந்நீர் அனைவர்க்கும் பருகத் தந்த பாங்கு சிறப்பானது. பிற்பாடுதான் அறிந்தேன் இங்கே இதே பாங்கிற்தான் விருந்துபசாரம் நடக்குமாம்.

அனைவரும் ஆனந்தமாகச் சாப்பிட்டு அம்மண்டபத்திலேயே பல குழுக்களாகி சற்று ஆயாசம் தீர்த்தபின் பி.ப. 5.00 மணியளவில் ஆலய மண்டபத்தில் அழகனை வேண்டி. அருமையான பஜனை நடைபெற்றது. அதன் பிற்பாடு இரவுத் தங்கலும் இங்கேயேதானாம் அதற்குரிய.... (காட்சி தொடரும்...

## ஆன்மிகச் சிந்தனை

பொதுவாக ஒருவர் தேவையற்ற உலக விவகாரங்களை முடிந்த வரையில் குறைத்துக்கொள்வது நல்லது. அப்போதுதான் இறைவனை நினைக்கப் போதிய நேரம் கிடைக்கும். நாம் நம் கடமைகளைச் செய்யத்தான் வேண்டும். ஆனால் அதில் பற்று நீக்கிச் செய்ய வேண்டும். சுயநலமின்றி பிறர் நலனுக்காகப் பணிபுரிபவனை இறைவன் ஆசீர்வதிக்கிறான். ஆசைகள் மன அமைதியைக் குலைத்து கவலைகளுக்குச் சொந்தக்காரர்களாக நம்மை ஆக்கிவிடுகிறது. எதைப்பற்றி எல்லாம் நாம் கவலைப்படக் கூடாதோ அதைப்பற்றி எல்லாம் கவலைப்படுகிறோம். எதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டுமோ அதைப்பற்றி நாம் கவலைப் படுவதில்லை. மனிதன் தான் இறைவனை அனுபூதியில் உணர்ந்துகொள்வது எப்படி என்பதைப் பற்றித்தான் கவலைப்பட வேண்டும், யோசிக்க வேண்டும். "இறைவனது காட்சி பெறவே மனிதன் பிறந்திருக்கிறான். அதை மறந்து பல விஷயங்களில் மனதைச் செலுத்துவது நல்லதல்ல" என்று கூறுகிறார் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர். சொல், செயல், சிந்தனைகளால் இறைவனையே சார்ந்து வாழ நாம் பழகிக் கொள்வோமானால் நிலையான சாந்தி நமக்குக் கிடைக்கும்.

*இறைவனின் நாமமாகிய மந்திரங்களின் சக்தி ஒருபோதும் குறைவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிக் கவர்ச்சியே மனிதனின் பகுத்தறிவை மறைக்கின்றது

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

இறைவனால் படைக்கப்பட்ட உயிர் இனங்களில் மானுடப் பிறவியே சிறந்ததென ஔவைப் பிராட்டியார் "அரிது அரிது மானுட ராதல் அரிது" என்று கூறுகின்றார். மானுடப் பிறவியெடுத்த ஆன்மா "ஞானம் கல்வியும் பெறுதல் அரிதிலும் அரிது" என்றும் அழுத் திக் கூறுகின்றார். ஆறாம் அறிவாகிய பகுத் தறிவைப் பெற்ற ஆன்மாவின் அறிவை வெளிக்கவர்ச்சிகள் தடுத்து நிறுத்துகின்றன. இவற்றைத் தடுக்க ஒரேவழி நாடொறும் ஆல யம் சென்று இறைவனை வழிபடுதலாகும். இறைவழிபாடு (இறை அருள்) வெளிக்கவர்ச் சிகள் மாயையென உணர வைக்கின்றது. மனிதனின் மனம் திட்பம் அடைகின்றது. அவன் காண்பது, கேட்பது நற்செயல்களே. எங்கும் எவையிலும் எம்பெருமான் இருக் கிறான் என்ற எண்ணம் உதயமாகும். காப் பதும் அவனே, அழிப்பதும் அவனே, அருள் செய்வதும் அவனே என்ற பரந்த நோக்கு ஏற்படும். இதனால் மனிதன் பஞ்சமா பாதகங் களை ஒழிக்கவும், பெற்றோரைத் தெய்வமாக நினைக்கவும், பெரியோர்களுக்கு கீழ்ப்படி வாக நடக்கவும், நல்லன செய்யவும் தலைப் படுகின்றான். எனவே மனிதனை மனிதனாக வாழ வைக்க, பகுத்தறிவை ஒளிவிட்டு மிளிர வைக்க சிறந்த இடமாக விளங்குவது ஆல யம் என்று கூறுவது மிகவும் பொருத்தமாகும்.

மனிதனின் பகுத்தறிவு துளிர்விட்டு வளர இறையருள் மிகவும் முக்கியம். இறை அருளினால் தன்னை உணரும் சக்தி மானுட னுக்கு ஏற்படுகின்றது. பிறருக்குத் தீமை செய்யக்கூடாது, பிறர் நோக நடக்கக்கூடாது, எல்லோரும் சமம், பிறந்தது இறைபணி செய்து இறைவனடி சேர்தல் என்ற சிந்தனைகள் மனதில் தோன்ற, நற்கருமங்களைச் செய் வான். அவன் ஆற்றும் நற்செய்கைகள் உர மாக அமையும். மகாத்மா காந்தியடிகள், ஆபிரகாம் லிங்கன், அன்னை திரேசா போன் றோர் தமது நற்செய்கைகளினாலேயே உல கப் பெரியவர்களாக விளங்குகின்றனர். விவே கானந்தர் ஒரு அறிவுக்கடல். நூலை விரை வாக வாசித்து மனதில் பதிக்கும் திறன் அவரிடம் அதிகமாகவே காணப்பட்டது. பொறாமை பிடித்த ஆங்கிலேயன் ஒருவன் இவரிடம் வந்து, பேச வரும்படி அழைத்தான். அதற்கு அவரும் சம்மதம் தெரிவித்தார். அவனோ இவருக்குப் பேசும் விடயத் தலைப் பைக் கொடுக்காமல் போய்விட்டான். குறித்த நாளில் அங்கு சென்று விவேகானந்தர் மேடையில் அமர்ந்திருக்கும்பொழுது "God is no where" என்ற தலைப்பைப் பேசும்படி சொன்னான். உடனே அவர் அந்த வாச கத்தைத் திருத்தி "God is now here" எனப் பேசத் தொடங்கினார். பேச்சுக்கு அழைத் தவன், தான் செய்த தவறை மன்னிக்கும்படி வேண்டி நின்றான். மக்கள் விவேகானந்தர் பேச்சுத் திறனையும், அளவு கடந்த அறிவை யும் போற்றித் துதித்தனர். எனவே பகுத்தறிவு மிக்க பெரியோரை உலகம் போற்றித் துதிக் கும் என்பது உண்மையாகும்.

*தியானம் கைகூடும்போது அங்கே இறைவனின் உருவம் மட்டும் காணப்படும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்தில் பகுத்தறிவை மழுங்க வைக்கும் சாதனங்களாக வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அமைந்துள் ளன என்பது உண்மை. இன்னொரு வகை யில் விஞ்ஞான நம்பிக்கை இடம்பிடித்து உள்ளது. விஞ்ஞானம் அதிவேகமாக வளர்ந்து செல்வது கண்கூடாகப் பார்க்கக் கிடக்கிறது. ஆனால் வைத்தியர்களும், விஞ்ஞானிகளும், விஞ்ஞானத்திலும் மெய்ஞானம் சிறந்ததென ஒப்புக்கொள்ளுகின்றனர். வைத்தியர், நோயாளி குணமடையாதவிடத்து உங்கள் தெய்வங் களை வேண்டுதல் செய்யும்படி கூறுகின் றனர். அதுபோல் விஞ்ஞானியும் தனது ஆராய்ச்சி தோல்வியடையும்பொழுது இறை வனை வேண்டும்படி மக்களைக் கேட்கின் றார். இதற்கு மாறாக களியாட்டு விழாக்கள் மக்களின் ஆறாம் அறிவாகிய பகுத்தறிவை கெடுத்து விடுகின்றது.

இன்றைய சமுதாயத்தை நல்வழிப் படுத்த நாட்டிலுள்ள பெரியோர்கள், கல்வி மான்கள் அறிவுரை கூற முன்வரவேண்டும். எமது கலாச்சாரம் வெளிநாட்டு மோகத்தால் அழிந்து செல்கின்றதென்பது உண்மை. நாட் டில் படித்தவர்கள், பெரியோர்கள், நல் அறி வுரைகளாலும், நல்ல செயல் திட்டங்களி னாலும் வருங்காலப் பிள்ளைகளை ஈர்த் திழுக்க வேண்டும். பாடசாலைகளிலும், கோவில் களிலும் இன்னும் பொது இடங்களிலும் நற் பண்புகளைக் கூறி, பிள்ளைகளை உள் வாங்க வேண்டும். இச்செய்கை பிள்ளை களின் ஆறாம் அறிவை வளம்படுத்த உதவும் என்பது உண்மையிலும் உண்மை.

பகுத்தறிவைக் கொடுக்கக்கூடிய, கலியுகவரதனாக தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் விளங்குகின்றான். சந்நிதியான் ஆலய குளத்திலோ, கடலிலோ நீராடி அவன் திருநீறு அணிந்து வீதிவலம் வர வல்வினை கள் பறந்தோடும். பகுத்தறிவு அடியார் உள்ளங்களில் ஊற்றெடுக்கும். எந்நிதியும் தரும் சந்நிதியில் எந்நேரமும் சென்று வழி படலாம். அடியார்களுக்கு உணவு அளிக்க சந்நிதியான் தொண்டன், சந்நிதியான் ஆச்சிர மத்தில் தவம் கிடக்கின்றான். சந்நிதியான் அவனை ஆட்டிப்படைக்கிறான். வரும் அடி யார்களுக்கு இல்லையென்று சொல்லாது, அமுதசுரபிபோல் இன்முகத்துடன் அன்னம் பாலிக்கும் புதுமையை நாம் எங்கும் காண முடியாது. அங்கே வருகைதரும் அடியார் களுக்கு பகுத்தறிவை வளர்க்க வெள்ளிக் கிழமைதோறும் சொற்பொழிவுகள், வில்லுப் பாட்டுகள், இதிகாச - புராண வரலாறுகள் போன்ற நிகழ்ச்சிகளை நடாத்துகிறார்.

இறுதியாக, பகுத்தறிவை ஊட்டும் செல்வச் சந்நிதியானை; சுந்தரமூர்த்தி நாய னார் கூறியதுபோல்,

"பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என்பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை"

என்னும் பாடலைத் தினமும் பாடிப் பகுத்தறிவை வளர்ப்போம்.

**இறைவனை வழிபடுவதற்காக ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குவது அவசியம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி....

# விதுர நீதி

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

மனிதன் தன் காரியங்களினாலும், மனதினாலும், வாக்கினாலும் நல்லதையே செய்ய வேண்டும். மங்களகரமான திரவியங்களைத் தொடுவது, மனநிறைவு, சாத்திரப் பயிற்சி, அடிக்கடி சாதுக்களைத் தரிசனம் செய்வது செல்வத்தைத் தரக்கூடியது.

விடாமுயற்சியானது செல்வத்திற்கும், இலாபத்திற்கும் காரணமாக அமைகின்றது. விடாமுயற்சியுடையவன் மேன்மை அடைவதோடு சுகத்தையும் அனுபவிக்கிறான்.

வல்லவனான ஒருவன், எப்போதும் எல்லோர் விடயங்களிலும் கவனத்துடன் இருப்பதுடன் பொறுமையுடன் இருக்க வேண்டும். சக்தி இல்லாதவன், எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ள வேண்டும். சக்தி உள்ளவனும் தர்மத்தின் காரணமாகப் பொறுத்துக்கொள்வது அவசியமாகும். பொருள் உள்ளவன், பொருள் அற்றவன் ஆகிய இருவகையினருக்கும் பொறுமை அனுகூலமாகவே அமையும்.

அறம், பொருள் முதலானவைகளை விட்டு விலகாமல் எந்த சுகத்தையும் விருப்பப்படி அனுபவிக்கலாம். நியாயத்திற்கு விரோதமான எந்த விடயங்களிலும் ஈடுபாடு கொள்ளக்கூடாது.

துயரத்தில் பீடிக்கப்பட்டவர்கள், கர்வம் கொண்டவர்கள், நாத்திகர்கள், சோம்பேறிகள், அடக்கமில்லாதவர்கள், ஊக்கமில்லாதவர்கள்- முதலானவர்களிடம் செல்வமானது நிற்பதில்லை.

நேர்மை உடையவனும், தீய காரியங்களைச் செய்வதற்கு வெட்கப்படுபவனுமான மனிதனைத், தீயபுத்தி உள்ளவர்கள் ஆற்றலற்றவனாகக் கருதிக்கொண்டு அவமானப் படுத்துகிறார்கள்.

வேதங்களைப் பயில்வதன் பலன் அக்னி காரியங்கள் (யாகம்) செய்வது, சாத்திரங்களைப் படிப்பதன் பலன் நல்ல ஒழுக்க குணமுடையவனாக இருப்பது, பெண்களை அடைவன் பலன் இன்பசுகம் அனுபவிப்பதும் புத்திரப்பேறும் ஆகும். செல்வத்தைப் பெற்ற தன் பயன் தானும் அனுபவித்துப் பிறருக்கு தர்மம் செய்வதற்காகும். எந்த மனிதன் அதர்மமான வழியில் சம்பாதிக்கப்பட்ட செல்வத்தினால் பரலோகத்திற்கு உண்டான செயல்களைச் செய்தாலும் அவன் செல்வம் தீய வழியில் வந்ததால் அந்தச் செயல்களின் பலனை அடையமாட்டான்.

காடு முதலிய போகமுடியாத இடங்களிலும், ஆபத்து ஏற்படுகையிலும், பரபரப்பான செயல் நிகழுகையிலும், ஆயுதங்கள் ஓங்கப்பட்ட காலத்திலும் சாத்வீக குணமுடையவர்களுக்கு எவ்வித பயமும் இல்லை.

தவசிகளுக்கு தவம் பலம். வேத விற்பன்னர்களுக்கு வேதமே பலம். நல்ல குணம் உடையவர்களுக்கு பொறுமை பலமாகும்.

தண்ணீர், கிழங்கு, பழம், பால், கஞ்சி வடிக்காமல் பொங்கிய சோறு, அந்தணனின் அனுமதி, குருவின் வார்த்தைகள், மருந்து இந்த எட்டும் விரதத்தைப் பாதுகாக்கின்றன.

நமக்குக் கெடுதல் என்று எதை நினைக்கின்றோமோ, அந்தக் கெடுதலை அடுத்தவர்களுக்குச் செய்யக்கூடாது.

நம்பிக்கையும் பிரார்த்தனையும் இல்லாத வேலை வாசனை இல்லாத செயற்கை மலர் போன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலன்களின் அடக்கத்தினால்த்தான் தர்ம சிந்தனை உண்டாகிறது. காமத்தினால் அதர்ம எண்ணங்கள் தோன்றுகின்றன.

கோபப்படாமலிருந்து கோபத்தை வெல்ல வேண்டும். நல்ல ஒழுக்கத்தால் தீயவற்றை வெல்ல வேண்டும். கருமிகளை தானம் வழங்கி வெற்றிகொள்ள வேண்டும். பொய்யை, வாய்மையினால் வெற்றிகொள்ள வேண்டும்.

பெண்கள் (விலைமாதர்கள்), போக்கிரிகள், சோம்பேறிகள், பயந்தவர்கள், கொடுமை நிரம்பியவர்கள், தான்மட்டும்தான் ஆண்பிள்ளை என்ற கர்வம் கொண்டவர்கள், திருடர்கள், நன்றி மறந்தவர்கள், நாத்திகர்கள் முதலியவர்களிடத்து நம்பிக்கை வைக்கக் கூடாது.

குருவை தினந்தோறும் வணங்கி வருபவனும், என்றென்றும் பெரியவர்களை நெருங்கி வழிபாடு செய்பவனுமாகியவனுக்கு, தானம் முதலியவைகளால் உண்டாகும் புகழ், ஆயுள், வீரத்தினால் விளையும் புகழ் என்பவை நன்றாக வளர்ச்சியடைகின்றன.

அதிகமான சஞ்சலத்தால் தர்மத்தை மீறுவதாலும், விரோதியை வணங்குவதாலும் கிடைக்கக்கூடியவைகளில் மனத்தைச் செலுத்தக்கூடாது.

படிக்காத மனிதன் துக்கப்படுவான். குழந்தை இல்லாத இல்வாழ்க்கை வருந்தத்தக்கது. உணவில்லாத மக்கள் வருந்தத்தக்கவர்கள். நல்ல அரசன் இல்லாத நாடு ஆபத்தானது.

இடைவிடாமல் தண்ணீர் விழுவது மலைகளுக்கும், சேராமல் வஞ்சிக்கப்படுவது பெண்களுக்கும், சொல்லம்பினால் சுடுவது மனத்திற்கும்- கீழ்த்தனமாகும்.

அந்தணன், வேதங்களை அடிக்கடி பயிலாமலிருப்பதும், தனக்கு உண்டான நியமங்களைக் கடைப்பிடிக்காமல் இருப்பதும் குற்றமாகும்.

தர்மம் இல்லாத மக்கள் பூமிக்கு களங்கம். பொய்யானது மனிதனுக்குக் களங்கம். பொருள்களின்மேல் ஆசைப்படுவது, பதிவிரதைக்கு களங்கம். கணவனைப் பிரிந்து தனியாக வாழ்வது பெண்களுக்குக் களங்கம். தங்கத்திற்கு வெள்ளியுடன் சேர்வது களங்கம். வெள்ளிக்கு வெண்கலத்துடன் சேர்வது களங்கம். வெண்கலத்திற்கு ஈயத்துடன் சேர்வது களங்கம்.

தூக்கத்தை, தூங்கியே ஒழித்து விடலாம் என்பது முடியாது. பெண்ணாசையை, காம சுகத்தால் ஒழித்துவிடலாம் என்பது முடியாது. நெருப்பை விறகால் அணைத்து விட முடியாது. மதுப் பழக்கத்தை அதிகம் குடிப்பதனால் ஒழித்துவிட முடியாது.

தானம் செய்வதால் நண்பனை வசப்படுத்தியவன், போரினால் விரோதிகளை வென்றவன்; அன்போடு பாதுகாப்பதால் மனைவியை வசப்படுத்தியவன்- முதலானவர்களின் வாழ்வு பயனுள்ளதாக அமைகிறது.

ஆயிரக் கணக்கில் பணம், காசு வைத்திருப்பவனும் வாழ்கிறான். நூற்றுக் கணக்கில் வைத்திருப்பவனும் வாழ்கிறான். அதனால் மன்னா! பேராசையை விட்டு விடுங்கள். சுகமாக வாழலாம் என்றார் விதுரர்.

(தொடரும்...

---

ஒருவன் உடல் பலவீனமாக இருக்கிறான். அவனுக்குச் சத்துள்ள உணவு, தேவையான மருந்து வகைகள் கொடுக்கப்பட வேண்டும். அதுபோலவே மனம் பலவீனமாக இருந்தால், அதற்கு சத்சங்கம், அருள்நூல்களைப் படித்தல், ஜபம், தியானம், பிரார்த்தனை ஆகியவற்றைச் செய்யவேண்டும். அப்போதுதான் மனம் ஆரோக்கியமுள்ளதாக, வலுவுள்ளதாக இருக்கும்.

*மானிடப் பிறவி ஞானமும் பக்தியும் அடைவதற்காகவே ஏற்பட்டிருக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொன்மைக் கோலம்

–திருவாரூரன் அவர்கள்–

தொன்மை என்பது பழமை, பூர்வீகம், புராதனம், ஆதி என்று பொருள் கொள்ளலாம். புராணம் என்றாலே பழைமைதான். சிவபுராணத்திற்கு (திருவாசகம்) அநாதி முறைமையான பழைமையென விளக்கம் செய்துள்ளனர். இ்்து சிவபிரான் பற்றிய கூற்று. திருக்குறளிற் பழைமை (81) என்றோர் அதிகாரம் இடம்பெற்றிருக்கிறது. முதற்குறள் அது பற்றிப் பேசும்.

பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

-குறள் 80

பழைமையெனப்படுவது யாதென்று வினவினால் அது பழகியவர் உரிமைபற்றிச் செய்யும் செயலைச் சிதைத்து விடாமல் காத்துவரும் நட்பாகும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்பர் தொல்காப்பியர். இன்று பழையன கழித்துப் புதியன புகுத்தும் பழைமை விரும்பிகளும், புதுமை விரும்பிகளும் இல்லாமல் இல்லை. முன்னோர் பழைய பொருள்களை வீசார்: மகாகவி

பழமை பழமையென்று பாவனை பேசலன்றிப்
பழமை இருந்த நிலை - கிளியே
பாமர ரேதறி வார்.

எனப் பாடினார்.

மணிமொழியார் பழமைக்கும் பழமையன்- புதுமைக்கும் புதியன் என (இறைவனைப்) பாடியுள்ளார். தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா நேற்றுத் தோன்றியவை என்பதால் தீதாகா என்பது சிவப்பிரகாச நோக்கு. பழைய பூமியில் நின்றுகொண்டே புதியதோர் உலகம் செய்வோம். போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம் எனப் பாடினர். தொல்காப்பியமே பழைமையின் பாவனை. தொல்பொருட் களஞ்சியங்கள் எங்கும் பேணப்படும். வரலாற்றுப் பழைமை ஓர் ஆவணம். தொன்மை இதைப் பாவித்த மாணிக்கர் கோலத்தையுமிணைத்துத் தொன்மைக்கோலம் என்றார். கோலம் வடிவு, வடிவம், திருக்கோலம், திருமேனி, மூர்த்தம் என்று பொருள்படலாம். எது தொன்மைக் கோலம் இறைவனும் இறைவியும் இணைந் திருக்கும் அர்த்தநாரீஸ்வரர் வடிவம் தொன்மையானது எனக் கூறியுள்ளார். திருவாசகத்தின் முடிந்த முடிபு அது. பாதி பாதி வடிவம் பற்றி ஏனையோரும் பேசினர். ஆனால் தொன்மை வடிவமென எவரும் அறுதியிட்டுப் பேசினதாய்த் தெரியவில்லை. எனவே இதை ஆதிவடிவம் என்று கூறலாம். இருபத்தைந்து மகேசுவர மூர்த்தங்களில் இதுவுமொன்று.

தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்
சூலமுந் தொக்க வளையு முடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி

திருக்கோத்தும்பி 18.

*தன்னுள்ளே கடவுளைக் கண்டுகொண்டவன் கண்களுக்கு உலகம் இன்பமயமாகத் தோன்றும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசவண்டே புலித்தோலும் மென்மையான ஆடையும் குழையும், சுருண்ட தோடும், பால்போன்ற வெண்மையான திருநீறும், புதிய சந்தனத்துடன்- பச்சைநிறமுள்ள கிளியும், முத்தலைச் சூலமும், கூட்டமான கைவளையலும் உடைய பழமையான வடிவத்தையே, பார்த்து, இனிமையாய் ஊதுவாயாக.

தோல், குழை (குண்டலம்) திருநீறு, சூலம் என்பவற்றைச் சிவபெருமானோடும், துகில், தோடு, சாந்து, கிளி, வளை என்பவற்றை உமாதேவியாரோடும் இணைத்துப் பார்ப் பின் சிவமும் சக்தியுமாய் இறைவன் காட்சி தருவான். இத்தோற்றம் அநாதியான படியால் தொன்மைக் கோலம் எனப் பாடினார் சுவாமிகள்.

இதே பார்வையில் அப்பர் பெருமானும் ஓர் சொல் ஓவியம் தீட்டியுள்ளார்.

புதுவிரி பொன்செ யோலை யொருகாதொர் காது
சுரிசங்க நின்று புரள
விதிவிதி வேதகீத மொருபாடு மோத
ஒருபாடு மெல்ல நகுமால்
மதுவிரி கொன்றை துன்று சடைபாக மாதர்
குழல் பாத மாக வருவர்
இது இவர் வண்ண வண்ண மிவள் வண்ண வண்ண
மெழில் வண்ண வண்ண மியல்பே.

4:8.10.

ஓலை- காதோலை. பெண்கள் அணிவது, அது உமாதேவியார். காதில் சொலிக்கிறது. சங்கம்- குண்டலம் சிவனுடைய பாகத்தில் ஒளிர்கிறது. வேதமோதுகிறார். சிவன் மென்மை யாகப் புன்முறுவல் புரிகிறார் அன்னை, கொன்றை அணிந்திருக்கிறார் சிவன். அஃது அவரின் சடாமுடியிற் காட்சி தருகிறது. (ஐவகைக் கூந்தலில்) உமாதேவியார் குழல் ஆக முடிந்துள்ளார் தன் கூந்தலை. இறுதி வரியில் இது இவர் வண்ணம். இது இவள் வண்ணமென வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இறுதியடியில் இவர் வண்ண வண்ண இயல்பே என முத்தாய்ப்பு வைக்கப்படுகிறது. ஒவ்வொரு அடியிலும் இறைவனின் அர்த்த நாரீசுவரர் தோற்றம் வெகு நாகரிகமாகத் தீட்டப்பட்டிருக்கிறது. நா வேந்தர் நற்பா வேந்தருமாம் என இப்படி வருகிறார் என்பதற்கு இரண்டாவது பாடலில் "அருள் காரணத்தில் வருவார்" எனப் பேசுகிறார். எனவே நாமும் சிவனைப் பக்தியுடன் வேண்டின் அருள்பாலிப்பான் என்பது அர்த்தம்.

பரவையிடம் எம்பெருமான் தூது சென்ற சம்பவம் அருணகிரியார் வாக்கிலும், தாயுமானவர் நாவிலும் தவழ்ந்து பாடலாக வருகிறது.

பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரம னருளால் வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனை கொன்று அமரர் சிறைமீளவென்று
பழனிமலை மீதில்நின்ற பெருமாளே.

திருப்புகழ் 132 (கருவினுருவாகி)

அடிஇட்ட செந்தமிழின் அருமை இட்டு ஆரூரில்
அரிவை யோர் பரவை வாயில்

**இறைவனின் திருநாமம் உடல், உள்ளம் ஆகிய இரண்டையும் தூயதாக்குகின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மட்டும் அடிஇட்டு நடைநடந்து அருள் அடிகள்
அடிஈது முடிஈது என மறைபேசு பச்சிளங்கிள்ளையே.
மலைவளர் காதலி 3 (மிடியிட்ட)

சுந்தரனது சுந்தரத் தமிழை அனுபவிக்கவே தூது சென்ற செவ்வி சொல்லுந்தரமோ. எனவேதான் சேக்கிழார் ஆரூரர் கதை சொல்கையில் பாடலொன்றில் எதுகைகளைப் பாதி பாதி என வடிவமைத்திருக்கிறார்.

பாதி மதிவாழ் முடி யாரைப்
பயில்பூ சனையின் பணிபுரிவார்
பாதி இரவில் இங்கணைந்த
தென்னோ என்று பயம் எய்திப்
பாதி உமையாள் திருவடி விற்
பரம ராவது தறியாதே
பாதி மதிவா ணுதலாரும்
பதைத்து வந்து கடை திறந்தார்.

கடை- வாயில் -பெரியபுராணம் 3493.

பாதிமதிநதி சூடிய பெருமானின் தொன்மைக் கோலங்கள் ஆலயங்களிலே அமைக் கப்படும். காரணம் சைவ சமயிகளின் வழிபாட்டிற்காக எனவே நடராசனின் திருமேனிகளை, கண்ணாடிப் பீரோவில் வைத்திருப்பதும், வீட்டில் வழிபடுவதும் தவிர்க்க வேண்டியனவே. சிவத்துரோக தண்டனைக்கு நாம் ஆட்படக்கூடாது அன்றோ.

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

திருவாசகம் 31.1

---

## ஆன்மிகச் சிந்தனை

அறமும் ஆன்மிகமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள். நாணயத்தின் எந்த ஒரு பக்கம் சரியாக இல்லாவிட்டாலும் அது செல்லாத நாணயம் என்றே கருதப்படும். சிந்தித்துப் பார்த்தால் ஆன்மிகம் என்பதில் அறமும் அடங்கியிருப்பது உணரப்படும். அறம் வேறு, ஆன்மிகம் வேறு அல்ல. அறவாழ்க்கைதான் ஆன்மிக வாழ்க்கை. ஆன்மிக வாழ்க்கைதான் அற வாழ்க்கை. அகத்தூய்மையும் புறத்தூய்மையும் தெய்வ பக்தியோடு சேர்ந்திருந்தால்த்தான் ஒருவர் செய்யும் பக்தி உரிய பலனைத் தரும். மனம், வாக்கு, காயங்களால் தூய்மையில்லாமல் இறைவனின் கிருபையைப் பூரணமாகப் பெற முடியாது. அறம் சார்ந்த ஆன்மிக வாழ்க்கையின்மூலம் மனிதன் உயர்ந்த பக்குவம் பெறுகிறான்.

*ஆன்மிக சாதனைகளைப் பழகுவதன்மூலம் கடவுளை அறிதல் வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| ரா. ரமணன், பா. தர்சிகா | கொழும்பு | 6000. 00 |
| ப. பத்மாவதி | கொழும்பு | 1000. 00 |
| S. பாஸ்கரன் | பம்பலப்பிட்டி | 500. 00 |
| ம. சற்குணசிங்கம் | சுழிபுரம் | 500. 00 |
| பி. ஆகாஷ், அ. சஞ்சீவ் | கம்பர்மலை | 1மூடை அரிசி |
| அ. சுந்தரராஜா மூலம் S. சிவகுமார் | லண்டன் | 5000. 00 |
| க. பரமேஸ்வரன் | கொக்குவில் | 5000. 00 |
| க. ஞானச்சந்திரன் | கொக்குவில் | 2000. 00 |
| Dr A. இராஜநாதன் | ஆவரங்கால் | 10000. 00 |
| மு. கனகசபாபதி | நாச்சிமார் கோயிலடி | 5000. 00 |
| காயத்திரி கௌரிபாலன் | கொக்குவில் | 1மூடை அரிசி |
| த. உருத்திரா | பருத்தித்துறை | 15000. 00 |
| S. ராஜேஸ்வரி | அச்சுவேலி | 1000. 00 |
| ஸ்ரீ. ராமநாதன் | கொழும்பு | 2000. 00 |
| தங்கருபன் ஜெயபாரதி | ஜேர்மனி | 1000. 00 |
| த. சரவணன் குடும்பம் | இணுவில் | 1500. 00 |
| சி. மணிவாசகம் | கொழும்பு | 8000. 00 |
| கலைமகள் விலாஸ் | சங்கானை | 1மூடை அரிசி |
| த. கருணாதனன் | யாழ்ப்பாணம் (u.k) | 10000. 00 |
| கா. தேவசாமி | ஊரெழு கிழக்கு | 1000. 00 |
| அப்பன் சுட்டா | கரவெட்டி | 3000. 00 |
| S. கனகராஜா | மட்டுவில் | 1000. 00 |
| க. குகனேசன் | கொடிகாமம் | 500. 00 |
| பே. சரஸ்வதி | இணுவில் | 5000. 00 |
| பொ. குகனேஸ்வரன் | கொக்குவில் | 2500. 00 |
| இ. தயாகரன் | மயிலியதனை | 1000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| M. மயூரன் | தெகிவளை | 20000. 00 |
| த. இந்திராதேவி | சுன்னாகம் | 1000. 00 |
| சி. கிருஸ்ணராஜா | கரணவாய் | 1மூடை அரிசி |
| J. சந்திரப்பிரகாசம் குடும்பம் | பருத்தித்துறை | 3000. 00 |
| க. பாலசுப்பிரமணியம் | கொழும்பு (காரைநகர்) | 5000. 00 |
| சந்நிதி அறநெறிப் பாடசாலை | மல்லாவி | 2மூடை அரிசி |

மனிதனைப் படைத்த இறைவன்தான் எல்லா மதங்களையும் படைத்திருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| K. சற்குணச்செல்வம், அபிராம், அர்ச்சுனன் | நெதர்லன்ட் | 5000. 00 |
| கோ. கீர்த்திக் | மட்டக்களப்பு | 500. 00 |
| க. கோகுலவதனி குடும்பம் | ஜேர்மன் | 5000. 00 |
| சி. நிருத்திகா | கனடா | 5000. 00 |
| வி. சலோஜனா | ஏழாலை | 1000. 00 |
| செ. அச்சுதன், தி. நடராஜா நினைவாக | மானிப்பாய் | 10000. 00 |
| M. ஜெயலட்சுமி | கொழும்பு | 3000. 00 |
| ச. யோகேஸ்வரி | கொழும்பு | 2000. 00 |
| க.சி. கோகுலதாசன் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| கமலா குணசிங்கம் | சாவகச்சேரி | 1000. 00 |
| ஞா. கார்த்திகாயினி | உடுப்பிட்டி | 10000. 00 |
| K. யாழினி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| அ. குமாரவேல் ஆசிரியர் | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| க. மனோரஞ்சன், ஜேந்தா | வரணி | 32000. 00 |
| திலகம் | வட்டுவினி | 1000. 00 |
| ச. அமிர்தாம்பிகை | இணுவில் | 1000. 00 |
| சி. சிவரூபன் | ஆவரங்கால் | 10000. 00 |
| இ. நேசரத்தினம் நினைவாக | அல்வாய் | 5000. 00 |
| மு. கந்தசாமி குடும்பம் | அராலி | 5000. 00 |
| பா. பாலச்சந்திரன் | சுன்னாகம் | 1000. 00 |
| பா. முரளிதரன் | சுன்னாகம் | 500. 00 |
| பா. ஜாதவன் | அவுஸ்திரேலியா (வல்வெட்டித்துறை) | 20000. 00 |
| ம. சுரேந்திரன் | திருநெல்வேலி | 2000. 00 |
| அருணாசலம் சாவித்திரியம்மா | பருத்தித்துறை | 6000. 00 |
| இ. சிவராஜா (வைத்திய சேவைக்காக) | கரவெட்டி | 5000. 00 |
| க. மயூரன் | கனடா | 5000. 00 |
| சுபாஸ் | ஜேர்மனி | 50 யூரோ |
| க. கதிரேசு ஆசிரியர் | ஆனைக்கோட்டை | 3000. 00 |
| சு. ஜெயந்தன் | சாவகச்சேரி | 15000. 00 |
| பொ. ஞானேஸ்வரி | மலேசியா | 5000. 00 |
| ப. சுகுனேந்திரன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| பொ. யுககுலராஜா | மானிப்பாய் | 2000. 00 |
| திரு அரசரட்ணம் யாழ் பிரதேச அலுவலகம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு தர்மராஜன் குடும்பம் | டென்மார்க் | 3000. 00 |
| ஐ. வரதன் | கனடா | 5000. 00 |
| சுதா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| S. குகதாசன் (கண் வைத்திய நிபுணர்) | கோண்டாவில் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | 1மூடை அரிசி |

(தொடரும்...

தூய்மையான இன்பத்தை அறிந்தவர்கள் இறைவனை அறிந்தவர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர் 2017 மாசி மலர்

# அர்ப்பணிப்புடன் கூடிய சேவை

– சந்நிதியான் ஆச்சிரமம் –

சந்நிதியான் ஆச்சிரமம் பலவிதப்பட்ட சமய, சமுகப் பணிகளை மேற்கொண்டு வருவது யாவரும் அறிந்த விடயம். அவ்வகையில் பேரவையினால் வெளியிடப்பட்டு வரும் ஞானச்சுடரின் வளர்ச்சிக்கு மாதாந்தம் சிறப்புப்பிரதிபெறும் அன்பர்களின் ஆதரவும் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றிவரும் பல்துறைப் பணிகளுக்கும் உந்து சக்தியாகவே விளங்குகிறது. இந்த வரிசையில் கடந்த பல வருடங்களாக தைமாத ஞானச்சுடர் மலரில் இடம் பெறும் சிறப்புப்பிரதி பெறும் நிகழ்வில் இலங்கையின் பல பாகங்களில் இயங்கும் மக்கள் வங்கி உத்தியோகத்தரின் பங்களிப்பு மிகவும் காத்திரமான செயற்பாடாகவே உற்றுநோக்க வேண்டியுள்ளது. இவர்களுடன், வர்த்தகர்கள்-பிரமுகர்கள் எனப் பலரும் தைமாத சிறப்புப்பிரதி பெறும் நிகழ்வினில் பங்கேற்றமை எமக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்தது.

இச்செயற்பாட்டின் காரணமாகக் கிடைக்கும் நிதியானது ஆச்சிரமம் மலையகத்தில் மாதந்தோறும் ஆற்றும் பலவித அறப்பணிகளுக்கு அடித்தளமிட்டது என்று கூறுவதில் நாம் பெருமையடைகின்றோம். இப்பணியினை முன்னெடுப்பதற்கு காரண கர்த்தாக்களாக இருக்கும் இளைப்பாறிய வடபிராந்திய பிரதேச முகாமையாளராகிய திரு சி. பத்மநாதன் அவர்களுக்கும் அவருடன் இணைந்து இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர் திரு வ. சண்முகநாதமுதலி அவர்கட்கும் நாம் நன்றி கூர்வதுடன் இச்செயற்பாட்டில் இணைந்த அத்தனை மக்கள் வங்கி உத்தியோகத்தர்களுக்கும் எல்லாவித நலன்களும் கிடைக்கச் சந்நிதி வேலவனைப் பிரார்த்திப்பதோடு எமது நன்றியறிதலையும் கூறுவதில் பேரவையினராகிய நாம் பெருமிதம் அடைகின்றோம்.

| | |
|---|---|
| மக்கள் வங்கி இளைப்பாறியோர் | 39000. 00 |
| மக்கள் வங்கி யாழ். பிரதேச காரியாலயம் | 19500. 00 |
| மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லி வீதி | 36000. 00 |
| மக்கள் வங்கி யாழ். பிரதான வீதி | 16500. 00 |
| மக்கள் வங்கி யாழ் கன்னாதிட்டி | 7000. 00 |
| மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழகம் | 13500. 00 |
| மக்கள் வங்கி காங்கேசந்துறை | 2000. 00 |
| மக்கள் வங்கி சங்கானை | 8500. 00 |
| மக்கள் வங்கி சுன்னாகம் | 42000. 00 |
| மக்கள் வங்கி சாவகச்சேரி | 10250. 00 |
| மக்கள் வங்கி அச்சுவேலி | 7000. 00 |
| மக்கள் வங்கி நெல்லியடி | 4000. 00 |
| மக்கள் வங்கி வல்வெட்டித்துறை | 13000. 00 |
| மக்கள் வங்கி பருத்தித்துறை | 7000. 00 |
| மக்கள் வங்கி பரந்தன் | 9000. 00 |
| மக்கள் வங்கி திருமலை மாவட்டம் | 32000. 00 |
| மக்கள் வங்கி மட்டக்களப்பு மாவட்டம் | 10000. 00 |
| மக்கள் வங்கி வவுனியா மாவட்டம் | 15000. 00 |
| திருமலை - ஏனையோர் | 10000. 00 |
| யாழ் - ஏனையோர் | 36000. 00 |

*இறைவனின் அருள் கிடைத்தால்த்தான் இறைவனை நாம் அறிய இயலும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தைமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது
சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்ட சமூகம் சார்ந்த பணிகள்.



மனிதனின் செயல்களில் தியாகத்தையே இறைவன் பெரிதும் விரும்புகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தைமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்



ஒருபோதும் நம்பிக்கையை இழந்துவிடாதே; நம்பிக்கை ஓர் தெய்வீக குணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தைமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்.



ஒருவனுக்குத் தெய்வ சிந்தனையைவிட உலகில் நல்ல துணை வேறு இருக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் வெளியீட்டின்போது சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்.



இறைவனின் திருநாமத்தை ஜபிப்பது பிறவி நோய்க்கு மாமருந்தாகவும் மாற்றாகவும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் வெளியீட்டின்போது சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்.



உண்மையான தெய்வத் தொண்டில் நான் என்ற ஆணவம் இருக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் வெளியீட்டின்போது சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்.



மனிதன் கடவுளைக் காண்பதற்குச் சரணாகதியைவிட எளிய வழி வேறொன்றுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் வெளியீட்டின்போது சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்.



இறைவனை இடைவிடாமல் நினைப்பதனாலேயே மனிதன் தெய்வமாக மண்ணில் வாழ முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் வெளியீட்டின்போது சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்.



இறைவனை நினைத்து வாழாத மனிதனின் வாழ்வு அர்த்தமில்லாத வாழ்வாக முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறை பாடிப் பணிவோம்

– திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் –

திருமுறைப் பாடல்களிலே தெய்வீகம் நிறைந்துள்ளது. அவை மகத்துவம் மிக்கவை. பரம்பொருளை வேண்டித் துதித்துப் போற்றிப் பாடப்பட்டவை. அவற்றைப் பக்திபூர்வமாகப் பாடும்போது அவனருள் கிடைக்கப்பெறும். அவற்றை யாத்தோர் இறைவனது மெய்யடியார்கள். அவர்களிடமிருந்து தோற்றம் பெற்றதால் அவற்றுள் தனித்துவமான சக்தி குடி கொண்டிருக்கிறது. இவற்றைப் பாடியவேளையில் பல அற்புதங்கள் நிகழ்ந்திருப்பதால் அற்புத சக்தி அப்பாடல்களுக்கிருப்பது புலனாகின்றது. இவ்வாறு நடந்தேறிய சம்பவங்கள் சிலவற்றை இங்கு எடுத்து நோக்குவோம்.

திருஞானசம்பந்தப் பெருமான் அடியார்கள் சிலருடன் கொடிமாடச் செங்குன்றூரில் இருந்தகாலை உடனிருந்த அடியவர்களைக் குளிர்காய்ச்சல் பீடித்தது. அவர்களது நோயை நீக்கும்பொருட்டு "அவ்வினைக் கிவ்வினையாம்" எனத் தொடங்கும் பதிகத்தை ஞானசம்பந்தர் பாட, நோய் தீர்ந்தது. இப்பதிகத்தைப் பாராயணம் செய்தால் உடலைப் பற்றும் நோய்களுடன் ஆன்மாவைப் பற்றும் தீவினைப் பிணிகளும் அற்றுப்போகும்.

பாண்டிய மன்னனுக்கு வந்த வெப்பு நோய் தீர்வதற்கு "மந்திரமாவது நீறு" என்று ஆரம்பிக்கும் திருநீற்றுப் பதிகத்தைப் பாடி சம்பந்தப்பெருமான் அளித்த திருநீற்றைப் பூசியதும் நோய் அகன்றது. திருநீற்றின் பெருமையை இப்பதிகத்தைப் பாடுவோர் உணரலாம். இதனை உணர்ந்தோதி திருநீறு அணிவோரை எந்தப் பிணியோ பயமோ துன்பமோ அணுகாது.

சமண சமயத்திற் சார்ந்திருந்த திருநாவுக்கரசரை ஆட்கொள்ள இறைவன் அவருக்குச் சூலைநோயை ஏற்படுத்தியபோது, திருநாவுக்கரசுப் பெருமான் "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி சூலைநோய் நீங்கப்பெற்றார்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரைத் தரிசிக்கவென வரும்போது சேரமான் பெருமான் நாயனார் பொன்னையும் நவரத்தினங்களையும் ஏவலர்களின் தலையிலேற்றி அவருக்குக் கொடுத்தனுப்புகிறார். வழியிலே வேடர்கள் வந்து அவற்றைக் கொள்ளையிட்டுச் செல்கின்றனர். சிவபிரானே தம் பூத கணங்களை வேடர்களாக்கி அனுப்பியிருந்தார். சுந்தரர் அருகேயிருந்த திருமுருகன் பூண்டி ஆலயத்திற்குச் சென்று "கொடுகு வெஞ்சிலை" எனும் பதிகத்தைப் பாடி வேண்டுதல் செய்ய அப்பொருட்கள் மீண்டும் சிவ கணங்கள் மூலம் கிடைக்கப் பெறுகின்றன.

இவ்வாறு பல பதிகங்கள் பாடப்பட்ட வேளையில் வேண்டுதல் நிறைவேறி அதிசயமான பல நிகழ்வுகள் நடந்துள்ளன. இறை அருளைப் பெற அப்பாடல்களின் சக்தி உதவியுள்ளது. இன்றும் அவற்றை ஓதி நாம் பயன்பெற முடியும். முழுமையான நம்பிக்கையுடன் மனமொன்றி அவற்றை ஓதினால் நமது வேண்டுதல் நிறைவேறும். அதனால் இவை மந்திரங்களாக அமைந்துள்ளன என்றால் மிகையாகாது.

இவ்வாறு சில வேண்டுதல்களாக அமைந்தவற்றை விட இறைவனை எம் மனக்கண் முன் கொண்டுவரும் வகையில் வருணித்துப் பாடிய திருமுறைப் பாடல்களும்

*பயத்தை ஏற்படுத்துபவனும் பயத்தைப் போக்குபவனும் இறைவனே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. சிவபிரான் எழுந்தருளிய திருத் தலத்தையும் கோவிலையும் வருணிப்பவையும் உள. இறைவனது திருவிளையாடல்களைக் கூறும் பாடல்களும் இருக்கின்றன. அந்த அந்தத் திருத்தலத்தில் நிகழ்ந்த அற்புதங்களைச் சொல்பவையும் உள்ளன.

இவ்வாறு பல்வகைப் பாடல்களுள் நம் மனதை இறைமயப்படுத்தும் பக்திப் பெருக்கெடுக்க வைக்கும் பாடல்களைத் தேர்ந்தெடுத்து தினமும் பாராயணம் செய்வது எம் ஆன்ம ஈடேற்றத்திற்கு உறுதுணையாய் அமையும். அவ்வாறு பாராயணஞ் செய்யக்கூடிய சில பாடல்களின் பொருளை அறிந்துகொண்டால் மனம் ஒன்றித்து வழிபட வழிவகுக்கும். பொருளுணர்ந்து திருமுறைகளைப் பாராயணஞ் செய்து உய்தி பெறுவோம்.

''எல்லாம் இருந்தும் நிம்மதி இல்லை'' என்பது இன்றைய காலத்து மக்கள் அனைவரதும் முக்கிய புலம்பல். ''தேடுங்கள் கண்டடைவீர்கள்'' என்பது யேசு நாதர் வாக்கு. எங்கே நிம்மதி? இங்கே கிடைக்குமா? அங்கே கிடைக்குமா? என்று தேடினால் ஒருபோதும் கண்டுகொள்ள மாட்டீர்கள். அது உங்கள் உள்ளத்துக்கு உள்ளேயே ஒளிமயமாக நிற்கிறது. இருட்டு – வெளிச்சம், இன்பம் – துன்பம் இரண்டையும் சமமாகக் கருதும்படி பகவான் கீதையிலே போதித்தார். நமக்கு முன்னால் வாழ்ந்து இறந்தவர்களெல்லாம் ஆயுட்காலம் வரை நிம்மதியாக இருந்து இறந்தவர்கள் அல்ல. இனி வரப்போகிறவர்களும் நிரந்தர நிம்மதிக்கு உத்தரவாதம் வாங்கிக்கொண்டு வரப்போகிறவர்கள் அல்ல. ஆனால் கிடைத்ததை வைத்து நிம்மதியாக வாழ எல்லோருக்கும் தேவையானதைக் கொடுத்தே இறைவன் நம்மை அனுப்பி வைத்திருக்கிறார். பத்தாயிரம் ரூபாய் சம்பாதித்து புத்திகெட்டுத் திரிந்தவர்களும் உண்டு. இருநூறு ரூபா சம்பளத்தில் இணையற்ற அமைதி கண்டவர்களும் உண்டு. அழுக்கு வேட்டியைத் துவைத்துக் கட்டி ஆனந்தம் கண்டவர்களும் உண்டு. சலவை வேட்டியிலும் சரிகை இல்லையே என்று சலித்துக் கொண்டவர்களும் உண்டு. நல்ல மனைவிமேல் சந்தேகப்பட்டு வாழ்க்கையைத் தொலைத்துக்கொண்டவர்களும் உண்டு. மோசமான மனைவியை முழுக்க நம்பி நிம்மதியாக வாழ்ந்து முடித்தவர்களும் உண்டு. ''ஆன்மாவின் சொருபத்தை உணர்ந்து, அதன் இயக்கத்துக்கு ஒத்துழைப்பதுதான் தேகம்'' என்பதை அறிந்து, ஒழுங்காக வாழ்ந்தால் நிம்மதி நெஞ்சுக்குள்ளே இருப்பதைக் காணலாம். அது ஒன்றும் கடையில் விற்கும் கத்தரிக்காய் அல்ல... காசைக் கொடுத்து வாங்கிக் கொள்வதற்கு.

விஷம் உயிர்களைக் கொல்லவும் செய்யும். அதே விஷம் மருந்தாகவும் பயன்படும். சரியானவர் கைகளில் விஷமும் அமிர்தமாகிறது. தவறானவர் கைகளில் அமிர்தமும் விஷமாகிறது.

*மனத்தை இறைவனை நோக்கிச் செலுத்தினால் மனம் தெளிவாக இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசிமகத்தன்று புண்ணிய நதிகளில் தீர்த்தமாடினால் பாவ வினைகள் தீரும்

– திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள் –

மாசி மாதத்தில் இரு விசேட விரத தினங்கள் வருகின்றன. ஒன்று முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை நோக்கி அனுஷ்டிக்கின்ற மகா சிவராத்திரி. மற்றையது சிவத்தின் கூறாகிய சக்தியை நோக்கி மேற்கொள்ளப்படுகின்ற மாசிமகம்.

மகம் என்பது இருபத்தேழு நட்சத்திரங்களுள் ஒன்று. மாதந்தோறும் வருகின்ற மக நட்சத்திரத்தோடு கூடிய நாள் இறைவழிபாட்டுக்குச் சிறந்த நாளாகும். எனினும், மாசி மாதத்து மகம் பொருந்திய நன்னாள் மிகவும் புனிதம் நிறைந்த புண்ணிய நாள் எனலாம்.

மாசி மாதத்து மக நட்சத்திரத்தில் தக்கன் என்பவனின் மகள் தாட்சாயிணி பிறந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. தக்கன் தனது மகளாகச் சிவபெருமானின் சக்தியாகிய உமாதேவியார் வந்து பிறக்க வேண்டும் என்று வேண்டி பெருந்தவம் இயற்றினான். தக்கன் பிரமனின் புத்திரர்களில் ஒருவன் என்றும், பிரமனின் கட்டை விரலிற் பிறந்தவன் என்றும் கூறுவர். தக்கன் செய்த தவத்தைக் கண்ட சிவபெருமான் அவன் முன் தோன்றியபொழுது தான் உமாதேவியாரை மகளாகப் பெறவும் சிவபிரானை மருமகனாக அடையவும் வரம் வேண்டினான்.

வேண்டுவார் வேண்டியவற்றைத் தருபவர் ஈசன். அதனால் தக்கன் கேட்ட வரத்தை மறுக்காமல் வழங்கியருளினார். உமாதேவியாரும் வந்து தக்கனுக்கு மகளாகப் பிறந்தார்.

தெய்வக் குழந்தைக்குத் தாட்சாயிணி எனத் தக்கன் பெயரிட்டு அன்போடு வளர்த்துச் சிவபெருமானுக்குத் திருமணம் நிறைவேற்றினான். தாட்சாயிணி மாசிமகத்தன்று திருவவதாரம் செய்தமையால் பிறந்த தினமான அந்தப் புனிதநாள் மகத்துவம் பெறுகின்றது.

மாசிமகம் விழாவாகவும், தேவியை நோக்கிய விரதமாகவும் இந்துக்களால் காலந்தோறும் அனுட்டிக்கப்பட்டு வருகிறது. அம்பாள் ஆலயங்களில் மாசி மகத்தன்று விசேட பூசைகள், விழாக்கள், திருஉலாக்கள், திருஊஞ்சல் ஆகிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

தென்னிந்தியாவில் கும்பகோணத்தில் மாசிமக உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மகாமகம் வருகிறது. அந்தப் புண்ணிய நன்நாளில் கும்பகோணத்தில் புனித நதியில் தீர்த்தமாடி நலம்பெற பல இலட்சக்கணக்கான பக்தர்கள் எதிர்பார்த்திருப்பார்கள்.

வடஇந்தியாவில் "கும்பமேளா" எனும் விழா வெகு விமரிசையாக இந்தக் காலப் பகுதியில் கொண்டாடப்படுகிறது. கும்பமாதம் என்பது மாசிமாதம். எனவே கும்பமேளா என்றால் மாசி மாதத்தில் நடைபெறுகின்ற விழா எனப் பொருள்படும்.

மாசிமகம் கூட தீர்த்தத்தோடு தொடர்புள்ள புனித நாளாகக் கொள்ளப்படுகிறது. கும்பகோணம் மாசிமகத் தீர்த்தத்துக்கு விசேடம் பெற்றுள்ள திருத்தலமாகச் சொல்லப்படுகிறது.

கங்கை, கோதாவரி, நர்மதை, சிந்து, சரஸ்வதி, மதுரா, மாயா, அவந்தி கோடி தீர்த்தம் பஞ்சந்தம், யமுனை,

*தனக்குள்ளே இறைவனைக் காணாதவன் வெளியேயும் அவனைக் காணமாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபநாசம், சேது போன்ற தீர்த்தங்களும் தீர்த்த மகிமை பெற்றவை. இந்தத் தீர்த் தங்களில் மாசிமகத்தன்று தீர்த்தமாடினால் பக்திமேலோங்கி வரும்- கீர்த்தி பெருகிவரும்.

மாசிமகத்தில் தீர்த்தமாடல் எவ்விதம் சிறப்பைப் பெற்றது என்பதற்குப் புராண வர லாறு ஒன்று கூறப்படுகிறது. ஒருமுறை சமுத் திரராஜனான வருணபகவானுக்குப் பிரம்ம ஹத்தி தோசம் ஏற்பட்டுவிட்டது. அப்பொழுது அவர் கட்டப்பட்டுக் கடலில் போடப்பட்டிருந் தார். வருணபகவான் தொழிற்படாமையினால் உலகில் மழையின்றி வரட்சியும், பஞ்சமும் ஏற்பட்டது. உயிர்கள் துன்புற்றன. தேவர்கள் உடனே முழுமுதற் கடவுளாகிய சிவபெரு மானிடம் சென்று வருண பகவானை விடு விக்கும்படி வேண்டிப் பிரார்த்தித்தனர்.

சிவபிரானும் இரக்கம் கொண்டு வருணபகவானை விடுவித்து அருளினார். வருணபகவான் விடுதலைபெற்ற பெருநாள் மாசிமக திருநாளாகும். ஈடேற்றம் பெற்று விட்ட மகிழ்ச்சியில் வருணபகவானும் எம் பெருமானை வரம் ஒன்று தருமாறு வேண்டி நின்றான். தனது பிரம்மஹத்திப் பிணி தீர வேண்டுமென்று வேண்டினான். சமுத்திரத்தில் நீரினுள் இருந்தபடியே சிவமூர்த்தியை வணங்கியமையால் தோச நீக்கம் கிடைத்தது.

இத்தகு பெருமை வாய்ந்த மாசிமகத் தன்று புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி நீராடி இறைவனை வழிபாடு செய்யும் அன்பர்களுக்கு அவர்களின் பாவ வினைகள், பிறவிப் பிணி கள் துன்பங்கள் யாவும் நீங்கப்பெற்று அவர் கள் உய்வுபெறத் திருவருள் பாலிக்க வேண் டும் என இறைவனை வேண்டினான்.

சிவபிரானும் வருணன் கேட்ட வரத்தை வழங்கியருளினார். மாசிமகத்தன்று தீர்த்த மாடல் இந்தவகையில் சிறப்புப்பெற்றுத் திகழ்கின்றது.

**சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்றுவரும் வாராந்த நிகழ்வின் வரிசையில் எதிர்வரும் 03.03.2017 வெள்ளிக்கிழமை தொண்டுநாத சுவாமி அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.**




*எல்லா உயிர்களிடத்தும் இறைவனை உணர்ந்தால், மக்கள் சேவையே மகேசன் சேவையாகிவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரைத்தொடர் - 28

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## ஈழத்துச் சித்தர்கள்

### செல்லப்பா சுவாமிகள்

வட்டுக்கோட்டையிலிருந்து வந்து நல்லூரிற் குடியேறி வயல்களிற் பயிர்செய்து வாழ்ந்த வேளான் குடியைச் சேர்ந்த வல்லிபுரம் என்பவர் பொன்னம்மா என்னும் பெண்ணைத் திருமணம் செய்து இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வந்தார். இவர்களுடைய இல்லற வாழ்வின் இனிய பேறாக நான்கு பிள்ளைகள் தோன்றினார்கள். இவர்களுடைய மூத்த பிள்ளையாகத் தோன்றியவரே செல்லப்பா சுவாமிகள். இவர் யாழ்ப்பாணம் கச்சேரியில் ஆராய்ச்சி உத்தியோகத்தராகப் பணிபுரிந்தார் எனக் கூறப்படுகிறது. கடையிற் சுவாமிகளின் சீடர்களில் ஒருவர் செல்லப்பா சுவாமிகள். செல்லப்பா சுவாமிகளின் ஒரேயொரு சீடர் யோகர் சுவாமிகளே ஆவார்.



நல்லூர் முருகப் பெருமான் ஆலய முன்றலில் அமைந்திருக்கும் தேர்முட்டிப் படியில் வாசம் செய்தவர் செல்லப்பா சுவாமிகள். இறை பக்தி கூடிய பித்தரைப்போல உன்மத்தம் கொண்டு திகழ்ந்தார். அகத்திலே இறையொளி கண்ட மாபெரும் சித்தர். நிட்டை கூடி நிர்விகற்ப சமாதி கூடிய யோகபுருடர். சித்தம் முழுவதும் சிவமயமாகக் காட்சி தந்த செல்லப்பா சுவாமிகளின் உண்மை நிலையறியாது பிரபஞ்ச மயக்கத்தில் வாழும் மக்களில் பலர் அவரை விசர்ச் செல்லப்பா என்றே அழைத்தார்கள்.

இவர் பிச்சையேற்றுண்பதும், நல்லூர்த் தேரடியிலே வில்வ மரத்தடியில் நிட்டை கூடுவதுமாக இருந்து வந்தார். நிட்டை கலைந்த நேரங்களில் விசிறிகளை விசித்திரமாக அமைப்பார். வெகுதூரம் நடந்து செல்வார். முனியப்பர் கோயிலடிக்கும் கொழும்புத் துறைக்கும் அடிக்கடி செல்வார். நல்ல கறியும் சோறும் பாகம் செய்வார். தம்மோடு தாம் போராடிக் கொண்டு அவற்றை உண்பதற்குப் பதிலாக பானை சட்டிகளைத் தடியால் அடித்து உடைப்பார். புத்தகத்தைத் தலையணையாக வைத்துக்கொண்டு தாம் இழைத்த பன்னாங்கின்மீது துயில் கொள்வார். கந்தைச் சீலையை விரும்பி உடுத்திக் கொள்வார். தம்மை அன்போடு அணுகுவோரைக் கசிவில்லாதவர் போலக் கனன்று பேசுவார். சித்து வித்தைகளை இகழ்வார்.

*இறைவனைச் சரணடைந்தவர்கள் எதற்கும், எப்போதும் பயப்பட வேண்டியதேயில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையிற் சுவாமிகள் ஒருமுறை நல்லூர் வீதியிற் சென்றபோது விசரரென விலங்கில் போடப்பட்டிருந்த செல்லப்பருக்கு அருகாமையில் சென்று உற்றுநோக்கி அவரைப் பார்த்த பின்பு அங்கு நின்றவர்களைப் பார்த்து "முற்றிவிட்டது; அவிழ்த்து விடுங்கள்" எனக் கூறினார். செல்லப்பரிடம் முதிர்ந்திருந்த தெய்வீகப் பித்தைத் தெளிவாகக் கண்ட பின்னரே கடையிற் சுவாமிகள் அவ்வாறு கூறினார். செல்லப்பா சுவாமிகளும் கடையிற் சுவாமிகளை பெரிய மகான் என நினைந்து அவர்மீது மிகுந்த மரியாதை கொண்டு இருந்தார்.

கடையிற் சுவாமிகளிடம் சித்து வல்லபம் இருந்தது. சித்து விளையாட்டுக்களை செல்லப்பா சுவாமிகள் அறவே வெறுத்தார். கடையிற் சுவாமிகளில் நின்றும் வேறுபட்டு நிற்கும் பல இயல்புகள் செல்லப்பா சுவாமிகளிடம் காணப்பட்டன. இதனைச் சிவயோக சுவாமிகள் ஒரு சமயம் தெளிவாகப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"மற்றவர்களை வசியம் பண்ணுவதும் ஒரு மயக்கம். கடையிற் சுவாமியும் அகப்பட்டுக் கொண்டார். ஆனால் செல்லப்பர் பெரிய மகான். இப்படிச் சித்து விளையாட்டுக்களால் யாரையும் மயக்கவில்லை. 'ஆரறிவார்', 'எப்பவோ முடிந்த காரியம்' என்று சொல்லிக் கொண்டு திரிவார். யாராவது அவரை விழுந்து கும்பிடுவதற்கு வந்தால் உடனே விரைந்து சென்று சலங்கழிக்கும் இடங்களில் நிற்பார்."

நல்லூர்த் தேர் முட்டிப் படியிலே வீற்றிருந்த செல்லப்பர் கறுத்த மேனியும் வெறித்த பார்வையும் கொண்டவராக இருந்தார். அவரது முகத்தில் மூர்த்திகரத்துக்குப் பதிலாக முட்டாள்தனமே இருந்தது. மனிதர்கள் நிறைந்திருக்கும் திருவிழாக் காலங்களிலும் தேர் முட்டிப் படியிலே இருந்து தன்னிலே முகமலர்ந்து சிரித்தவராய் இருப்பார். சில வேளைகளில் அப் படியிலே சிங்காரமாய்ப் படுத்திருப்பார். வீதியால் செல்லும் வீணர்களைச் சின்னத்தனமான வார்த்தைகளால் ஏசுவார். அவர்களும் இவரைப் பலவாறாக இகழ்ந்து விசரரென ஏசிச் செல்வர். கந்தைத் துணி அணிந்தவராய் கந்தன் திருமுன்றிலினின்று வருவார் போவாரை வாயில் வந்தபடி ஏசுவார். ஊர்தோறும் அலைந்து திரியும் இவரைக் கண்டவர்கள் உன்மத்தனென்று இகழ்வர். இல்லங்களுக்குச்சென்று பிச்சைகேட்டு நிற்பார். கொடுப்பதை வாங்கி உண்பார். சில நாள்களில் தாமே சமைத்து உண்பார். இவர் கண் துயில்வது குறைவு. பாதிச் சாமத்தின் பின் கையைத் தலையணையாக வைத்துத் தரைமீது கண்ணுறக்கம் கொள்வார். பாரறிந்த இந்தப் பைத்தியக்காரர் பனையோலை, தென்னையோலை என்பவற்றைக் கொண்டு நூதனமாகப் பொருள்களை உருவாக்கும் கைவண்ணம் பெற்றிருந்தார். இவர் காவி புனையவில்லை; உருத்திராட்சம் அணியவில்லை; நீறணியவில்லை; நெற்றியில் பொட்டும் இடவில்லை; சாதியாசாரம், சமயாசாரம் எதனையும் பேணவில்லை; நாய் போல் திரிவார்; நரிபோல் உழல்வார்; ஆசார சீலர்களான சைவர் பலர் இவரை ஏளனம் செய்தனர். இவர் தத்துவ வாதம் எதுவும் புரியவுமில்லை; யோகத்தில் அமரவும் இல்லை.

அறிவறியும் நாட்டங்கொண்ட யாராவது இவரை அண்டிவந்தால் "நாமறியோம்" என்று அவர்களைப் பார்த்து நகை செய்வார். "ஆரறிவார்" என்று அதட்டுவார். இவர் தன்னை யாரென்று அறியாதவண்ணம் மறைத்துக் கொண்டு ஓடி உலாவித் திரிந்தார். செல்லப்பர் தாம் பூண்ட விசர்க்கோலத்தைச் செம்மையாக நடித்தார்.

*தெய்வீகப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருந்தால் இறைவனடி சேர்வது சுலபம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாற்பது வருட காலமாகத் தாம் எடுத்த கோலத்தை
எவரும் சந்தேகப் படாமல் நடித்துக் காட்டி விட்டுப் போனார்"

எனத் தனது குருநாதன் செல்லப்பா சுவாமிகள் பற்றி யோகர் சுவாமிகள் கூறுவார். பைத்தியக்காரருக்கும் ஞானநிட்டையாளருக்கும் பொதுவான கோலத்திலே செல்லப்ப தேசிகர் நடமாடினார். உலக மாயையில் மயக்குண்டவர்கள் அவரைப் பைத்தியக்காரரெனக் கண்டனர். சத்தியத்தைக் காண்பதில் தாகம் கொண்டோர் அவரைப் பேரறிவாளனாகக் கண்டனர். சிவயோக சுவாமிகள் தன்னைக் காத்தாட்கொள்ளும் தவராச குருவடிவமாகக் கண்டார். யோகர் சுவாமிகள் தான் அருளிய நற்சிந்தனையில் தனது குருநாதராகிய செல்லப்பா சுவாமிகளைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"வேதம் உணர்ந்த குருநாதன்; நிருமலன், காமக் குரோத
மோகம் கடந்தவன்; திருவடி மறவாச் சீருடையாளன்;
மாறாத மௌனத் தியானப் பிரவேசன்; விருப்பு வெறுப்பை
வேரறப் பறித்தோன்; மாறாக் கருணையன்; வந்த
பேருக்கு வாழ்வையளிப்பவன்"

செல்லப்பருடன் பலநாட் பழக்கம் கொண்ட சிலர் அவர் ஒரு பெரிய மனிதர் என்பதை உணர்ந்து அவரைத் தரிசித்து வரும் நியமம் பூண்டிருந்தனர். இவர்கள் பெரும்பாலும் கொழும்புத்துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். இதனால் செல்லப்பரைக் கொழும்புத் துறையாரின் சுவாமி எனவும் கூறினர். ஒருநாள் செல்லப்பரைத் தரிசிக்கச் சென்ற விதானையார் திருஞானசம்பந்தருடன் இளைஞராகிய யோகர் சுவாமிகளும் சென்றிருந்தார். செல்லப்ப தேசிகர் தம்மைத் தரிசித்து நின்ற யோகநாதனை நோக்கி இடிபோன்ற குரலில் "யாரடா நீ" என்று அதட்டினார். உன்னுள்ளே பாரடா! உள்ள பற்றெல்லாம் தீரடா! என்றுங் கூறினார். தேகமே மெய்யென்று பழகிப்போன ஒருவரின் தேகம் போன்ற திரைகளை எல்லாம் நீக்கி "ஆத்மாவே நாம்" என்பதை உணர்த்தும் நாத ஒலியே அந்த ஞான மொழியாகும். இந்த நாத ஒலியின் உட்பொருளை யோகர் சுவாமிகள் உணர்ந்து கொண்டார்.

"யாரடா நீயென்று அதட்டினான்
அன்றே யான் பெற்றேன் அருள்" எனத் தனது நற்சிந்தனைப் பாடலில் யோகர் சுவாமிகள் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நன்மருந்து அன்பரின் நெஞ்சிலூறியதும் செல்லப்பர் தனது திருமுகத்தால் யோகரை நோக்கி "நல்லதப்பா வா உன்னைப் போன்ற ஆளைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினார். இதனைக் கேட்டதும் "ஈனப்பிறவி நீக்கும் எழிலை அறிந்தவர் போல யோகர் சுவாமிகள் மகிழ்ச்சி அடைந்தார்.

சற்குரு தரிசனத்தாற் பெற்ற சகல பாக்கிய சுகங்களுடனும் யோக முனிவர் அரச சேவைக்காகக் கிளிநொச்சியைச் சென்றடைந்தார். இரணைமடுக் குளத்திற்கு அருகில் இருந்த நீர்ப்பாசனத் திணைக்களத்தில் களஞ்சியப் பொறுப்பாளராகப் பணியாற்றினார். அலுவலகத்தில் ஆறுதலாக இருக்கும் நேரத்தில் தேரடி அனுபவம் நினைவுக்கு வந்தது. அவ்வனுபவம் இன்பந்தேக்கும் சுகானுபவமாக இருந்தது. செல்லப்ப தேசிகரை அடிக்கடி சந்திக்க வேண்டும் என்ற தாகம் பெருகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பரிடம் கேட்டறிந்தவற்றை அமைதியாயிருந்து அசை போடுவதற்கும், அவற்றைச் சாதனை செய்வதற்கும் உரிய இடமாகக் கிளிநொச்சி அமைந்தது. நீள நினைந்தும் நிட்டை கூடியும், தியானத்தில் இருந்தும், யோகத்தமர்ந்தும் குருமணியிடம் கேட்டவற்றைச் சாதனை செய்து வந்தார் யோகர் சுவாமிகள். வையகமெல்லாம் துயிலில் மூழ்கி மோனத்திருக்கும் நள்ளிரவு நேரத் திலே இவர் தியானத்தில் மூழ்கியிருப்பார்.

தமக்கு ஞானநெறி முதலியவற்றைப் போதித்த தமது குருமணி "ஓதாது வேதம் உணர்ந்த பேரறிவாளன்" என்பதை எண்ணி வியக்கலானார். அவருடைய நாமம் சொல்லச் சொல்ல சுவை பயத்தது. செல்லப்ப மூர்த் தமே அவருடைய தியான மூலமாயிற்று. அவருடைய திருவடிகளே பூஜா மூலமாயின. அவரது அமுதமொழிகளே மந்திர மூலமாயின. வடதிசை காட்டும் திசையறி கருவிபோல எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் தேர்முட்டிப் படிக்கே அவர் தம் சிந்தனை சென்றது. ஒளியையும் இருளையும் ஒரே நேரத்தில் நாடுவது பொருந்தாதென்பதைத் தெளிந்த யோக முனிவர் உத்தியோகம் முதலிய உலக கருமங்களைத் துறக்கும் திட சித்தமுடையவரானார். தான் செய்த அரச சேவை உற்றார், உறவினர் அனைத்தையும் துறந்து செல்லப்பரின் சீரடியானாக நல்லூர்த் தேரடிக்குச் சென்று அவர்தம் திருவடியையே சரணமெனப் பற்றியிருந்தார்.

குரங்குபோல் கூத்தாடும் இயல்பை உடையது மனம். தவஞானக் குருவடிவத்தை அண்டி மிகவும் விழிப்போடு செயற்பட்ட யோக முனி மனம் முதலியவற்றின் குறும்புகளால் சிறிது தளம்பிய வேளைகளில் எல்லாம் பெரிதும் வேதனைப்பட்டார். ஆசா பிசாசை அகற்ற முடியவில்லையே எனவும் சித்தத்தை நில் என்று நிறுத்த முடியவில்லையே என்றும் மனம் வெதும்பினார். மனத்திலே தளர்ச்சி ஏற்பட்டவராய்த் தனது குருநாதனை நினைந்து

"செல்வக் குருநாதா செல்வக் குருநாதா
சிந்தை தடுமாறுதடா திருவருளைத் தந்திடடா"

என்றும்,

"கூத்தாடுதே மனமென்ன கொடுமை
கும்பிட்டேன் குருநாதா நான் உன் அடிமை"

என்றும்,

"பாரையனே கடைக் கண்ணாற் பாரையனே"

என்றும் அழுது மன்றாடித் தனது குருநாதனை யோகர் சுவாமிகள் வேண்டினார்.

ஆனால் செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிகளின் வேண்டுதல்களையெல்லாம் செவிமடுக்கவில்லை. "வில்லங்கங்கள் வரட்டும்; வில்லங்கத்துள்ளே விளங்கும் நல்லருள்" என்று கூறிக்கொண்டு வன்மம் சாதிக்கிறாரோ என்று எண்ணும்படியாகச் சும்மாயிருப்பார். தேக மாயையை வெல்லும் முயற்சியானது சோதனைகளும் வேதனைகளும் நிறைந்ததாய் நெருப்பாற்றைத் தாண்டும் முயற்சியாகவே யோகர் சுவாமிகளுக்கு அமைந்திருந்தது. தான்பட்ட பாடுகள் அனைத்தையும் திரட்டிக் கொடுக்கும் சந்தர்ப்பமொன்று செல்லப்பரின் சீடராகிய பின்பு யோகருக்கு வாய்த்திருந்தது. கொழும்புத்துறை விதானையாரும் செல்லப்பரின் வேறு சில சீடர்களும் சுவாமியுடன் உரையாடிக்கொண்டிருந்த வேளையில் விதானையார் யோகர்

**இறைவனின் கிருபை பக்தனைப் பக்குவப்படுத்துவதற்கு வறுமையின் வடிவத்தில் வருகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியை நோக்கிச் "செல்லப்பர் எல்லாவற்றையும் உங்களிடத்தில் கொட்டிப் போட்டுப் போய்விட்டார்" என்று கூறினார். அப்பொழுது யோகர் சுவாமிகள் "சும்மாவா பெற்றேன் மலையை வெட்டியல்லவா பெற்றேன்" என விதானையாருக்குப் பதில் கூறினார்.

செல்லப்ப மூர்த்தம் தேர்முட்டிப் படியிலே மாறாத மௌனத் தியானத்திலிருந்த வேளைகளில் அக்குரு மூர்த்தத்தை மௌன மொழியாலே அறம் உரைக்கும் தட்சணாமூர்த்தி வடிவமாகவே உணர்ந்தார். நல்லூர்க் கருவறையிலும், தேரடியிலும் எழுந்தருளியிருப்பவர் ஒருவரே என்னும் தெளிவு சீரிடம் நிலைத்தது. இறைவனே குருவாக வந்துள்ளார் எனும் உண்மையை உணர்ந்த யோகர் இதனைத் தன்னுடைய நற்சிந்தனைப் பாடலின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.

"தேகமே மெய்யென்று சிதடனாய்த் திரிவேனை
மோக மறுத்தாண்ட முழுமுதலை மொய்குழலாள்
பாகம் மறைத்துப் பரிந்து வந்த பாக்கியத்தை
நாகமலர் சொரியும் நல்லை நகர் கண்டேனே"
"இருவினையான மதிமயங்கி இடர்பட்டுக் கிடப்பேனைக்
கருணையினால் ஆண்டு கொள்ளக் கடவுள் திருவுளங்கொண்டு
அருள்மேனி தாங்கி அவனியிலே வந்தானைத்
திருவாழும் நல்லை நகரத் தேரடியில் கண்டேனே"

நல்லைக் கந்தனின் திருவருளாலும் செல்லப்பா சுவாமிகளின் குருவருளாலும் யோகர் சுவாமிகளுக்கு சித்துக்கள் செய்யும் வல்லமை வாய்த்திருந்தது. நல்லூர்க் கந்தனின் திருவிழா நாளொன்றில் சுவாமி வீதி வலம் வரும்பொழுது "இன்று சுவாமி நன்றாக நனையப் போகின்றார்" என யோகர் கூறினார். யோகர் சுவாமிகளுக்குப் பின்னால் நின்ற செல்லப்பர் "இந்த நல்லூர் வீதியில் இப்படிச் சொன்னவர்கள் பலபேர்" என்று உறுமலுடன் கூறினார். இதனைக்கேட்ட யோகர் வெட்கம் அடைந்து ஒதுங்கி நின்றார். யோகர் கூறியதைப் போன்று நிர்மலமாயிருந்த வானம் சற்றுநேரத்தில் கறுத்திருண்டு மழை பெய்தது. வீதிவலம் வந்த சுவாமியை நனைத்தது. ஆனால் செல்லப்பர் சிவயோகரிடம் தளிர்விட்ட சித்துக் காட்டும் மயக்கத்தை அப்பொழுதே அகற்றிவிட்டார். உலகமே செப்படி வித்தை; அந்தச் செப்படி வித்தைக்குள் செய்யும் மற்றொரு செப்படி வித்தையே சித்து. ஆன்மீக ஞானிகள் அரிதாகப்பெற்ற ஞான பொக்கிஷத்தை இப்படி வீணாகச் செலவு செய்யக்கூடாது. இவற்றின்று விடுபட்டு நிற்பதே ஞானியர் இயல்பு என்பதைச் செல்லப்பா சுவாமிகள் தனது சிஷ்யருக்கு குறிப்பால் உணர்த்தினார்.

யோகநாதரோ இவர் போமிடங்கள் தோறும் அவர் பின்னே போவார். பிச்சை கிடைத்தால் உண்பார்கள். மழையும், வெயிலும், பசியும் உடம்பை வாட்டினாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் இருவரும் வேகமாய் நடப்பார்கள். செட்டிமாரது கடைகளுக்கு முன்னே போய் பிச்சை கேட்டு நிற்பார்கள். ஏதோ எண்ணங் கொண்டவர்கள் போல அங்கிருந்து கீரிமலைக்கு நடப்பார்கள். தீர்த்தம் ஆடாமலே ஆடிவிட்டோம் என்று கூறிக்கொண்டு திரும்புவார்கள்.

யோகர் சுவாமிகள் நல்லூரை விட்டுக் கால்நடையிற் கதிர்காமம் செல்லப் புறப்பட்டுக் காடும் மலையும் கடந்து சென்று

துன்பம் என்ற வாயில் வழியாகத்தான் ஞானம் என்ற அரண்மனைக்குள் நுழைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமத்தை அடைந்தார். மலையின் மருந்தாய் மந்திரவடிவாய் அமைந்த கதிர்காமத்தில் இருந்து அருள்புரியும் கந்தவேட் பெருமானைப் பணிந்து துறவியாகவே வாழ்ந்தார். செல்லப்பா சுவாமிகளுடன் யோகநாதரைக் காணாத சுற்றத்தவர்கள் செல்லப்பரிடம் தம் யோகநாதர் எங்கே என்று கேட்டார்கள். யோகநாதன் செத்தே போனான் என்று அவர் பதிலிறுத்தார். சுற்றத்தவர்கள் அவர் இறந்து விட்டார் எனக் கருதி மடிந்தார்க்குச் செய்யும் கடன் களையெல்லாம் செய்தார்கள். பின்னர் யோகநாதர் கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிய பின்னரே உண்மையை உணர்ந்தார்கள்.

கி.பி. 1910ஆம் ஆண்டில் நல்லைக் கந்தன் ஆலயத்து தேரடியில் யோகநாதருக்கு தீட்சை உபதேசம் செய்தருளினார். கி.பி. 1915ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் அச்சுவினி நாளில் நல்லோர் மதித்து வழிபட நல்லூரிற் சமாதியடைந்தார். ஏறக்குறைய 55 வருடங்கள் வரை செல்லப்பவேடம் உலகிலேயே நடமாடித் திரிந்தது.

நல்லூர்த் தேரடியில் வீற்றிருந்த செல்லப்ப தேசிகர் நான்கு மகா வாக்கியங்களை அருளினார்.

1) ஒரு பொல்லாப்பும் இல்லை.
2) முழுதும் உண்மை.
3) எப்பவோ முடிந்த காரியம்.
4) நாமறியோம்.

யோகர் சுவாமிகள் அருளிய நற்சிந்தனையில் இம் மகா வாக்கியங்கள் நூற்றுக்கணக் கான இடங்களில் பொறிக்கப்பெற்றுள்ளன. இந்த மகா வாக்கியங்களின் மாபாடியமே யோகர் சுவாமிகள் அருளிய நற்சிந்தனைப் பாடல்கள் ஆகும்.

“முழுது முண்மையென முன் சொன்ன மொழி
எழுதிக் காட்டிட என்னாலிசையுமோ” எனவும்
“செப்ப முடியாதன தங்கமே தங்கம்
செல்லப்பன் திருவாக்குத் தங்கமே தங்கம்”

எனவும் கூறியிருக்கின்றார். செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயம் நல்லூர் முருகன் கோயிலுக்கு முன்பாக உள்ள பிரதான வீதிக்குத் தெற்குப் புறமாய் அமைந்துள்ளது.

(தொடரும்...

---

## அருகம்புல்

அகரம் எப்படி எழுத்துக்களுக்கு முதலாவதாகத் திகழ்கிறதோ, அதேபோல் உலகில் முதன் முதலில் தோன்றியது அருகம்புல். அந்த அருகம்புல் தொன்மைக் கடவுளாகிய விநாயகருக்கு உகந்ததாயிற்று. பல்வேறு நறுமலர்கள் இருந்தாலும் விநாயகப் பெருமானுக்கு மிகவும் உகந்தது. அவரின் அர்ச்சனைக்கு உரியது அருகம்புல். “ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி” என்று வாழ்த்துவது வழக்கம். அருகு முளைத்து, பல இடங்களில் வேரூன்றி நீண்டு வளர்ந்துகொண்டு போவது, பச்சனவாகத் தென்படுவது மனதுக்கு நிம்மதி தரும்.

ஸ்ரீரங்கம் கோவில் வாசலில் விநாயகப் பெருமானுக்கு என்று அருகம்புல்லும், ஸ்ரீரங்க நாதருக்குத் துளசியும் விற்பனைக்கு இருக்கும்.

*சதாகாலமும் இடைவிடாமல் கடவுளை நினைந்து வருவதே மிகப்பெரிய தவமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்த்தி யான் செய்ய நித்தம் வலம் வருவேன்

– திரு பொ. பாலேஸ்வரன் அவர்கள் –

அடியேன் அல்லன் அழிந்தே போனேன்
ஆட்கொள் எனை யிங்கு
பொடிசேர் உடலும் பொய்யாய் காண
புழுத்தே போகும் போய்விட்டால்
அடியா ரானார் ரெல்லாரும் தேடி
வந்தார் உன் தாள்சேர
படியே யெனத் தான் கண்ணுற்றார்
பாவம் போக பணிவுற்றார்.

எந்தன் அன்பும் பொய்யன்று யான்
பெற்ற அன்பும் பொய் யன்று
சிந்தை செயலு மொன்றாகித் தேடித்
தேடித் திரிதல் இயல்பாமோ
முந்தையான காலம் தன்னை மூடி
மறைக்க முயல்வனோ
கந்தனான தேவன் தன்னை இன்னும்
காலம் மறக்க முடியுமோ?

பூக் கொண்டு திருமேனி போர்த்தி மகிழுவேன்
ஆர்த்தி யெடுத்து ஆரத்தழுவி நிற்பேன்
பாக் கொண்டு பாடி ஆடி மகிழ்ந்திடுவேன்
நேர்த்தி யான் செய்ய நித்தம் வலம் வருவேன்
நோக் கெலாம் ஒன்றாகி நோய் துன்பம் நீக்கிடுவேன்
நீர்த் தீர்த்தம் கொண்டுமே வார்த்து மகிழுவேன்
சாக்கடைப் புழுப்போல் சகதியில் வீழாமல்
சந்நிதியான் திருவடியே சார்ந்து யான் நிற்பேன்.

ஊனாகி உயிராகி உன்னுடனே யான் கலந்து
தேனாகி நிற்கும் சிற்றம்பலவன் மைந்தா
வானோர் இடர் தீர்க்க வந்துதித்த வேலா
ஆற்றங் கரைய மர்ந்த அருமந்த புதல்வா
நானோ விதி விலக்கோ நாயினேனைக் காண்பாராய்
தேனார் அமுதமாய் தித்திக்கும் தீஞ்சுடரே
வானோர் துயர் தீர்த்தாய் என நினைத்து மாளாமல்
நேராய் வந்துன் தாள் பணிதல் நன்றாமோ!

*ஜபம் செய்துகொண்டு வந்தால் இறைவனது காட்சி தானாக வந்து சேரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி வீரகத்திப் பிள்ளையார்

– திரு ம. சிவயோகசுந்தரம் அவர்கள் –

வான் பயிர்களும் வளம் சேர்க்கும் செய்பயிர்களும் பசுமை தவழக் காட்சியளிப்பது கைதடியூர். பண்டைய பாரம்பரியத்தைப் பேணும் கைதடியில் மூலை முடுக்குகள் எல்லாம் சைவாலயங்கள் அமைந்துள்ளன. அத்துடன் பல சித்தர், யோகிகளின் ஆச்சிரமங்களும், ஆன்மீக நாட்டத்தின் சின்னமாகக் கைதடியூரில் அமைந்துள்ளன. கடையிற் சுவாமிகள் முதல் மார்க்கண்டு சுவாமிகள் வரை பல சித்தர்கள் கைதடி மண்ணில் பாதம் பதித்துக் கைதடி மக்களை ஆசீர்வதித்துள்ளனர். கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய அயலில் யோகர் சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளை ஒரு குடிசையில் அமர்த்தித் தாமும் சிலவேளைகளில் தங்கி, சோல்பரிப் பிரபுவின் மகன் சந்தசுவாமியையும் இருத்தியமை கைதடி மக்கள் பெற்ற பெரும் பாக்கியமாகும்.

இப்படிப் பல்வகையிலும் புகழ்பூத்த கைதடியூரில் மிகப் பழமையும் புதுமையும் வாய்ந்த கைதடி வீரகத்தி விநாயகர் ஆலயம் நான்கு நூற்றாண்டு காலப் புராதனமானது. கி.பி. 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், கைதடி வீரகத்திப்பிள்ளையார் அமைந்துள்ள பகுதி, அடர்ந்த பற்றைகள், வளர்ந்த மரங்கள் மற்றும் தாளைகளும் செறிந்த இடமாக இருந்தது.

அப்பகுதியில் மாடு மேய்ப்பதும் விறகு வெட்டுவதும் குழை அறுப்பதும் அந்த அயலில் இருந்த குடிமக்களின் வழமையான பழக்கங்கள் ஆகும். ஒருநாள் இவ்விடத்தில் மூதாட்டி ஒருத்தி குழை அறுத்துக்கொண்டு இருந்தபோது கொக்கியில் இருந்த கத்தி கட்டுத் தளர்ந்து இருந்ததால் கழன்று நிலத்தில் விழுந்தது. அப்பொழுது மற்றொரு புறத்தில் மாடு மேய்த்துக்கொண்டிருந்த சிறுவன் ஒருவனைக் கூப்பிட்டு, தன்னிடமிருந்த மற்றக் கத்தியைக் கொடுத்து, பற்றையை வெட்டி அகற்றித் தன்னுடைய கொக்கிக் கத்தியை எடுத்துத் தருமாறு அம்மூதாட்டி கேட்டார். அப்படிச் சிறுவனும் பற்றையை வெட்டும் போது "கணீர்" என்ற பெரியதொரு சத்தம் கேட்டது. சிறுவனது கையும் தவறுதலாக வெட்டப்பட்டுக் கத்தியும் உடைந்து விட்டது. அப்பொழுது அங்கே ஒரு விநாயகர் சிலை காணப்பட்டது. கத்தி பட்டதால் அதன் கையில் ஒரு தழும்பும் காணப்பட்டது. இவ்வதிசயத்தைக் கண்ட மூதாட்டியும், சிறுவனும் உடனே அக்காணிச் சொந்தக்காரரான வேலப்ப முதலியாருக்கு தெரிவித்தனர். வேலப்ப முதலியார் அச்சுற்றாடலிலுள்ள பற்றைகளை நீக்கி ஒரு ஆலயத்தை நிறுவி எல்லோரும் வழிபட வழி செய்தார். பிள்ளையாரின் கையில் தழும்பு காணப்பட்டதால் "கைதறிப் பிள்ளையார்" என அழைக்கப்பட்டார். இச்சிறிய கோயிலே காலமுன்னேற்றத்தில் விரிவடைந்து மூன்று வீதிகளைக் கொண்ட பெரிய கோயிலாக "கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில்" எனப் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

இவ்வாலயத்திற்கு எதிரே இருக்கும் கண்டி வீதியில் உள்ள "புதன் கழிப்பாலம்" அக்காலத்தில் தனியாகப் பயணம் செய்வோர் மனதில், குறிப்பாக இராக் காலத்தில் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியது. அதனால், வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தைப்

*உள்ளன்புடன் செய்யப்படும் எந்தப் பிரார்த்தனையும் இறைவனின் காதுகளுக்கு நிச்சயம் எட்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலித்த சரவணமுத்து மணியகாரர் என்பவர் வீரகத்தி விநாயகரை நினைத்து வழிபாடியற்ற, புதன் கழிப்பாலத்துக்கு அண்மையில் ஒரு கொட்டிலில் விநாயகரை வைத்தார். இதனால் அவ்வழி செல்லும் எவரும் அச்சமின்றிப் பயணித்தனர். அத்துடன் புதன் கழிப் பாலத்தைக் கட்ட மேற்பார்வை செய்த ஆங்கிலேய பொறியியலாளர் ஜி.எம். பாசன் என்பவர் பாலத்திற்கருகிலிருந்த காணியில் பெரிய பங்களாவில் வசித்து வந்தார். பல தடவை யானை வடிவில் தோன்றித் தன்னை விக்கினங்களிலிருந்து விநாயகர் காப்பாற்றியதால் தாம் ஊரைவிட்டுச் செல்லும்போது தாம் இருந்த காணியைக் கைதடிப் பிள்ளையார் கோவிலுக்குத் தருமசாதனமாக அவர் கொடுத்துச் சென்றதை இன்றும் கைதடி மக்கள் நினைவு கூர்வர். புதன்கழிப் பாலத்திற்கு அருகிலிருந்த விநாயகருக்கு வட்டுக் கோட்டையிலிருந்து வயோதிபர் ஒருவர் நடந்துவந்து விளக்கேற்றி வழிபடுவார். அவர் உடல்நிலை தளர்ந்ததால் அப்பணியை நிறைவேற்ற முடியாமல் வருந்தியவேளை ஓரிரவு விநாயகர் அவர் கனவில் வந்து "வருந்தாதே நான் உன்னிடம் வருகிறேன்" எனக் கூறினார். மறுநாள் காலை கைதடிக்கு வந்த வயோதிபர் விநாயகரை இறுகத் தழுவி வணங்கி மெதுவாகத் தூக்கித் தனது உடுக்கு வளையில் வைத்துச் சுமந்து கொண்டு வட்டுக்கோட்டையில் வைத்து வழிபட்டார். அதுவே இன்று வட்டுக்கோட்டையில் "உடுக்குவளை பிள்ளையார் கோயில்" எனப் பெரிய கோயிலாகத் திகழ்கிறது.

ஒருமுறை கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலிற்கு அண்மையிலிருந்த காணியில் பெருமளவில் உப்பு விளைந்திருந்தது. அதனால் அந்த உப்பை அழிக்கும்படி அரசாங்கம் அறிவித்தது. ஆனால் அப்போதைய மணியகாரரான முத்துக்குமார சுவாமி முதலியார் அந்த உப்பை ஏழை மக்கள் அள்ள அனுமதித்து விட்டார். இதை அறிந்த வெள்ளைக்கார அரச அதிபர், முத்துக்குமார சுவாமி மணியகாரருக்கு எவ்வித முன்னறிவித்தலும் கொடுக்காது உப்பளத்தைப் பார்க்கத் திடீரென வந்துவிட்டார். முத்துக் குமார சுவாமி மணியகாரர் நாள்தோறும் காலை பிள்ளையார் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டுத்தான் தமது காரியத்தைத் தொடங்குவார். அன்றும் அரச அதிபரிடம் அனுமதி பெற்று ஆலயத்தில் வழிபாடாற்றும்போது, உப்பளத்தைப் பார்க்க அரச அதிபரின் வருகையை நினைத்து அச்சமுற்று "உன்னை நினைக்க நீ செய்யும் வஞ்சகத்தை என்னென்று சொல்லித் துதிப்பேன் விநாயகனே. பன்னொன்று கோடிகள் கரந்திட்டாலும் கண்ணின்று காப்பாய் கைதை நகர்க் காவலனே" என்ற இப்பாடலைப் பாடி மழை பெய்யுமாறு பிள்ளையாரை இரந்து நின்றார். என்னே! அற்புதம் கணப்பொழுதில் "சோ" எனப் பெருமழை சிலமணிநேரம் பொழிந்தது. மழை பெய்ததால் உப்பளத்தைப் பார்ப்பதில் பிரயோசனமில்லை என அரச அதிபரும் திரும்பிச் சென்றார்.

கைதடி விநாயகர் ஆலயம், பிள்ளையார், சிவன் என இரட்டைக் கருவறை கொண்ட ஆலயமாகத் திகழ்கிறது. இவ்வாறு இரட்டைக் கருவறைகள் கொண்ட ஆலயங்கள் அரிதாகவே காணப்படுகின்றன. இவ்வகையில் நல்லூர் கைலாசப் பிள்ளையார், நல்லூர் சிவன் கோயில், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், மல்லாகம் பழம்பிள்ளையார் என்பன இலங்கையிலும் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் தமிழகத்திலும் குறிப்பிடத் தக்கனவாகும்.

இரட்டைக் கருவறைகளுள்- வலப் பக்கக் கருவறையில் விநாயகப் பெருமானும், இடப்பக்கக் கருவறையில் சிவலிங்க உருவில்

*மனிதன் செய்யும் நற்செயல்களில் முதன்மையானது இறைவனை வணங்குவதாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமலிங்கஸ்வாமியும் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றனர். சுவாமிக்கு அண்மையில் பர்வதவர்த்தனி அம்பாளின் தெற்கு நோக்கிய சந்நிதி இருக்கின்றது. அம்பாள் சந்நிதியுடன் இணைத்து ஸ்ரீ வெங்கடேசப் பெருமானின் திருவுருவும் கிழக்கு நோக்கிப் பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளது.

1988ஆம் ஆண்டில் நடைபெற்ற புனராவர்த்தன கும்பாபிஷேகத்தின்போது, பர்வதவர்த்தனி அம்பாளின் புதிய சிலா விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பெற்றது. உள் வீதியில் வடக்குப் பக்கத்தில் வெட்டிய புதிய திருமஞ்சனக் கிணற்றுக்கு முன்பாக அமைக்கப்பெற்ற புதிய கோயிலில் பழைய அம்பாள் விக்கிரகம் இடம்பெற்றுள்ளது.

வசந்த மண்டபத்துக்கு மேற்கே உருவாக்கப்பட்ட கோயிலில் சிவகாமி அம்பாள் சமேத சிதம்பர நடராஜப்பெருமான் தாமிர விக்கிரகமாக அருள்பாலிக்கின்றார். தெட்சணாமூர்த்தி விக்கிரகத்தையும் இங்கே தரிசித்து நிறைவடையலாம்.

வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர், நவக்கிரகங்கள், நாகதம்பிரான்-வைரவர் ஆகியோருக்குத் தனிச் சந்நிதானங்கள் உண்டு. முதன் முதலில், பற்றைக்குட் கண்டெடுக்கப்பட்ட, தழும்புள்ள பிள்ளையார் சிலை, கொடித்தம்பத்துடன் பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளது.

தினமும் ஆறு காலப் பூசைகள் நடைபெறும் இக்கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் இரண்டு பிரம்மோற்சவங்களுக்கும் மேலாக, கந்தசஷ்டி விழா - சூரசம்ஹாரம், கஜமுகாசுர சம்ஹாரம், யமசம்ஹாரம் முதலிய பல திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன.

அற்புத விநாயகரான கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயம் சிறந்த தெய்வீகச் சூழலில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் தெய்வ சாந்நித்யம் நிறைந்துள்ளதற்கு அடையாளமாக மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம், சித்தர்களின் வருகை, அவர்களின் சமாதி என்பன ஆலயச் சூழலில் அமைந்துள்ளன. கடையிற் சுவாமிகள் அருளாசிபெற்ற ஆறுமுகம் என்பவரால் அமைக்கப்பெற்ற தீர்த்த மடத்தில் அவர் கடையிற் சுவாமிகளிடம் அருளாசிபெறும் படமும் இடம் பெற்றுள்ளது. மேலும் மார்க்கண்டு சுவாமிகள் தேர்த்திருவிழாவிலன்று அதிகாலை மூன்று மணிக்கே சென்று தேரை அலங்காரம் செய்யும் அடியவர்களுக்கு அறிவுரைகள்கூறி தாமே நேரில் நின்று கண்காணிக்கும் காட்சியும் உண்டு. இப்பணி சுவாமிகள் சமாதி ஆகும்வரை செய்த பணிகளிலொன்றாகும்.

விழாக்களுக்குக் குறைவில்லாத இவ்வாலயத்தில் பிள்ளையார் மகோற்சவம் சித்திரைப் பூரணையைத் தீர்த்தமாகவும் சிவன் மகோற்சவம் ஆடிப் பூரணையைத் தீர்த்தமாகவும் கொண்டது. மகோற்சவ காலத்தில், மகோற்சவம் தொடங்குமுன் பிரதம சிவாச்சாரியாரை குடை, கொடி, ஆலவட்டத்துடன் வீட்டிலிருந்து கோவிலுக்கு அழைத்து வருவதும் மகோற்சவம் நிறைவுற்றதும் அதே மரியாதைகளுடன் அவரை அழைத்துச் சென்று வீட்டில் விடுவதும் வேறொரு கோயில்களிலும் காணாத சிறப்பம்சமாகும். அதேபோல், தினமும் மகோற்சவம் தொடங்குவதற்கு முன்னரும், நடந்து முடிந்த பின்னரும் உற்சவத் திருமேனிகளுக்கு அபிஷேகங்கள் நடப்பதுவும் இங்கு வழமையாகும்.

**வீரகத்தி விநாயகரின் அண்மைக்கால அற்புதம்**

1995ஆம் ஆண்டு நவம்பர் 30ஆம் நாளன்று முன்னறிவித்தலின்றி இடம்பெற்ற வலிகாமம் இடப்பெயர்வு, அங்கு வாழ்ந்த மக்களின் நெஞ்சங்களில் என்றும் நீங்காது

*பாவங்களிலிருந்து விடுபடுவதற்கு சரியான பரிகாரம் இடைவிடாத தெய்வ சிந்தனையே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிந்திருக்கும் நிகழ்வாகும். இந்நிகழ்வினால் அங்கிருந்து புறப்பட்ட மக்கள் கால்போன திசையிலே சென்று, தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளிலும் அவற்றிற்கு அப்பால், வன்னி பெருநிலப்பரப்பிலும் குடியமர வேண்டிய நிலைக்குள்ளாகினர்.

அவ்வேளையில் கைதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சிலர் தஞ்சம் புகுந்ததுடன் இவ்வாலயத்துக்குச் சொந்தமான காணிகளில் அமைத்த கொட்டில்களிலும் தங்கியிருந்து நலிவுற்று வாழ்ந்தனர். வேதனையில் வெந்த மக்கள் தமக்கொரு விடிவுகாண விரும்பி, வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு நேர்த்தி வைத்தனர். அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு விரைவில் மீளச் செல்வதற்கு விநாயகப் பெருமான் திருவருள் செய்ய வேண்டுமெனப் பெருமானிடம் விண்ணப்பம் செய்தனர். தமது வேண்டுகோள் நிறைவேறுதற் பொருட்டு கோயில் நிர்வாகத்தினரின் அனுசரணையுடன் தாமும் நிதிதிரட்டி விசேட அபிஷேக ஆராதனைகள் செய்தனர்.

வேண்டுவார் வேண்டுவதை ஈயும் விநாயகருக்கு மேற்குறிப்பிட்ட ஆராதனை நிறைவுற்று ஒரு வாரம் முடிவதற்கு முன், எவரும் எதிர்பாராத சூழ்நிலை ஒன்று உருவாகியதன் விளைவாக, 1996 ஏப்ரல் 19ஆந் திகதி வெள்ளிக்கிழமை வலிகாம மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீண்டும் செல்லவேண்டுமென்ற அறிவித்தல் விடுக்கப்பட்டது. விநாயகரின் அற்புத சக்தியை வியந்த மக்கள் பெருமகிழ்வுடன் தமது சொந்த இடங்களுக்கு மீண்டும் சேர்ந்தமை வரலாற்றில் ஒரு முக்கிய செய்தியாகும். இதனைத் தொடர்ந்து அடுத்த வாரத்தில் ஆலய ஆண்டுப் பெருவிழா (பிரம்மோற்சவம் 1996 ஏப்ரல் 22ஆம் திகதி ஆரம்பமாகி, பன்னிரண்டு (12) நாட்கள் நடைபெற விநாயகப் பெருமான் நல்லருள் பாலித்தமை மறக்கவொண்ணா நிகழ்வாகும். இந்த அற்புத நிகழ்வைக் கண்டு அடியார்கள் மெய்சிலிர்த்த காட்சி கண்ணைவிட்டு நீங்காது.

## முனிவரை வீழ்த்திய இந்திரன்

தபோவனம் ஒன்றில் முனிவர் ஒருவர் தவம் புரிந்து வந்தார். அவரது தவ மகிமையால் “தனது பதவிக்கு ஆபத்து நேருமோ?” என்று அஞ்சினான் இந்திரன். எனவே, போர் வீரனின் வேடத்தில் முனிவரின் எதிரே வந்து வணங்கினான். அவரிடம் “ஸ்வாமி! இங்கு வந்ததும், எனது போர் வெறி மறைந்துவிட்டது. எனது வாளை இங்கேயே வைத்துவிட்டுப் போகிறேன். என் பெற்றோரிடம் விடைபெற்று வந்து உங்களுக்கு ஊழியம் செய்கிறேன். பிறகு இந்த வாளை அரசரிடம் ஒப்படைக்கிறேன். அதுவரை இது தங்களிடமே இருக்கட்டும்” என்றான். முனிவர் வாளை வாங்கி வைத்துக் கொண்டார். பிறகு அந்த முனிவருக்குத் தியானம், யோகம் எதிலும் புத்தி செல்லவில்லை. வாளின் நினைவே எப்போதும் முன் நின்றது. அடிக்கடி அதை எடுத்து சுழற்றி, வீசிப் போரிடுவதுபோல பாவனை செய்து மகிழ்வார்.

இதனால் அங்கிருந்த மிருகங்களும், பறவைகளும், சீடர்களும் அஞ்சினார்கள். அவரின் தவ வலிமை குன்றியது. இந்திரன் மகிழ்ந்தான். நமக்குத் தேவையற்ற பொருள் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் அதை நம்மிடம் வைத்துக்கொள்ளக் கூடாது.

-சக்தி-

*இறைவன் அருளால் காலப்போக்கில் நாம் விடும் தவறுகள் நம்மைவிட்டு அகலும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனிமாத வாராந்த நிகழ்வுகள்

03.03.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "வேலுண்டு வினையில்லை"

வழங்குபவர் :- திரு மா. வேதநாதன் அவர்கள்

(பேராசிரியர் - யாழ். பல்கலைக்கழகம்)

---

10.03.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "பக்தி வழிபாட்டில் அருணகிரி"

வழங்குபவர் :- திரு நி. பாபுதரன் அவர்கள்

(ஆசிரியர்)

---

17.03.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

24.03.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

31.03.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் பங்குனிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு வ. கணேசமூர்த்தி அவர்கள்

(இளை அதிபர்)

மதிப்பீட்டுரை :- திரு க. ஆனந்தராசா அவர்கள்

(இளை. அதிபர்)

231ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. *QD/82/NEWS/2017*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org